Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් ஒக்.28–நவ.03, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 431

## அதிகாரத்தை காப்பாற்றும் வியூகமும் கைப்பற்றும் தந்திரமும்



# ஆன்மீகம்

## ஓம்கார நாமம்



எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பிக்கும் போதோ, எழுதும் போதோ ஓம் என்றே இந்துக்கள் ஆரம்பிப்பர். ஓம் என்பது பிள்ளையார் சுழியின் பிரணவ ஆரம்ப வடிவமாகும். ஓம் என்பதற்குள் அகரம், உகரம், மகரம் ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஓம் என்பது சப்தப் பிரம்மம். அ-உ-அம் ஆகிய மூன்று எழுத்துக்களையும் இணைத்தால் ஓம் உண்டாகிவிடுகின்றது. 'அ'என்பது தொண்டையிலிருந்தும், 'உ' என்பது உள்நாக்கிலிருந்தும், 'அம், என்பது உதட்டினின்றும் வெளிப்படுகிறது. ஆனால் 'ஓம்' கார சப்தத்தை எழுப்பும் போது அதற்கான சக்தி நாவியிலிருந்து எழுந்து வெளிவருகிறது.

ஓம் என்பதை மெதுவாகவும், மூச்சை நிறுத்தி மெதுவாக உச்சரிக்க வேண்டும். இந்த சப்தம் ஆரம்பத்தில் மெதுவாகவும், இறுதியில் ஓங்கார மாகவும் இருக்க வேண்டும். மந்திர ஜபத்தின் ஆரம்பமே ஓம் என்பதாகும். ஸ்ரீ சக்கரத்தில் ஓம் மையமாக விளங்குகிறது.

ஆ; மனிதா உமது உடலுக்குள்ளும் 'ஓம்' என்ற எழுத்து உள்ளது. உனது இருதயம், மூளம், இரைப்பை, கருப்பை, சிறுநீர்ப்பை, மலக்குடல் ஆகிய உமது உடல் உறுப்புக்கள் அனைத்துமே 'ஓம்' என்ற ஒலியை எழுப்பும் வடிவத்துடன் உள்ளன என்பதை மறந்துவிடாதே.

சிலாபம்-க.பொ.புஷ்பராஜா.

## இம்மை மறுமை ஏற்றத் தாழ்வுகள்

உலகத்தின் சுகம் மிக அற்பமானது. மறுமையாகிறது பயபக்தி உடையோருக்கு மிகச் சிறந்ததாகும் என்று நபியே நீர் கூறுவீராக!

(அல்குர் ஆன் 4:77)

தங்களுடைய மார்க்கத்தை வீண் விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் ஆக்கிக் கொண்டவர்களை விட்டுவிடுவீராக அவர்களை இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றிவிட்டது.

(அல்குர்ஆன் 6:70)

மறுமையைவிட உலக வாழ்க்கையைக் கொண்டே நீங்கள் திருப்தியடைந்து விட்டீர்களா? இவ்வுலக வாழ்க்கையின் சுகம் மறுமையின் வாழ்க்கைக்கு எதிரில் மிக அற்பமானதாகும்.

(அல்குர்ஆன் 9:38)

இவர்களின் மீது அல்லாஹ்வின் கோபம் ஏற்படும். மேலும் அவர்களுக்கு மகத்தான வேதனையும் உண்டு. இது அவர்கள் மறுமையைவிட இவ்வுலக வாழ்வை விரும்பியதால் ஏற்பட்டதாகும்.

(அல்குர்ஆன் 16:106)

இவ்வாறு அல்குர்ஆன் இம்மை, மறுமை இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை விரிவாக எடுத்துக் கூறி எவர் மறுமைக்குப் பகரமாக இவ்வுலக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாரோ அவர் பெரும் நஷ்டமடைந்தவராவார் என்கிறது.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## ஊருக்கு உபதேசம்

உள்ளதை உள்ளபடி சொல்பவரும் சொல்லியதைச் செயலில் காட்டுபவருமே யோக்கியமுள்ள மனிதரென சமுதாயத்தில் மதிப்புப் பெறுவார். தன் முதுகு தனக்குத் தெரியாது என்பதற்கொப்ப தன்னுடைய குற்றங்கள் ஈனத்தனமான நடத்தைகள் என்பவற்றைப்பற்றிச் சிந்தியாது மனசாட்சிக்கு விரோதமான செயல்களைச் செய்துகொண்டு பிறருக்கு மாத்திரம் புத்தி சொல்லவும், அவர்களை வழிநடத்தவும் முயற்சிக்கும் சிலர் அதன் மூலம் தம்மைப் பிறர் மத்தியில் பெரிய மனிதராகக் காட்டிக் கொள்ளவும் முயல்வர். இன்னும் சிலர் அக்கிரமமான செயல்களைப் புரிந்துகொண்டு பிறரை மாத்திரம் சரியானவற்றைச் செய்யும்படி அறிவுறுத்துவர்.

இவர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள். இப்படிப்பட்டவர்களைக் குறித்துத்தான் கிறிஸ்துவின் வார்த்தை வடிவமாகிய திரு விவிலியம்.

"உன் கண்ணிலே உள்ள விட்டத்தை (துரும்பை) கவனியாது உன் சகோதரன் கண்ணில் உள்ள விட்டத்தைப் பார்ப்பதேன்?" 'உன் சகோதரனை நோக்கி உன் கண்ணில் இருக்கும் விட்டத்தை எடுக்க விடு' என்று நீ எப்படிச் சொல்லலாம்? வெளிவேடக்காரனே! முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்து எறி; பின்பு உன் சகோதரன் கண்ணிலுள்ள விட்டத்தை எடுக்க உனக்கு நன்றாகக் கண்தெரியும்" (மத்தேயு 7:3-6) என்று கூறுகின்றது.

ஆகையால் பிறரைத் திருத்துவதற்கு முன் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே திருத்திக் கொண்டு நல்வழியில் வாழ்வதே மனித தர்மத்திற்கும், இறைவனுக்கும் ஏற்ற வாழ்வாகும் என்பதை உணர்வோமாக.

அக்னஸ் சவரிமுத்து-வட்டகொடை.

## கவிதைப் போட்டி இல.431



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.11.2001

கவிதைப் போட்டி இல.431
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.428

### பரிசுக்குரிய கவிதை

### சிட்டுக்குருவி பேசுகிறேன்

"நாட்டிலும் யுத்தம்
காட்டிலும் யுத்தம்
அனாதைகளானது
நீங்கள் மட்டுமல்ல
நாங்களும் தான்!
படம் எடுத்து
பிரிந்த என் பெற்றோருடன்
சேர்த்து வையுங்கள்-
ப்ளீஸ்.-ப்ளீஸ்"

பர்ஸியா-கொட்டாரமுல்ல.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### யார் அறிவார்

தண்ணீரில் மீன் அழுதால்-அதன்
கண்ணீரை யார் அறிவார்
தனிமையில் நான் அழுதால்-என்
வேதனையை யார் அறிவார்.

த.தமயந்தினி-மன்னார்.

### புரியவில்லையே!

அந்த பட்ச்சிக்குத்
தெரிகிறது ஆபாசமென்று!
ஆனால்-இந்த
ஆறறிவுக்கு புரியவில்லையே...

எஸ்.பி.பாலமுருகன்-பதுளை.

### படமெடுத்தால்...

நீங்கள் படமெடுத்தால்
படப்பிடிப்பு
நாங்கள் படமெடுத்தால்
சிறைவாசம்

ஆ.அச்சுதன்-சேனையூர்.

### மலர்வு!

மெல்லிய பறவையே
சற்றே தள்ளி நில்
எங்கோ-சமாதானம்
மலரப்போகிறதாம்!
படமெடுக்க வேண்டும்.

மூக்கன் விஜயதீபம்-பசறை.

### வெளி விடுவதற்காக...

சிறிய விடையத்தையும்
உள்வாங்கும் நீ-ஏன்
சமாதானத்தின் தோற்றத்தை விட;
வன்முறையின் எளிச்சியை-அதிகம்
உள்வாங்குகின்றாய்...

ஜெ.தனேஸ்ராஜ்-மட்டக்களப்பு.

### அராஜக நாடகம்

ஆதிக்க வெறிகொண்ட
அமெரிக்கா ஆப்கானில்
சாதிக்க நினைக்கின்ற
'முடிவில்லா நீதியெனும்'
அராஜக நாடகத்தின்
உக்கிரத்தை உலகுக்குப்
புடம் போட்டுக் காட்டத்தான்
படமாக்குகின்றாயோ?

எம்.எச்.யுனைதீன்-ஏறாவூர்-06.

### மாற்றம்!

அழிவுகளையே
படம் பிடித்துக்
காலத்தைக்
கழித்துவிட்ட
குருவியிடம்-தன்
எழில் முகத்தைப்
படம் பிடிக்க
மொழிகிறதோ
குருவியிது!

ரேணுகா-
றிபாய்தீன்
ஏறாவூர்-2.

### நேற்று

தேர்தல் பிரசாரத்தை
ஒளிப்பதிவு செய்யும் நீ
தேற்றுவார் இன்றி
திகைத்துப்போய் நிற்கும்
குருவிக்கு தீனி போட
மாட்டாயோ?

ரி.பி.லதன்-வெள்ளவத்தை.

### எதிர்பார்ப்பு

மெஞ்ஞானத்தால் தேடினேன்!
வெண்புறாவே உன்னை
காணவில்லை-இப்போது
விஞ்ஞானத்தால் தேடுகிறேன்!
தென்படவில்லையே நீ
இன்னும் என் கண்ணில்!

என்.சுகுமாரன் சுபா-தலவாக்கலை.

### தேடுதல்!

வீடியோ கெமரா மூலம்
வித்தை காண முனையும் நீ
பெண்டகனை படம் பிடித்து
பெயர் எடுக்கப் போகிறாயா!
சமாதான புறாவை நீ!
அருகினிலே. வைத்துக் கொண்டு!
புலப்படாத ஒன்றுக்காக..!
போராட்டம் நடத்துகிறாயா?

மனோ கோபாலன்-
ஹப்புத்தளையூர்.

### இளைஞனே..!

அணுகுண்டுகளால்
அறுந்துபோன
ஆத்மாக்களைக்
கண்டு-நீயும்
அதிர்ந்துபோகாதேயென்று
அணைபோடுகிறேன்..
பார்க்காதே இளைஞனே...

ஷர்மிலா ஏ.எஸ்-அனுராதபுரம்.

## வாசக[ர்] சாலை

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

முரசு 429ல் இடம்பெற்ற அம்சங்கள் யாவும் சிறப்பாக இருந்தன. 'தாலாட்டும் தத்துவமும்' அம்சம் அருமையானதாக இருந்தது. கவியரசு கண்ணதாசன் அவர்களின் இனிய திரைப்படப் பாடல்களை இடை இடையே புகுத்திருந்தமை தனிச்சிறப்பை கொடுத்தது. மேலும் 'கதை எழுத சக்தி உள்ளவர்', 'வெற்றிக்கு வேண்டும் சுறுசுறுப்பு' ஆகிய இரண்டு ஆக்கங்களும் மிகவும் நன்றாக இருந்தன.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்-மட்டக்களப்பு.

நேயர்களின் மனங்களை கவர்ந்து வரும் இனிய முரசிற்கு பல கோடி நல் வாழ்த்துக்கள். ஆன்மீகத்தை அலங்கரித்து வரும் ஆக்கங்கள் அனைத்துமே நன்றாக அமைந்துள்ளது. சிறுகதைகள் அரசியல் நிலமைகள் யாவுமே தெளிவாக அறியத் தரும் முரசிற்கு நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

எஸ்.விஜி-டிக்கோயா.

உலகெங்கும் உலாவரும் தமிழ் இதழாய் எம் மக்களிடையே இதயத்தை கொள்ளை கொண்ட தினமுரசே! நாட்டில் நடக்கும் அன்றாட செய்திகளை சுவை குன்றாமல் சுந்தரத் தமிழில் நன்றாக அச்சேற்றி நாமறியத் தரும் நவரச ஏடான மக்கள் முரசே!

அன்றைய அரசியல், எதிர்கால செய்திகள், அண்டை நாட்டு அரசியல் ஆகியவற்றை அறியத் தரும் எமது இதழான தினமுரசே! கற்பனையால் வடிக்கும் கவிதைத்துளிகளை சுவை குன்றாமல் தந்து உலக மக்களின் மனங்களை வென்று வாசக உள்ளங்களை கவர்ந்திழுக்கும் மாபெருமேடு நீ மட்டுமே!

எட்வேட் நிஷாந்தன்-பெரிய நீலாவணையூர்-01.

முரசே! முழக்கத்தின் அரசே! தமிழ் வாசகர்களின் ஒளி விளக்கே! கடந்த வாரம் நீ சுமந்து வந்த 'தேன் கிண்ணப்பகுதி' அருமையிலும் அருமை. அதை விட நீ கொடுக்கும் 'இலக்கிய நயம்' தமிழின் மகத்துவத்தையும் அதன் விழுமியத்தையும் வெளிகாட்டிவிட்டது. என்றால் அது மிகையாகாது. உன் சேவை உலகத்து தமிழ் நெஞ்சங்களுக்கு தேவை என வாழ்த்தும் இவன்.

கே.உதயகுமார்-தலவாக்கலை.

### தரம்-நிரந்தரம்

முரசைக் கட்டியெழுப்பி பார்புகழ வைத்த பெருமை என்றும் அற்புதனையே சாரும். அவர், அகால மரணத்தை அடுத்து முரசு வெளிவருமா? என்று கேள்வி எழுந்தது.

அற்புதன் இறந்து சில வாரங்களின் பின் முரசு மறுபடி வர ஆரம்பிக்க, 'இன்னமும் எத்தனை நாளைக்கு வருமோ? என்று மறுபடி கேள்வி எழுந்தது.

ஆனால் அந்தக் கேள்விக் குறிகளை எல்லாம் ஆச்சரியக் குறியாக்கி வெற்றிநடைபோடுகிறாய். அரசியல் கட்டுரைகளில் முன்பிருந்த சூடு இப்போது குறைவுதான் இருப்பினும் உன் தரம் மட்டும் நிரந்தரமாக இருக்கிறது.

ஸ்ரீபன் ஜெயராஜ்,
ஸ்காபுரோ-கனடா.



என் உயிருக்கு உயிரான முரசே!
உன் வாரமொரு வரவினிலே தான்
என் மனம், என்றும்
மகிழ்வுடன் இருக்கின்றது.

நீ தாங்கிவரும் முத்தான ஆக்கங்கள் அனைத்தும் சூப்பர்! முரசே! முன் வைத்த காலை என்றும் பின் வையாது உந்தன் அற்புதப் பணி என்றும் தொடர வாழ்த்தும்

த.அஜந்தகுமார்-வதிரியூர்.

என் இனிய முரசே!

உன் அம்சங்கள் அனைத்தும் மிகவும் அருமை. எதைப் பாராட்டுவது என்று தெரியவில்லை. 'சினிவிசிட்' தொடர்கதைகள் 'லேடீஸ் ஸ்பெஷல்' அரசியல் கட்டுரைகள் போன்றவை அருமையிலும் அருமை.

முரசு தினம் வராதா என ஆவல் கொள்ள வைக்கும் உனது பணி மேலும் தொடர எமது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்.

எம்.ரஞ்சினி, கே.சோபனா, நெடுந்தீவு-02.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதா வது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங் கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## அதிபரின் சொந்தக்காரர்கள் உதவி ஆசிரியராக இருக்கக்கூடாதா?

தினமுரசு வாரமலரில் 'இன்னொரு தற்கொலைக்கு முன்னர்' என்ற தலையங்கத்தின் கீழ் பசறை பகுதியிலே இருக்கும் ஒரு தமிழ் வித்தியாலயத்தைப் பற்றி கோடிட்டு காட்டி இருந்தீர்கள். அப்பாடசாலை அதிபர் மீது பல குற்றச் சாட்டுக்கள் சாட்டப்பட்டிருந்தன. அப்பாடசாலையில் போதிய ஆங்கில ஆசிரியர் இருந்தும் அதிபருக்கு சொந்தக்காரரான ஒரு ஆங்கில ஆசிரியரை தேவைக்கு அதிகமாக எடுத்துள்ளார் என்று கூறப்பட்டிருந்தது.

அப்பாடசாலையில் மாணவர் எண்ணிக்கைப்படி 5 ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். புதிதாக இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியருடன் நான்கு ஆங்கில ஆசிரியர்களே உள்ளனர். இன்னும் ஒரு ஆங்கில ஆசிரியர் தேவையாக உள்ளது என்பதே உண்மை. அதிபரின் சொந்தக்காரர்கள் உதவியாசிரியராக இருக்கக்கூடாது என்று சட்டங்கள் ஏதாவது உண்டா? இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்களா? சம்மந்தப்பட்ட ஆசிரியர் அப்பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்து ஒரு மாதமே ஆகிறது. ஆனால் அவர் தாம் கற்பிக்கின்ற மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு நடத்துகின்றார். பாடசாலை சுவர்களிலே சித்திரங்கள் வரைந்துள்ளார். மண்டபங்களுக்கு பெயர் எழுதியுள்ளார். மேலும் பாடசாலை மண்டபங்களை அழகு படுத்தியுள்ளார். இவற்றை எல்லாம் அவர் எந்தவித கொடுப்பனவும் வாங்காமல் சேவையாகவே செய்துள்ளார்.

4 வருடங்களுக்கு முன்பு பதுளையில் நடந்த ஊவா மாகாண சாகித்திய விழாவிலே தாங்கள் குறிப்பிட்ட அதிபரும் ஆசிரியர்களும் சிறந்த கல்வி சேவைக்காக பாராட்டப்பட்டுள்ளனர் என்பதையும் தாங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். கடந்த வருடம் அகில இலங்கை மட்டத்தில் நடைபெற்ற தமிழ் மொழித்தின போட்டியிலே மேற்படி அதிபரால் பயிற்றுவிக்கப்பட்ட இரண்டு நிகழ்ச்சிகள் வெற்றியடைந்துள்ளன. இம்முறை அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டியிலும் கூட இந்த அதிபரால் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்த அதிபர் நிருவாகத்தைக் கொண்டு செலுத்துவதும் அல்லாது வாரத்துக்கு இருபது பாடங்களுக்கு மேல் கற்பிக்கின்றார். சனி ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாட்களிலும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடத்துகின்றார். இவரால் கற்பிக்கப்பட்ட தமிழ், சித்திரம், வரலாறு போன்ற பாடங்களில் 90%ற்கு மேற்பட்ட மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

*மாணவர் நலனில் அக்கறையுள்ள சில பெற்றோர்.*

## அதிபரும் ஆசிரியரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்

30.06.2001 தினமுரசில் உங்கள் பக்கம் பகுதியில் பசறை கல்வி வலயத்தில் பிரபல தமிழ் வித்தியாலயம் ஒன்றில் நடைபெற்ற பல விடயங்கள் பற்றி எழுதியுள்ளீர்கள். அதற்கு எனது நன்றியை தெரிவித்து கொள்வதோடு பசறை என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் கோணக்கல தமிழ்வித்தியாலயம் என்று குறிப்பிடப்படவில்லை. எதுவாக இருந்தாலும் கோணக்கல அதிபர் பெரும் அதிர்ச்சியாகியுள்ளார். எனது பிள்ளைகளும் அதே பாடசாலையில் தான் கல்வி கற்கின்றார்கள் அவர்களுக்கும் மற்றும் எந்தவொருபிள்ளைகளுக்கும் இப்படியொரு நிலை ஏற்படக் கூடதென்பதே எனது ஆசை. மேலும் இந்த சம்பவத்தை உங்களுக்கு தந்தவருக்கும் இதை பிரசுரித்த உங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இப்படிப்பட்ட உண்மைச் சம்பவங்களை பிரசுரித்து தவறான வழியில் செல்லும் ஆசிரியர்களையும், மாணவ மாணவிகளையும் நல்ல வழிக்கு கொண்டுவர முடியுமென்று நம்புகிறேன். கோணக்கல தமிழ் வித்தியாலய அதிபரும் ஆசிரியர்களும் மற்றும் மாணவர்களும் இனிமேலாவது பொறுப்பாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இங்கு பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டம் மீண்டும் ஆரம்பிக்கப் பட வேண்டும். 3 வருடமாக பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டம் கூட்டப்படவில்லை. உடனடியாக கூட்டப்பட வேண்டும்.

***எஸ்.கந்தசாமி-கோணக்கல குரூப்-பசறை.***

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

# புலிகளுடன் மாத்திரமே பேசவேண்டுமென தமிழ்க்கட்சிகள் கூட்டு ஒப்பந்தம்

## தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை மீறப்படும் செயல் என ஈ.பி.டி.பி. கண்டனம்

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படும்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மாத்திரமே பேச்சு வார்த்தை நடத்தப்படவேண்டுமென்று 4 தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு கூறியிருப்பதை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) கண்டித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய 4 கட்சிகளும் விடுத்திருக்கும் கூட்டறிக்கையில் எதிர்காலத்தில் இனப்பிரச்சனை தொடர்பாக நடத்தப்படும் எந்தவொரு பேச்சு வார்த்தையும் விடுதலை புலிகளுடன் மாத்திரம் நடைபெறவேண்டுமென்பதை தமது கூட்டணியின் கருத்தென தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழ் தேசிய பிரச்சனையை சர்வதேச மயப்படுத்தப்பட்டதற்கு புலிகளின் தியாகங்களே முக்கிய காரணமாக இருந்துள்ளது. தமிழ் மக்களின் உரிமைகளையும், அபிலாஷைகளையும் வன்முறையால் ஒடுக்கி விடமுடியாது என்பதனை உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் உணரவைத்தவர்கள் புலிகளே.

எனவே இனப் பிரச்சனை குறித்த பேச்சுவார்த்தைகள் புலிகள் உடன் மாத்திரமே இடம்பெறவேண்டும் என்பது தமது நிலைப்பாடாகும்' என்று தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த நிலைப்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கும் ஈ.பி.டி.பி.இது தேர்தலில் மக்களின் வாக்குகளை கவரவேண்டுமென்ற நோக்கத்தில் புலிகளின் ஆதரவு தமது இருப்பதாகக் காட்டிக்கொள்ள எடுக்கப்பட்ட ஒரு முயற்சி என்றும் இது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை மறுக்கும் செயலென வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'4 தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக்கு பகிரங்கமாக அச்சுறுத்தல் விடுத்துள்ளது. தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளை பூரணமாக திருப்திப்படுத்தக்கூடியதும் நிறைவேறக்கூடியதுமான அரசியல் ஏற்பாட்டை யுத்தம் தொடருவதன்மூலம் எட்ட முடியாது. தொடர்ந்தும் உயிர், உடமை இழப்புக்களையும் இடம் பெயர்வுகளையும் சந்தித்து வரும் மக்கள் துயரமான வாழ்வுக்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எனவே யுத்தம் நிறுத்தப்படவேண்டும்.

தமிழ் இனத்தின்மீது பாகுபாடு காட்டும் பேரினவாத போக்கைவிடவும் எமது இளைஞர்கள் மீது போரைத் திணிக்கும் ஆபத்து வலுப்பெற்றுள்ளது. இது சொந்த மண்ணிலிருந்தும், வாழ்விடங்களிலிருந்தும் மக்களை வெளியேற்றும் நிலைவரை சென்றுள்ளது. எனவேதான் தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளை பாதுகாக்க பாடுபடவேண்டியுள்ளது' என ஈ.பி.டி.பி. விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு புலிகள் தொடர்பில் கடைபிடித்து வரும் நிலைப்பாடு, இவை கூட்டுச்சேர்ந்திருக்கும் பிரதான கட்சியான ஐ.தே.க.யின் தென்னிலங்கை வாக்குவங்கியில் சேதத்தை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் காரணமாக தமிழ்க் கட்சிகளின் புலி ஆதரவுக் கருத்துக்களை சிங்கள ஆங்கில ஊடகங்களுக்கு அடக்கி வாசிக்குமாறு ஐ.தே.க. தலைமை கூட்டணியைக் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். மக்களுக்கு பாடம் புகட்டும் எண்ணத்தை

### புலிகள் கைவிடவேண்டுமென உலக தமிழர் பேரவை கோருகிறது

யாழ். மக்களுக்கு பாடம் புகட்டும் எண்ணத்தில் குடாநாட்டைக் கைப்பற்ற புலிகள் முனைவார்களானால் யாழ்ப் பாணம் இடிந்த சுடுகாடாகிவிடும் என்றும் அதனால் புலிகள் அந்த எண்ணத்தை கைவிடவேண்டுமெனவும் உலகத் தமிழர் பேரவை கேட்டுள்ளது.

இலண்டனில் இருந்து செயற்படும் இந்த அமைப்பு விடுத்திருக்கும் பகிரங்க வேண்டுகோளில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாக கூறப்படும் கூற்று குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய கட்டளையைமீறி யாழ். நகர் திரும்பிய மக்கள் அனைவருக்கும் பாடம் புகட்டுவேன் என புலிகளின் தலைவர் பிரபாகரன் அன்ரன் பாலசிங்கத்திடம் கூறியதாக இலண்டனிலிருந்து வெளியான தகவல் குறித்தே உலகத் தமிழர் பேரவை விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்து வெளிநாடுகளில் வசிக்கும் யாழ்.மக்களின் உறவினர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## அர்ஜுன பொ.ஐ.மு.வில்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க பொதுஜன ஐக்கியமுன்னணியில் இணைந்து கொண்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியிடமிருந்து கட்சி அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்ட இவர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு

பெரும்பாலான கட்சிகள் தமது வேட்பு மனுக்களை இன்னமும் தாக்கல் செய்யாத நிலையிலுங்கூட தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

பொலிஸ் தலைமையகத்தில் அமையப் பெற்றுள்ள தேர்தல் கண்காணிப்பு நிலையத்திற்கும் சுயாதீன அமைப்புக்களால் நிறுவப்பட்டிருக்கும் தேர்தல் வன்முறை அவதானிப்பு நிலையங்களுக்கும் நாளாந்தம் பல முறைப்பாடுகள் கிடைத்தவண்ண முள்ளன.

இதேவேளை கடந்த செவ்வாய்கிழமை அதிகாலை கொழும்பு கோட்டையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிக்கொத்தா கட்டடத்தின்மீது சிறிய குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

இதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை. கட்டடத்திற்கு சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

## வடக்கு-கிழக்கில் மேலும் 5000 தொலைபேசி இணைப்புகள்

தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தும் புதிய திட்டமொன்றின்கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஏழு மாவட்டங்களில் 5000 புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் கிராமங்களில் 1000 பொதுத் தொலைபேசி நிலையங்களையும், நவீன வசதிகளுடன் கூடிய 25 டெலி நிலையங்களையும் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கில் மாத்திரம் இந்த வருட ஆரம்பம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை சுமார் 24000 பேர் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்துள்ளனர். இந்த மாவட்டங்களில் ஏற்கனவே 31 ஆயிரம் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. வெகு விரைவில் மேலும் 5000 தொலைபேசிகள் வழங்கப்படவுள்ளன.

## பயங்கரவாதத்துக்கு எதிராக கனடாவில் புதிய சட்டமூலம்!

பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடை செய்யும் விதத்தில் விரிவான சட்ட ஏற்பாடுகள் கனேடிய பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளன.

150 பக்கங்களைக் கொண்ட இந்த சட்டமூலம் பொலிஸாருக்கு விரிவான அதிகாரங்களை வழங்குகின்றது. தொலைபேசிகளை ஒற்றுக் கேட்கவும், இணையத் தொடர்பாடல்களை இடைமறித்துப் பார்க்கவும் இடமளிக்கிறது. இதன் மூலம் மோசமான தண்டனைகளை வழங்க முடியும்.

நகல் சட்டத்தில் பயங்கரவாத இயக்கங்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. எவ்விதமாக ஒரு நிரலைத் தயாரிக்க வேண்டுமென்ற விதிகள் அதிலுள்ளன. பயங்கரவாத அமைப்புக்களின் பெயர்களை புதிதாக சேர்க்கவும் நிலைமை மாற்ற மடையும்போது பெயர்களை நீக்கிவிடவும் முடியும். கனடாவின் சட்டத்துறையினர் இன்றுவரை பயங்கரவாதிகள் எவரென்பதையோ விடுதலைப் போராளிகள் எவரென்றோ வரையறை செய்வதைத் தவிர்த்து வந்தனர். ஆனால் இந்த புதிய சட்டமூலத்தின் பிரகாரம் பயங்கரவாதிகளுக்கான கனடாவின் வரைவிலக்கணம் வெளியிடப்படவுள்ளது.

## கனடாவில் கைது செய்யப்பட்டவர்களுள்

### பலர் நாடுகடத்தப்படலாமென சந்தேகம்

கடந்த 18ம் திகதி வியாழக்கிழமை கனடாவின் டொரன்டோ பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது 51 இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அன்றைய தினம் அதிகாலை 2 மணி முதல் 6 மணிவரை 400க்கும் மேற்பட்ட பொலிஸாரும் குடிவரவு அதிகாரிகளும் இணைந்து நடத்திய இந்தச் சுற்றிவளைப்பின்போது கனடாவில் செயற்படும் இரண்டு தெருச் சண்டை குழுக்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களே கைதாகினர்.

ஏ.கே. கண்ணன் கோஷ்டி மற்றும் வி.வி.ரி.குழு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து துப்பாக்கிகள் மற்றும் பல கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 6 மாதகாலமாக இவர்களது நடமாட்டங்களை தீவிரமாக அவதானித்து வந்த கனேடிய பொலிஸார் ஒரே இரவில் இவர்கள் அனைவரையும் கைது செய்திருக்கிறார்கள்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைக்கு Non-Stop Project-1050 என பெயரிட்டிருந்தனர். பொலிஸாரினால் குறிவைக்கப்பட்ட மேலும் 9 பேர் தலைமறைவாகிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களுள் 32 பேர் நாடுகடத்தப்படலாமென கனேடிய செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிஸ் அதிகாரிகளின் திடீர் இடமாற்றங்கள் ரத்து

### அரச உடமைகளை தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தவும் தடை

பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் பொலிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சகல இடமாற்றங்களையும் உடனடியாக இரத்து செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா அரசாங்க உடைமைகளை தேர்தல் பணிக்காக பயன்படுத்துவதை தடைசெய்யும் உத்தரவொன்றை பிறப்பித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 17வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தின் பிரகாரம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படும் வரை குறிப்பிட்ட சட்ட வரைவின்கீழ் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தயானந்த திஸாநாயக்கா இந்த உத்தரவை பிறப்பித்திருக்கிறார்.

இதன்படி தேர்தல் அறிவிக்கப்பட்டதின்பின்னர் பொலிஸ் தலைமையகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சகல இடமாற்றங்களும் ரத்துச் செய்யப்படுவதுடன் அரசாங்க திணைக்களத் தலைவர்களின் இடமாற்றங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு அரசாங்கத்துக்குச் சொந்தமான அசையும், அசையா பொருட்கள் எதையும் எந்தவொரு அரசியல் கட்சியும் தமது தேர்தல் பிரசார பணிக்காக பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக அரச ஊடகங்கள் கட்சி சார்பின்றி செயற்படவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

அரசாங்க வாகனங்களையும், கட்டடங்களையும் பரிபாலிக்கும் தகுதிவாய்ந்த அதிகாரிகள் இந்த உத்தரவு தொடர்பில் பொறுப்புடன் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

## துறைமுக வளவில் இருந்து விமான எதிர்ப்பு ரவைகள் மீட்பு

கொழும்பு துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த வெற்று எரிபொருள் பரல் ஒன்றிற்குள் இருந்து விமான எதிர்ப்பு துப்பாக்கி ரவைகள் 7 கைப்பற்றப்பட்டுள்ளன.

துறைமுகத்துக்குள் நடத்தப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையொன்றின்போது இந்த ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை இங்கு எதற்காக கொண்டுவரப்பட்டன என்று விசாரணைகள் நடைபெற்றுவரும் அதேவேளை இவை மீட்கப்பட்ட தினமான ஞாயிறன்று துறைமுக வளவில் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஏதேனும் காரணத்தைக் கூறி கப்பல் காப்புறுதிக் கட்டணங்களை அதிகரிக்கக் காத்திருக்கும் வெளிநாட்டு காப்புறுதிக் கம்பெனிகளுக்கு இத்தகைய சிறிய சம்பவங்கள்கூட வாய்ப்பாக அமைந்துவிடலாம் என்று துறைமுக அதிகார சபை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## தேர்தல் பணிகளில் ஈடுபட 6 அமைப்புக்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்குத் தடை

எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது 6 அமைப்புக்களைச் சேர்ந்த அதிகாரிகளை தேர்தல் பணிகளில் பயன்படுத்த வேண்டாமென தேர்தல் ஆணையாளர் சகல தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயம், அமைச்சரவை அலுவலகங்கள் அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாளரின் அலுவலகங்கள் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளையே தேர்தல் பணிகளில் பயன்படுத்த வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பித்திருப்பின் அவற்றை நிராகரிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் பொதுமக்கள் டக்ளஸுடன் சந்திப்பு

வவுனியா சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வவுனியா, மன்னார் பிரதேச மக்களின் பிரச்சனைகளை கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் கேட்டறிந்து கொண்டார்.

அமைச்சரை சந்திப்பதற்காக மன்னார் உட்பட தூர இடங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கெடுபிடிகள், வேலைவாய்ப்பு சார்ந்த பிரச்சனைகள், நிவாரண கொடுப்பனவுகள், கோயில், சமூக சேவை அமைப்புக்களுக்கான நிதி உதவிகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து அமைச்சரிடம் முறைப்பாடுகளும் கோரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

பல பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டுள்ளது. ஏனையவை குறித்து பின்னர் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் வாக்குறுதியளித்துள்ளார்.

## புலிகளின் பகுதிகளில் 'எச்சரிக்கை ஒலி'

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டங்களை அவதானித்தால் விசேட சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்படுகிறது.

மட்டக்களப்புக்கு மேற்கேயுள்ள படுவான்கரைப் பகுதியில் இந்த எச்சரிக்கை ஒலி எழுப்பும் மணி பொருத்தப்பட்டுள்ளது.

சமீப நாட்களில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதல்களினால் புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தொடர்ந்து இடம்பெற்றுவரும் இத்தகைய சம்பவங்களைத் தடுப்பதற்காகப் புலிகள் பல முயற்சிகளை எடுத்திருந்தார்கள். மண்முனைத்துறைப் பாதையையும் வவுணதீவுப் பாதையையும் சில மாதங்களுக்கு முன்னர் தடைசெய்துவிட்டார்கள்.

படுவாங்கரையில் சைரன் ஒலி எழுப்பும் மணியை பொருத்தியுள்ளனர். சந்தேகத்திற்கிடமான எவரினதும் நடமாட்டத்தை அவதானித்தால் உடனே எச்சரிக்கை ஒலி எழுப்பப்படுகிறது. எச்சரிக்கை ஒலி கேட்டவுடன் ஆங்காங்கே நிற்கும் புலி உறுப்பினர்கள் அணிதிரண்டுவிடுகிறார்கள். கடந்த வாரமும் இத்தகையதொரு சம்பவம் புலிகளின் பகுதியில் இடம்பெற்றது.

## படையினரின் இரு டோரா படகுகள் சேதமாக்கப்பட்டு

### தமது தரப்பில் ஐந்துபேர் பலியானதாக புலிகள் அறிவிப்பு

முல்லைத்தீவு கடற்பரப்பில் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற கடற்சமரில் கடற்படையினரின் இரு அதிவேக டோரா பீரங்கிப் படகுகள் தகர்க்கப்பட்டு முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதலில் தங்கள் தரப்பில் ஒரு கடற்கரும்புலி உட்பட ஐந்து புலிகள் உயிரிழந்ததாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகப் புலிகள் விடுத்த அறிக்கையில்;

காலை 9 மணிமுதல் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரை வழிமறித்த கடற்புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

நண்பகல் 12.30 மணி வரை நடைபெற்ற மூன்றரை மணிநேரச் சமரில், இரு அதிவேக டோரா பீரங்கிப் படகுகள் தாக்குதலுக்கிலக்காகி முற்றாகச் சேதமடைந்துள்ளன. இதையடுத்து அப்பகுதிக்குக் கடற்படையினருக்கு உதவிக்கு வந்த குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ச்சியான தாக்குதலை நடத்திக் கடற்படைப் படகுகள் பின்வாங்கிச் செல்ல ஆதரவளித்தன.

இந்தச் சமரில், கடற்கரும்புலி மேஜர் ரோசா (கணேசன் கற்புக்கரசி-யாழ்ப்பாணம்), கப்டன் செந்தளிர் (இசிடோர் மேரிலூட்ஸ்-யாழ்ப்பாணம்), மேஜர் சிவா (வேலாயுதம் தயாபரன்), லெப்.வினோதன் (யோகேஸ்வரன் திலீப்குமார்-கிளிநொச்சி), கப்டன் செல்லப்பன் (இராமையா மகேந்திரன்-வவுனியா) ஆகியோர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## கிராமசேவகரின் கொடுப்பனவு பிரச்சனையால்

### 119 அகதிக் குடும்பங்களுக்கு இரண்டுமாத நிவாரணமில்லை

திருகோணமலை-நிலாவெளி அகதிகள் நலன்புரி நிலையத்தில் உள்ள 119 குடும்பங்கள் கடந்த இரண்டு மாத காலமாக நிவாரணப் பொருட்கள் கிடைக்காத நிலையிலுள்ளார்கள்.

அகதிகளுக்கான உணவுப் பொருட்கள் ப.நோ.கூ. சங்கத்தில் தயார் நிலையில் உள்ள போதும் அவற்றை நிலாவெளி அகதிகள் நலன்புரி நிலையத்திற்கு எடுத்துச் சென்று விநியோகிக்கும் கிராமசேவகர் முன்வரவில்லை என்பத தெரியவருகிறது.

நிலாவெளியிலுள்ள பாதுகாப்புத் தரப்பினரிடம் அனுமதி பெற்று அகதிகளுக்கான உணவுப் பொருட்களை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து எடுத்துச் சென்று விநியோகிக்க தனக்கு இரு நாட்களுக்கான மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என கிராம சேவகர் கோரிவருகிறார்.

பிரதேச செயலகமோ, கூட்டுறவுச் சங்கமோ அல்லது அகதி மக்களோ தனக்கு ஏற்படும் இரு நாட்களுக் கான செலவுகளையும் தர முன்வந்தால் தான் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து அனுமதி பெற்று நிவாரணப் பொருட்களை விநியோகிக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களில் பருப்பு, தேங்காய் எண்ணெய், உப்பு, அரிசி என்பனவே கிடைக்கின்றன.

தனிநபர் ஒருவருக்கு ஏற்படும் இரண்டுநாள் மேலதிக செலவு காரணமாக 119 குடும்பங்கள் இரண்டு மாதங்களாக நிவாரணமின்றி வாடுகின்றார்கள்.

# முரசம்

## சேறு பூசுவதை விடுத்து கொள்கைத் திட்டங்களை விளக்குங்கள்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

பொதுத் தேர்தலுக்கான அறிவிப்ப வெளியானதில் இருந்து சகல அரசியல் கட்சிகளும் தமது எதிர் தரப்புகளை தாறுமாறாக கண்டித்து பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளன. தினசரி அறிக்கைகளை விடுத்து திட்டித் தீர்க்கின்றன.

தொலைக்காட்சிகளில் தேர்தல் தொடர்பாக நடைபெறும் விவாதங்களை அவதானிக்குமிடத்து ஒட்டுமொத்தமாக சேறு பூசும் வாய்த்தர்க்கங்களைத் தவிர அவற்றில் வேறெதனையும் காண முடியாதுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்சவுக்கும் அமைச்சர் மங்கள சமரவீரவின் இணைப்புச் செயலாளர் ஒருவருக்கும் இடையிலான வங்கிக் கணக்கொன்றைப்பற்றி அறிக்கைகள் வெளியாகின்றன.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயகவின் வீடொன்றை பற்றிய பிரசாரம் புகைப்படங்களுடன் முன்னெடுக்கப்படுகின்றது. நைல் நதிக்கரையில் நிருமாணிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் மற்றொரு மாளிகையைப்பற்றி எதிரணி ஆவேசமாக முழங்கி வருகின்றது.

இதுபோன்று இன்னும் ஏராளமான குற்றச்சாட்டுக்கள் பரஸ்பரம் சுமத்தப்படுகின்றன.

சகல அரசியல் கட்சிகளும் மறுதரப்பின் மீது சேறு பூசுவதை மட்டுமே 'தேர்தல் பிரசாரம்' என எண்ணி செயற்படுகின்றன.

தமது கட்சியின் கொள்கைகள் எதிர்காலச் செயற்திட்டங்கள், கொழுந்து விட்டெரியும் பிரச்சனைகளுக்கு அவற்றின் தீர்வுகள் என்று உருப்படியாக எதனையும் மக்கள் முன் எடுத்துரைக்காது வெறுமனே மறுதரப்புக்கு சேறு பூசுவதென்பது இந்த அரசியல்வாதிகளின் வங்குரோத்துத்தனத்தையே புலப்படுத்துகின்றது.

மக்களிடம் தைரியமாக முன்வைக்கும்படியான செயற்திட்டங்கள் எதுவும் இல்லாததால்தான் தமது எதிர்தரப்பின்மீது சேறு பூசி தம்முடைய பலவீனத்தை மறைக்க இந்த கட்சிகள் முனைகின்றனவோ என்று நினைக்க வேண்டியுள்ளது.

எந்தக் கட்சியின் கொள்கைத் திட்டம் நாட்டுக்கு மிகவும் ஏற்றது என்ற அடிப்படை விடயம்தான் வாக்குச் சாவடிக்கு செல்லும் மக்களின் சிந்தனையில் இருக்க வேண்டும்.

ஆனால் எமது நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களை செவிமடுத்த ஒருவரது சிந்தனை முழுவதிலும் யாருடைய வங்கிக் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது? யாருக்கு எங்கேயெல்லாம் மாளிகைகள் இருக்கின்றன? போன்ற குழப்பகரமான விடயங்கள்தான் இருக்கப் போகின்றன.

இவற்றை வைத்துக்கொண்டு ஒரு வாக்காளனால் சரியான முடிவை எடுக்க முடியாது!

எனவே ஒவ்வொரு அரசியல்வாதியும் தங்கள் பிரசார நடவடிக்கைகளின் போது தமக்கென ஏதும் கொள்கை கோட்பாடுகள் இருப்பின் முடியுமான வரையில் அவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்வதில் ஆர்வம் காட்ட வேண்டும்!

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# அதிகாரத்தை காப்பாற்றும் வியூகமும் கைப்பற்றும் தந்திரமும்




**எம்.பி.எம். பர்ஸான்**

அடுத்து வரும் ஓரிரு தினங்களில் இரண்டு பிரதான கட்சிகளும் தமது தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிக்கவுள்ளன. ஜே.வி.பி ஆண்டு முழுவதும் பொதுக்கூட்டங்களை நடத்தும் கட்சி என்பதால் தேர்தலுக்கென்று விசேடமாக கூட்டம் நடத்தும் தேவை அந்த கட்சிக்கு கிடையாவிட்டாலும் பெருந்தொகை செலவில் மேடைகள் அமைத்து மக்களை கவர்ந்திழுக்கும் மொழிநடையில் ஜே.வி.பி.தலைவர்கள் உரையாற்றி வருகிறார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணியை பொறுத்தவரையில் பாரிய அரசாங்க இயந்திரத்தின் உதவியுடன் அதன் பிரசாரப்பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. 17ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டத்தின்மூலம் தேர்தலுக்காக அரச உடமைகளை பயன்படுத்துவது சட்ட விரோதமானதென தேர்தல் ஆணையாளர் கூறிவருகின்றபோதும் அரச ஊடகங்கள் எதிர்க்கட்சியினரை மிக மோசமாக விமர்சிக்கும் பணியை இன்னும் நிறுத்தியதாக இல்லை.

வழமை போலவே இம்முறையும் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட இரண்டு நாட்களுக்குள் அரசாங்க ஊழியர்களுக்கு 1200 ரூபா இடைக்கால கொடுப்பனவு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. 900க்கும் மேற்பட்ட கைத்தொழில் மூலப் பொருட்களுக்கான வரி நீக்கப்பட்டது. ஓய்வூதியக் கொடுப்பனவு 750 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதுடன் சுமார் 40 ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் நிரந்தர அரச சேவையில் உள்வாங்கப்பட்டனர். இவற்றுடன் மேலும் பல சலுகைகளை தருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின்மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் உடனடிப்பிரச்சனைகளில் ஒன்றான மின்சார வெட்டு படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றது. அநேகமாக இம்மாத இறுதிக்குள் அல்லது நவம்பர் முதல் வாரத்துடன் இந்தப் பிரச்சனை இப்போதைக்கு முழுமையாக தீர்க்கப்படலாம்.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் இதேபோன்று பொருளாதார சலுகைகள் குறித்து ஆசை வார்த்தைகளை தாராளமாக முன்வைக்க ஆரம்பித்துள்ளது. அரசாங்கம் வழங்கும் 1200 ரூபா கொடுப்பனவு ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது முன்வைத்த யோசனை என்று அதற்கும் ஐ.தே.க. உரிமை கோரியுள்ளது. கைத்தொழிலாளர்களுக்கு மேலும் பலசலுகைகளை வழங்கவுள்ளதாகவும், வறுமை நிவாரண செயற்திட்டம் விரிவுபடுத்தப்படுமென்றும், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுப்படுத்தப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

பொதுவாகவே இத்தகைய கவர்ச்சிகரமான வாக்குறுதிகளும் சலுகைகளும் எல்லா தேர்தல்களின் போதும் சகல தரப்புக்களாலும் முன் வைக்கப்படுவது வழக்கம். ஆனால் இலங்கை அரசியலைப் பொறுத்த வரையில் வெறுமனே 'மேற்பூச்சு' சலுகைகளால் அல்லது அவை குறித்த வாக்குறுதிகளுடன் மாத்திரம் தேர்தல் களத்தில் இறங்க முடியாத தர்ம சங்கடத்தில் பிரதான கட்சிகள் இருக்கின்றன. ஆட்சிக்கு வந்த பின்னர் செயற்படுத்துகிறார்களோ இல்லையோ அது வேறு விடயம். ஆனால் எல்லோரும் தம்பங்குக்கு 'இனப் பிரச்சனை தீர்வு' பற்றியும் கதைத்தாக வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படுகின்றார்கள்.

இந்தப் பிரச்சனையை இதற்கு முன்னைய காலங்களில் அரசியல் கட்சிகள் பயன்படுத்திய விதத்திற்கும் இம்முறை தேர்தல் பிரசாரத்தின்போது இதனை கையாளும் விதத்திற்கும் இடையில் தெளிவான வித்தியாசத்தை அடுத்து வரும் நாட்களில் உணரக் கூடியதாக இருக்கும்!

இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு குந்தகல் நேராத விதத்தில் உச்சகட்ட அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்போவதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கின்றார்.

இனப்பிரச்சனைக்கு புதிய அரசியல் யாப்பொன்றின்மூலம் சமாதானத் தீர்வைக் காணும் தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும் அடுத்த தேர்தலில் பெரும்பான்மை பலம் கிடைத்தால் தனது பதவிக்காலம் முடிவடைவதற்குள் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதாக திருமதி குமாரதுங்க கூறியிருக்கிறார்.

இம்முறை தமிழ்க்கட்சிகள் பலவும் ஐக்கிய தேசியக் கட்சியை சூழ்ந்திருப்பதால் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பாக உரத்த குரலில் பேச வேண்டிய கட்டாயம் அந்தக் கட்சிக்கு இருக்கின்றது. தம்மோடு கூட்டுச் சேர்ந்திருக்கும் தமிழ்க் கட்சிகளை காப்பாற்றுவதற்காகவேனும் சிறுபான்மை சமூகத்தினரை குளிர்விக்கும் வாக்குறுதிகளை வழங்க வேண்டிய நிலையில் ஐ.தே.க. இருக்கின்றது. ஆனால் அதுவே மறுபுறத்தில் ஆபத்தாக முடிந்து விடாமல் பாதுகாக்கும் தேவையும் அவர்களுக்கு இருக்கிறது. அதாவது ஐ.தே.க. தமிழ்க் கட்சிகளின் கூட்டை ரணில்-பிரபாகரன் கூட்டு என்று அரச தரப்பு தீவிர பிரசாரம் செய்து வருகின்றது. இந்த பிரசாரத்துக்கு வலு சேர்ப்பது போலவே தமிழ்க்கட்சிகளும் தமது சகல விடயங்களிலும் புலிகளின் பெயரையே முன்னிறுத்துகின்றன. எனவே இது அரசாங்கத்தின் பிரசாரத்துக்கு மேலும் வசதியாக உள்ளது. எப்படியிருந்தாலும் தமிழ்க் கட்சிகளுக்கு அரசாங்கத்தின் இந்த பிரசார தந்திரத்தை முறியடிக்க உதவ முடியாது. தமிழ்க் கட்சிகளுக்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்பில்லை என்று ஐ.தே.க. கூறுமானால் அந்தக் கட்சிகளின் அடிப்படையே இல்லாது போய்விடும். ஏனெனில் அவற்றின் ஒரே மூலதனம் புலிகள் மீதான தமிழ் மக்களின் அபிமானம்தான். மறுபுறத்தில் இந்த எண்ணக்கரு சிங்கள மக்கள் மத்தியில் வளர்வதில் ஐ.தே.க.வுக்கு பாதிப்பு இருக்கிறது. பொதுஜன ஐக்கிய முன்னணிக்குப் போல ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிங்கள பௌத்த பாரம்பரியத்தைக் கொண்ட வாக்கு வங்கியொன்று இருக்கின்றது. அதனை பாதுகாக்கும் தேவையும் அந்தக் கட்சிக்கு இருக்கிறது.

இதே தர்மசங்கடம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வேறுவிதத்தில் இருக்கின்றது. ஐ.தே.க.-புலி கூட்டு பற்றி பேசும் போது எஞ்சியுள்ள சிறுபான்மை வாக்குகளையும் இழந்து விடாமல் பாதுகாப்பது அரச தரப்பை பொறுத்தவரை கட்டாயமானது. அதே நேரம் இந்தப் பிரசாரம் சிங்கள பௌத்த சமூகத்தின் மத்தியில் ஆழமாக ஊடுருவும்போது அது இலாபகரமானதாக முடியும்.

எப்படியிருந்தாலும்இரண்டு பிரதான கட்சிகளுமே இம்முறை தமது தேர்தல் பிரசாரங்களின்போது வழமையை விட குறைவாகவே இனப்பிரச்சனை சம்பந்தமான விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க முனைகின்றன. பொருளாதார நெருக்கடியை மையப்படுத்தி வாழ்க்கை செலவுப் பிரச்சனை உள்ளிட்ட அன்றாட பிரச்சனைகளைப்பற்றிப் பேசி மக்களை கவரும் தந்திரமே இரு தரப்பினாலும் கையாளப்படுகின்றது.

இதன்காரணமாகவே தேர்தல் அறிவிக்கப்பட்டதும் சராசரி மக்களுக்கான சலுகைகள் தொடர்பில் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை இருதரப்பில் இருந்தும் கேட்க முடிகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்பாடுகளால் வெறுப்புற்றிருக்கும் மக்கள் ஐ.தே.க. கூட்டணியின் பக்கம் சாய்ந்து விடாமல் தடுத்து தம்பக்கம் இழுக்க ஜே.வி.பி. கடும் பிரயத்தனம் மேற்கொள்கின்றது. தற்போது நடைபெறும் ஜே.வி.பி. கூட்டங்களில் ஐ.தே.க. தலைமையைத்தான் பட்டை கிழிய திட்டித் தீர்க்கிறார்கள். இது பொதுஜன ஐக்கிய முன்னணியை பொறுத்தவரையில் சாதகமான அம்சம். ஏனெனில் பிரசார ரீதியில் இரண்டு தரப்புக்களை எதிர் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு ஐ.தே.க. தள்ளப்பட்டிருக்கிறது. அத்துடன் அரசாங்கத்தை விட்டு தூரமாகும் மக்கள் ஐ.தே.க.வை நெருங்காமல் ஜே.வி.பி.யிற்கு வாக்களிப்பார்களானால் கடைசியில் அது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கே வாய்ப்பாக அமையும் என அந்தக் கட்சி கருதுகிறது.

ரணில்-புலி கூட்டு பற்றியும், எஸ்.பி. திஸாநாயகவின் 'சமுர்த்தி மஹால்' பற்றியும் அரசாங்கம் ஆரம்பித்த பிரசாரங்களை ஆலவட்டம் போட்டு நாடு முழுவதும் கொண்டு செல்லும் பணி இப்போது ஜே.வி.பி.யிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக எந்தவொரு தேர்தலின்போதும் அரசியல் கட்சிகளின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகுவது ஆளும் தரப்புதான். கடந்த பொதுத் தேர்தலின் போது ஜே.வி.பி. பெற்ற வாக்குகளில் கணிசமான தொகை பொதுஜன ஐக்கிய முன்னணி மீது வெறுப்புற்று, ஆனால் ஐ.தே.க.வுக்கு வாக்களிக்க விரும்பாதவர்களின் புள்ளடிதான்! இம்முறை ஜே.வி.பி.யின் தாக்குதல் கணை முற்றுமுழுதாக ஐ.தே.க.வின் பக்கமே திரும்பியிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆட்சியமைக்க ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதை விடுத்து ரணில் ஆட்சிக்கு வரும் சந்தர்ப்பங்களையே துடைத்தெறிய வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன்தான் ஜே.வி.பி. தனது தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றது.

தேர்தல் வாக்குறுதிகளும், கட்சித் தாவல்களும் இலங்கை அரசியலின் பிரதான இரண்டு அம்சங்களாகிவிட்டன.

குறிப்பிட்ட பருவங்களுக்கு நாடு விட்டு நாடு செல்லும் உல்லாசப் பறவைகள் தொடர்பில் கூறப்படும் கோட்பாட்டை இலங்கையின் 'கட்சித்தாவல்' அரசியலுடன் ஒப்பிடலாம்.

இலங்கையில் யால, குமண சரணாலயங்களுக்கும் இந்தியாவின் வேடந்தாங்கல் போன்ற இடங்களுக்கும் வரும் இந்தப் பறவைகள் 'உல்லாசப் பறவைகள்' என்று அழைக்கப்பட்டாலும் அவை எந்த நாட்டுக்கு சொந்தமானவை என்பது எவருக்கும் தெரியாது. இலங்கைக்கு வரும் போது இவை இந்த நாட்டுக்கான உல்லாசப் பறவைகளாக இருப்பது போலவே வேறு ஒரு நாட்டுக்கு சென்றால் அங்கும் அவற்றை உல்லாசப் பறவைகளாகவே கருதுவதுண்டு. இந்தப் பறவைகளுக்கும் குறிப்பிட்ட ஒரு நாடோ, தேசியத்தன்மையோ இல்லை. இந்த விடயம் இலங்கை அரசியலோடு மிகவும் சமீபமான கோட்பாட்டைக் கொண்டது.

வாக்குறுதிகளை பொறுத்தவரையில் நிலைமை மேலும் சிக்கலானது. கடந்து போன தேர்தல்கள் பலவற்றிலும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததினால் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மக்கள் முன்னிலையில் சென்று வாக்குக் கேட்க முடியாதுள்ளது என்றும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்ய உதவாததால் ஐ.தே.க.வுக்கும் மக்கள் முன்னால் போக முடியாது என்றும் ஒருவாதம் முன்வைக்கப்படுகின்றது. இது தார்மீக ரீதியிலான உரிமை குறித்த பிரச்சனை. இலங்கை அரசியலில் நியாய தர்மங்கள் பற்றி பேசுவது வேடிக்கையானது. சுதந்திரத்துக்குப் பின்னர் சகல தேர்தல்களிலும் மக்களின் கவனத்தைக் கவர பயன்படுத்தப்பட்ட பிரதான ஆயுதம் வாக்குறுதிகள்தான்.

பொதுமக்களை கவர்ந்திழுக்கும் வாக்குறுதிகளை தொடர்ச்சியாக முன்வைப்பது சம்பிரதாயபூர்வமான தேர்தல் வழிமுறை! ஆனால் ஆட்சிக்கு வந்ததும் எந்தவொரு கட்சியும் தாம் கொடுத்த வாக்குறுதிகளின் பால் கவனம் செலுத்துவதில்லை. அதன்பின்னர் அவற்றின் முழுப்பிரயத்தனமும் கையில் கிடைத்த அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதிலேயே இருக்கும். வாக்குறுதிகள் மீறப்படுவதை நியாயப்படுத்தும் காரணங்களை அவ்வப்போதைய புறச்சூழலுக்கு ஏற்ப தேடிக் கொள்ளலாம்.

ஒரு நாட்டின் 'அரசாங்கம்' அல்லது 'ஆட்சிபீடம்' என்பதன் மெய்யான அர்த்தம் அந்நாட்டு மக்களின் 'வாழ்வியல் சுபீட்சம்' என்பதுதான். மக்களின் விருப்பத்திலேயே எந்தவொரு பிரிவினரதும் அதிகார பலம் தங்கியிருக்கிறது. ஆனால் துரதிஷ்ட வசமாக எமது நாட்டு மக்களின் மிகப் பெரும்பாலானவர்களுக்கு தேர்தல் காலத்தின் போது மாத்திரம்தான் ஜனநாயகம் ஞாபகத்துக்கு வருகின்றது. இதன்காரணமாக வாக்களிப்பு தினத்தில் வாக்குச் சாவடிக்குச் சென்று ஏதோ ஒரு சின்னத்துக்கு புள்ளடியிட்டு விட்டால் தமது ஜனநாயக உரிமை நிறைவேறி விட்டதாக எமது மக்கள் நினைக்கிறார்கள்.

இந்த நாட்டில் பிரஜா உரிமை பெற்றவர்கள் ஒரு கோடிக்கு அதிகமாக இருந்தபோதும் அவர்களில் அநேகமானவர்கள் செயல் ரீதியிலான 'பிரஜைகள்' அல்ல.

இதனாலேயே அரசியல்வாதிகள் மக்கள் முன்னிலையில் வாக்குறுதி மழைகளை பயமின்றி பொழியச் செய்கிறார்கள். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று மக்கள் வலியுறுத்த ஆரம்பித்தால் அதனை செய்ய வேண்டிய நிலைக்கு அரசியல்வாதிகள் தள்ளப்படுவார்கள். அதனால் வாக்குறுதிகளை வழங்கும்போது சற்றேனும் சிந்திக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்படும். ஆனால் அரசியல்வாதிகளின் அதிஷ்டம் எமது மக்கள் ஒரு போதும் கேள்வி கேட்க மாட்டார்கள்!

ஜனநாயக அரசியல் அரங்கத்தில் தேர்தல்கள் ஒரு திருவிழா. மக்களை ஒருநாள் மன்னர்களாக்கும் பெரு விழா. கடந்த தேர்தலுக்கு பின்னரான ஒரு வருட காலத்தின் பின்னர் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வந்துள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு பதவிப் பொறுப்பை வகிப்பதற்கு மக்களால் ஆணை வழங்கப்பட்ட பிரதிநிதிகளில் கணிசமானவர்கள் நாட்டு நலன், மக்கள் நலன், என்பவற்றைச் சிந்தித்து தொலை நோக்குடன் செயற்படுவதற்கு பதிலாக குறுக்கு வழிகளில் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தமையின் விளைவாக இன்று தேர்தலுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பொறுப்புணர்ச்சியுடன், அதிகாரப் போட்டியைத் தவிர்த்து செயற்பட

பின்னிப் பிணைந்தவர்களாகவே தென்னிலங்கையெங்கும் பரந்து வாழும் முஸ்லிம் மக்கள் தமது அரசியல் நலன்களைப் பிரதிபலித்து வருகின்றனர். வடக்கு-கிழக்கு தவிர்ந்த பிற மாகாணங்களில் முஸ்லிம் காங்கிரஸ் மாபெரும் சக்தியாக உருவெடுக்கவில்லை. மேலும் தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தமது தாயகம் என்று வடக்கு-கிழக்கை கருதுவதுபோல முஸ்லிம் மக்கள் அம்பாறையையோ கல்முனைக் கரையோர மாவட்டத்தையோ தமது தாயகமாகக் கருதுவதாகவும் இல்லை. இந்த அடிப்படை உண்மைகளை மறந்து போன நிலையிலேயே ரவூப் ஹக்கிம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டு வருவதாக தெரிகிறது. மறுபுறத்தில் முஸ்லிம் காங்கிரஸின் மற்றைய

படும் போரின் பின் விளைவுகளால் மிகவும் நொந்து போயுள்ளவர்கள் சாதாரண மக்கள் தான். போரின் மூலம் வெற்றிகள் குவிக்கப்படுவதாகவும், ஆயுதங்கள் அள்ளப்படுவதாகவும், படைமுகாம்கள் தகர்க்கப்படுவதாகவும் கூறப்படலாம். ஆனால் இவை எதுவும் சாதாரண மக்களுக்கு நன்மை பயப்பதாக இல்லை. நிவாரணங்களுக்காக கையேந்தும் நிலையிலிருந்து விடுபட உதவுவதாக இல்லை. நிம்மதியாக அன்றாட வாழ்வை கொண்டு செலுத்த உதவுவதாக இல்லை. எனவே போரைத் தொடர்வதற்கான நியாயங்களைத் தேடுவதைவிட போரை முடிவக்கு கொண்டு வரும் வழியை நாடுவது தேவையானதாகியுள்ளது.

மேலும் கூட்டணியாகச் சேர்ந்திருப்பமான முரண்பாட்டு பிரதிமைகளடங்கிய இந்த தேர்தல் கூட்டணி புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றிலும் கைச்சாத்திட்டுள்ளன. இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளின்போது புலிகளைத் தவிர வேறு எவருடனும் பேச்சு வார்த்தை நடத்தக்கூடாது என்பதே இந்த ஒப்பந்தத்தில் உள்ள பிரதான விடயம்.

தேர்தலின் பின்னர் அமையப்போகும் புதிய அரசாங்கத்துக்கு சமாதான முயற்சிகளின்பால் அழுத்தங்களை பிரயோகிப்பதெனவும் பொதுஜன ஐக்கிய முன்னணியை மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்க ஒருமித்து செயற்படுவதென்பதுவமே ஏனைய அம்சங்களாகும்.

இந்தக் கூட்டணியை உருவாக்கும்

ஐ.தே.க.வை மக்கள் அறிவார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பற்றியும் நாட்டுக்குத் தெரியும். என்றாலும் கூட தேர்தலுக்காக வேண்டி ஒரு 'புதுப் பொலிவை' இந்தக் கட்சிகள் வெளிப்படுத்த முனைகின்றன. இதே காரியத்தின் மற்றொரு வடிவம்தான் இந்த தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பும்.

நான்கு திருடர்கள் ஒற்றுமையாகி விட்டால் அவர்களை பொலிஸ்காரன் என்று அழைப்பதில்லை. திருட்டு கும்பல் என்று தான் அழைப்பது! தமிழ்க் கட்சிகள் விவகாரத்திலும் இதுதான் நடந்திருக்கிறது.

இவர்களில் எந்தத் தரப்பினருக்கும் தமது பழைய முகங்களுடன் போய் தமது பழைய கட்சிக்காக வாக்குக் கேட்கும்

# 'பழைய முகங்களுடன்' மக்கள் முன் செல்லமுடியாத தமிழ்க்கட்சிகளின்

# 'புதுப்பொலிவு பொலிடிக்ஸ்'

பாராளுமன்ற உறுப்பினர்கள் முயன்றிருப்பார்களேயானால் நாடு அரசியல் உறுதியற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்காது. அரசாங்கத்தை இழுத்து வீழ்த்த முற்பட்டவர்கள் வெட்டிய குழியில் இன்று தாமே விழுந்து போய் இருப்பது தான் விந்தையானது.

தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்படாமல் இருக்கிறது. யுத்தம் தொடர்கிறது. அதன் கோர விளைவுகள் நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் கொடூரமாக பாதிக்கிறது. பொருளாதார கஷ்டங்கள் ஒவ்வொரு தனிமனிதனையும் மிக மோசமாக வாட்டுகிறது. போக்குவரத்து நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. கடலில் மீன் பிடிக்கவும், விவசாயி வயல் நிலங்களில் செய்கை பண்ணவும், பாதுகாப்புக் காரணங்கள் தடைசெய்யும் பரிதாப நிலைமை தொடர்கிறது. சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக அலைய வேண்டிய தேவை பல்லாயிரக்கணக்கானோருக்கு நேரிட்டுள்ளது. பாராளுமன்றத்தில் உறுப்புரிமை பெற்றிருந்தவர்களின் நேரடிக் கவனத்திற்குரிய பிரச்சனைகள் இவை. இவற்றைஎதிர்கொண்டு தீர்வுகளை கண்டு அமுல்படுத்தி மக்களுக்கு சுபீட்சமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை.

ஆனால் கடந்த பாராளுமன்றத்து உறுப்பினர்களின் நிகழ்ச்சி நிரலில் இவை முன்னுரிமை பெற்றதாக இருக்கவில்லை என்பது கவலைக்குரியது. அரசாங்கத் தரப்பில் இருந்தவர்களுக்கு அடிப்படைப் பிரச்சனைகளுக்கு ஆணித்தரமான தீர்வுகளை முன்வைப்பதைவிடவும், எதிர்கட்சிகளின் விமர்சனங்களுக்கு பதில் சொல்வதிலேயே ஆர்வம் அதிகமாக இருந்தது. பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சி அதிகாரத்தை எப்படிக் கைப்பற்றலாம் என்ற எண்ணம் மட்டுமே ஆட்டிப்படைத்தது. மக்கள் விடுதலை முன்னணி சகட்டு மேனிக்கு ஆளும்தரப்பையும், எதிர்தரப்பையும் விமர்சித்து தங்களை கதாநாயகர்களாக காட்டிக் கொள்வதிலேயே கவனம் எடுத்தது. இந்த மூன்று தரப்பும் தமது வாக்கு வங்கிகளில் கணிசமான தொகையை வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு வெளியிலேயே கொண்டிருக்கின்றன. வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் எவர் என்ன சொன்ன போதிலும் வடக்கு கிழக்கு மக்களின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் என்பதை மறுக்க முடியாது. எனவே வடக்கு கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் கடந்த பாராளுமன்ற பதவிக்காலத்தில் எப்படிச் செயற்பட்டார்கள் என்பதே தமிழ் பேசும் மக்களின் அக்கறைக்குரிய விடயமாகும்.

கடந்த பொதுத்தேர்தலை அடுத்து ஆட்சி அமைப்பக்கு வித்திட்ட நாள் முதல் ரவூப் ஹக்கிம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சிக்கு ஒரு தலையிடியாகவே இருந்தது. கண்டி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ரவூப் ஹக்கிம் வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நலன் குறித்து அக்கறைப்பட்டதைவிடவும், ஆட்சி அதிகாரத்தில் அதிகளவு ஆசைப்பட்டது புலப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக இருந்த எம்.எச்.எம்.அஷ்ரப் பதவிவகித்த அதே அமைச்சு பொறுப்பு தமக்கு வழங்கப்படவேண்டுமென கோரியது முதல் ஐ.தே.க.வினால் முன் மொழியப்பட்ட நான்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவதற்கு பகிரங்கமாக கால அவகாசம் வழங்கியமை உட்பட பல்வேறு விடயங்களை இதில் கவனத்தில் கொள்ளலாம். ரவூப் ஹக்கிமின் இத்தகைய போக்கை கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் முஸ்லிம் காங்கிரஸைப் பிளவுபடுத்துவதாக போய்விட்டது. இது இப்போதும் இரகசியமானது அல்ல. எனினும் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்தவர்களும் வாழ்பவர்களும் தமது தனித்துவத்தை காப்பதில் அக்கறை கொண்டிருக்கும் அளவுக்கு, வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்பவர்கள் ஆர்வம் காட்டுவதாக இல்லை. தேசியக் கட்சிகளுடன்

அங்கமான கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளும் தேசிய ரீதியில் சிங்களக்கட்சியுடன் பின்னிப்பிணைந்துள்ள முஸ்லிம்களைப் போலவே தமிழ் தேசிய இனத்துவ அடையாளத்துக்குள் தங்களது இடத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முனைவதாக இல்லை என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்த இடத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்து எண்ணிப்பார்க்க வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து எல்லாமாக 31 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 31 உறுப்பினர்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர்களாக பதினைந்து பேர் தெரிவாகியுள்ளனர். எனவே சுமார் 50 வீதத்துக்கு சற்றுக் குறைவானவர்கள் தேசியக் கட்சிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நிலைமையில் தமிழ் மக்களின் விருப்பம் தனித்தமிழீழம் என்று கூறுவது பொருத்தமுடையதல்ல. எனவே தமிழ் மக்களின் விருப்பம் தனித்தமிழீழம் அமைப்பதுதான் அதற்கான ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்துவதற்காகவே பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகிறது. மேலும் பாராளுமன்ற பாதையினூடாக தமிழீழத் தாயகத்தின் எல்லைகளை வரையறுக்க முடியாது. ஆதலால் இனப் பிரச்சனைக்கான தீர்வு தமிழீழத்தாயகம் தான் என்று கருதுபவர்கள் பாராளுமன்ற பதவிகளுக்காக போட்டியிடுவதை தவிர்த்து போர்க்களங்களுக்கு செல்வதே சிறப்பானதாக இருக்கும். ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வைக் காண்பதற்கான இணக்கப்போக்கை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களே பாராளுமன்றம் செல்வதே உகந்தது.

புலிகளுடன் பேசுங்கள். அதற்கு அழுத்தம் கொடுப்பதற்கான அரசியல் அங்கீகாரம் பெறுவதற்காகவே பாராளுமன்றம் செல்லப் போகிறோம் எனச் சிலர் கூறுகின்றனர். இங்கு இரண்டு விடயங்களை அவர்களாகவே ஒப்புக்கொள்கின்றனர். அதாவது தாங்கள் ஒரு முடிவை எடுத்து அதற்காக மக்களை வழிநடத்தும் சக்தி அற்றவர்கள் என்பது ஒன்று. இரண்டாவது தங்களுடன் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை என்பது. இத்தகையவர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புவதால் என்ன பயன் என்பது குறித்து தமிழ் மக்கள் நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.

மேலும் புலிகள் தமக்காக யாரும் பேசுவதை அனுமதிக்கப் போவதில்லை என்பதும், பிறருடைய விருப்பங்களுக்காக பேசப் போவதில்லை என்பதும் தெளிவான உண்மை. இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை ஊடாகப் பெறப்படும் தீர்வு தமிழீழத்தாயகமாக இருக்க முடியாது. ஆதலால் அரசாங்கத்துடன் பேசுங்கள் என்று புலிகளுக்கு ஆலோசனை கூறுவதென்பது மறைமுகமாக தமிழீழத்தாயகக் கோரிக்கையை கைவிடுங்கள் என்று புலிகளை நிர்ப்பந்திப்பதாகவே இருக்கமுடியும். இத்தகைய அரசியல் நிர்ப்பந்தங்களை புலிகள் எப்படிச் சகித்துக் கொள்வார்கள் என்பது எண்ணிப்பார்க்கப்பட வேண்டும்.

இத்தகைய நிலையில் யுத்தத்தை முடிவக்கு கொண்டு வருவதும், தொடரும் உயிர் உடமை இழப்புகளைத் தடுத்து நிறுத்துவதும், இடம்பெயர்ந்து அலையும் அவல வாழ்வை மாற்றி அமைப்பதும் தான் தமிழ் பேசும் மக்களுக்கு முக்கியமானது. இதனை மையமாகக் கொண்டு செயற்படுவது தேவையானது. ஏனெனில் முன்னெடுக்கப்

வர்களின் உண்மையான நோக்கம் குறித்தும் தமிழ் பேசும் மக்கள் கேள்விகளையே எழுப்ப வேண்டும். 1977ல் கூட்டணியாக ஒன்று சேர்ந்து மாபெரும் வெற்றியை ஈட்டியவர்கள் சாதித்தது என்ன? 1989ல் கூட்டணியாக நின்று ஆசனங்களைப் பெற்றமையின் பலாபலன் என்ன? இப்போது கூட்டணியாக சேர்ந்திருக்கும் கூட்டணிக் கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமக்கென எந்த வேலைத்திட்டத்தைக் கொண்டு இருக்கின்றன? எந்த வகையான அரசியல் தீர்வை சிபார்சு செய்யப்போகின்றன? யுத்தத்தை முடிவக்கு கொண்டு வர இவர்கள் செய்ய உத்தேசித்துள்ள விடயங்கள் என்ன? இவர்களது அழைப்பை ஏற்று புலிகள் பேச்சு வார்த்தை மேசைக்கு முன் வருவார்களா? இவர்களது அழைப்பை ஏற்றுக் கொள்ள புலிகள் முன்னவரா விட்டால் என்ன செய்யப்போகிறார்கள்? சகோதரப் படுகொலைகளை நிறுத்தவும், போரினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநியாய சுமைகளைத் தளர்த்தவும் இவர்கள் புலிகளிடத்தில் தம் செல்வாக்கைப் பிரயோகிப்பார்களா? இக்கேள்விகள் விதண்டாவாதமானவையோ, பொழுது போக்கானவையோ அல்ல என்பதை இந்த கூட்டணியினர் உணரவேண்டும்.

மேலும் "புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும். வன்னிக்கான பொருளாதாரத் தடை விலக்கப்பட வேண்டும். நோர்வேயின் அனுசரணையோடு புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பித்து நிரந்தரமான நியாயமான அரசியல் தீர்வு காண வேண்டும்" என்பவையே கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகளின் பொதுக் கருத்தாகச் சொல்லப்படுகிறது. இதில் புலிகள் ஏனைய இயக்கங்கள், கட்சிகள் மீது விதித்துள்ள தடை பற்றியோ, மாற்றுக் கருத்துக்களுக்காக மரண தண்டனைக்கு உள்ளானவர்கள் குறித்தோ எதுவும் சொல்லப்படவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை புலிகளால் மூடப்பட்டிருப்பது கண்டு கொள்ளப்படவில்லை. வன்னி வரை சென்ற நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மைக்கூட புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரில் சந்திக்கவில்லை (இரண்டாம் தடவை சென்றபோது) என்பது கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. இந்த விடயங்களை கூட்டுச் சேர்ந்துள்ள இக் கட்சிகள் கவனத்திற்கு கொள்ளாமல் விட்ட காரணம் என்ன என்பது மக்களுக்கு முன்பாக தெளிவு படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இவற்றினால் தினமும் பெரும் தொல்லைகளுக்கு இலக்காகுபவர்கள் கூட்டுச் சேர்ந்துள்ள இக் கட்சிகளின் தலைவர்களும் அல்ல. கூட்டுச் சேர்ந்த கட்சிகளுக்காக வக்காலத்து வாங்கும் ஊடகங்களும் அல்ல. மாறாக சாதாரண மக்களே ஆகும்.

இவ்வாறு அடிப்படையிலேயே ஏராள

விடயத்தில் தலைநகரில் உள்ள சில பிரமுகர்கள் இடைத்தரகர்களாக பணியாற்றினார்கள். மிகப்பெரும் பிரயத்தனத்தின் பின்னரே இந்த கூட்டமைப்பு ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்தது.

கருத்தொருமிப்புக்கு வருவதில் ஏற்பட்ட பிரதான தடங்கல் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வதில்தான் ஆரம்பமானது. புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்பதில்லை என தமிழ்க்காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய கட்சிகள் திட்டவட்டமாகக் கூறிவிட்டன. கூட்டு சாத்தியப்படாமல் போகலாம் என்ற அளவுக்கு இந்த விடயத்தில் இழுபறி தொடர்ந்தது. இறுதியில் ஏனைய மூன்று கட்சிகளினதும் அபிப்பிராயத்துடன் தமிழ்க் காங்கிரஸும் உடன்பட்டது. அதாவது புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்பதில்லை என சகல தரப்பினரும் உடன்பாட்டுக்கு வந்தனர்.

இவர்களது நிலைப்பாடுகள் கோட்பாடுகள் எப்படிப் போனாலும் விடுதலைப் புலிகளை அவமானப்படுத்தி அரசியல் நடத்தும் நிலைக்கு இந்த தமிழ்க்கட்சிகள் வந்து விட்டதை மாத்திரம் தெளிவாக உணர முடிகின்றது.

இந்தக் கட்சிகளுக்கு இருக்கும் ஒரே தேர்தல் முதலீடு புலிகளுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்குதான். அதனை வைத்துக் கொண்டு "நாங்கள் புலிகளை ஆதரிக்கிறோம் அதனால் எமக்கு வாக்களியுங்கள்" என்பதை விடுத்து மக்கள் முன்னிலைக்கு செல்ல இவர்களிடம் வேறு எதுவுமில்லை.

ஆனால் அடிப்படையில் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்கவும் இவர்களுக்கு விருப்பமில்லை. இந்நிலையில் தமது உண்மையான சுயரூபம் மக்கள் மத்தியில் அம்பலமாகி விடாமல் பாதுகாக்கவும், புலிகள் கோபப்படாமல் சமாளிக்கவும் போட்ட கபடத்தனமான திட்டமே இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற நாடகம்.

புலிகளைத் தவிர வேறு எவரிடமும் சமாதானம் பேசக்கூடதென இவை கூறுகின்றன. ஆனால் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்க மறுத்துவிட்டன எத்தனை தெளிவான முரண்பாடு!

பொதுவாகவே தேர்தல் ஒன்றை சந்திப்பதற்கு முன்னர் மக்கள் அபிப்பிராயத்தை தம்பக்கம் கவருவதற்காக அரசியல் கட்சிகள் பல்வேறு உபாயங்களை கடைபிடிப்பதுண்டு.

இப்போதிருப்பது பழைய ஐ.தே.க. அல்ல. எல்லோரும் புதிய தலைவர்கள், தூய்மையானவர்கள் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்த அந்தக் கட்சி முனைகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இருந்த திருட்டு கும்பல் வெளியேறி விட்டதால் இப்போது சுத்தமான கட்சியாக நாம் இருக்கிறோம் என அமைச்சர் டி.எம்.ஜயரத்ன கூறி வருகின்றார்.

ஆனால் யார் என்ன சொன்னாலும்



அருகதை கிடையாது. தேர்தலுக்கு இன்னும் 5 வருடங்கள் இருக்கின்றதுதானே என்ற தைரியத்தில் சிலர் தமது பகுதிகளில் ஏராளமான அட்டகாசங்களைப் புரிந்து மக்களை போதியளவு வெறுப்பேற்றி வைத்திருக்கிறார்கள். இப்படியிருக்க பழைய முகத்துடன் போய் பல்லிளித்து வாக்குக் கேட்கும் தைரியம் கிடையாது!

எனவே எல்லோருமாக சேர்ந்து தங்கள் பாதுகாப்புக்காக ஏற்படுத்திக்கொண்ட கூட்டுதான் இது. இதன் பயனால் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கப்போவதாக காண்பிப்பது மக்களை முட்டாளாக்குவது மாத்திரமன்றி துரோகத்தனமான செயலும் தான்.

தாம் செய்த சேவைகளைச்சொல்லி வாக்குக் கேட்பதென்றால் இந்த நான்கு கட்சிகளாலும் எதைத்தான் கூற முடியும். போதாக்குறைக்கு விநாயகமூர்த்தி போன்றவர்கள் தாம் கொழும்பிலிருந்துதான் அரசியல் நடத்துவோம் என பகிரங்கமாகவே கூறியவர்கள். ஆனந்த சங்கரி போன்றவர்கள் தமக்காக கள்ள வோட்டுப் போட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு நன்றி சொல்லக் கூட குடாநாட்டின் பல பகுதிகளுக்கு இன்னும் போகவில்லை என்று குறை கூறப்படுகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எப். வரி விதித்ததையும், டெலோ ஆள் கடத்தியதையும் தவிர சொல்லிக்கொள்ளும்படியான சேவை என்று இவர்களிடம் எதுவுமில்லை. எனவே அடுத்த தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டுமாயின் "நான் பழைய சுரேஷ் அல்ல, நான் பழைய அடைக்கலநாதனல்ல, நாமெல்லாம் புதிய கூட்டணிக்காரர்கள்" என்று கூறி அந்த ஒரு தகைமையை மாத்திரம் வைத்துக் கொண்டு வாக்குக் கேட்க புறப்பட்டிருக்கிறார்கள்.

சரி, இந்தக்கட்சிகள் ஒற்றுமையாகிவிட்டன. இவர்களது வேலை திட்டம்தான் என்ன? தேர்தலில் ஏதாவது ஆசனம் கிடைத்தால் பழையபடி கொழும்பில் இருந்து கொண்டு ரணில் விக்கிரம சிங்கவுக்கோ, சந்திரிகாவுக்கோ ஆதரவு தெரிவிப்பதை தவிர வேறு என்ன செய்யப் போகின்றன?

தமிழ்க்கட்சிகள் ஒற்றுமையாகி விட்டால் பிரச்சனைகளை தீர்த்து விடலாம் என்று பொதுமக்கள் மத்தியிலும் ஓரளவு உடன்பாடான அபிப்பிராயம் நிலவுகின்றது. உண்மையில் இது சரியானதல்ல. அப்படிப் பார்த்தால் இன்று வரை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்து பிரச்சனைகளுக்கும் தமிழ்க்கட்சிகளிடையேயான ஒற்றுமையின்மைதான் காரணம் என்றாகிவிடும்! ஒற்றுமையாக இருந்தாலும் பிரிந்து நின்றாலும் இந்தக் கட்சிகளிடம் நேர்த்தியானதொரு அரசியல் செயற்திட்டம் இல்லவே இல்லை. இவை 'புலிகளுக்காக செயற்படுகிறோம்' என்று கூறுவது கூட மடத்தனமானது. இவர்களை நம்பியிருந்தால் புலிகள் இயக்கம் இந்தளவு தூரம் வளர்ச்சி கண்டிருக்க முடியாது. உண்மை என்னவெனில் ஏதேதோ வழிகள் புலிகள் பெற்ற வெற்றிகளை இந்த தமிழ்க் கட்சிகள் தங்களது சுகபோக வாழ்வை தக்கவைக்கப் பயன்படுத்துகின்றன. நாளை ஒரு வேளை புலிகள் இயக்கம் பலவீனமான நிலைக்கு தள்ளப்படுமானால் "பாராளுமன்றத்தின் மூலம் நாம் தமிழீழம் பெற்றுக் கொடுத்திருப்போம். பிரபாகரன் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டார்" எனக் கூறுவதற்கும் இந்தக் கட்சிகள் தயங்க மாட்டாது.

ஆக இவர்களது இதே நோக்கம் ஏதாவது ஒரு சாட்டுப்போக்கை மக்கள் முன்னிலையில் வைத்து தேர்தலில் சில ஆசனங்களை கைப்பற்றிவிட வேண்டும் என்பது மட்டும்தான் அதற்காகவேண்டி புலிகளின் பெயரை மட்டுமல்ல தமது கட்சியின் முன்னோடிகளது பெயர்களையும் விற்றுத்தீர்க்க இவர்கள் தயங்க மாட்டார்கள். ■

## உங்கள் பலன் எப்படி?

**ஏ.சுலேமான் - A. Suleman**

உங்கள் சொந்தப் பலன் எப்படி? கைரேகை, நட்சத்திரம், பிறந்த நேரக் குறிப்புப்பார்த்து, பலன்கள் சொல்வோம். காதல் கைகூட வைப்பது, வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குவது, விரும்பியவரை மணமுடித்து வைப்பது, கணவன்-மனைவி பிரச்சனைகளைத் தீர்ப்பது.

- நீண்ட காலமாக நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்
- பரீட்சை பற்றிய பதட்டமா?
- பிசாசு, சூனியம், சாபக்கேடு துர் அதிஷ்டங்களால் இடர்பட்டு

அழுந்துகிறவர்களுக்கு ஒரே பார்வையில் ஆறுதல் கிடைக்கும்.

பிறந்த திகதி, பெயர்-மொழி-தமிழ்-சிங்களவர் எவராயினும் எல்லோர் பிரச்சனையையும் தீர்த்து வைப்பார். முன்னதாக (காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை) நேரம் நிர்ணயிக்க வேண்டும். அல்லது எழுதலாம்.

**A. SULEMAN ,**
**78 PLASHET GROVE**
**EAST HAM LONDON, E6 1AB.**
**T.P. 0208586 0922**

---

## மனோதத்துவ வைத்தியம்

**GENARAL PSYCHO THERAPHY**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஒக்டோபர் 20-27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஒக்டோபர் 28,29 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் நவம்பர் 03, 04 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் நவம்பர் 10, 11 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

---

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம்.

விபரத்திற்கு:- அப்புலிங்கம் சிங்கப்பூர் கைதொலை பேசி எண்:-

Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**

TELE: (65) 4533308

---

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

Tel: 074-519754

---

## விளம்பரப்பகுதி

---

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTHAVUR-21, SRI LANKA.
☎ 067-50349

---

**SELF LERNING TO REPAIR FRIDGE & A/C**

**சுயமாக குளிர் சாதனங்களைத் திருத்துவதற்குத் தேவையான விளக்கப் படங்களுடன் எல்லா வகையான குளிர் சாதனங்களைப் பற்றிய தமிழ் கைநூல்கள்**

| | | |
|---|---|---|
| குளிர்சாதனங்களின் தொழில்நுட்பம் தொகுதி - I. | குளிர்சாதனப்பெட்டி | -200/= |
| குளிர்சாதனங்களின் தொழில்நுட்பம் தொகுதி - II. | வளிசீராக்கி | -150= |

தேவையான நூல்களை M.I.S.H. JAMEEL, 97/1, SRI SUMANGALA Mw, RATMALANA என்னும் விலாசத்திற்கு காசுக்கட்டளை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். வெளிநாடுகளில் உள்ளவர்கள் 10 $ BANK DRAFT மேற்படி பெயருடன் A/C No. S.25162 குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

தேவையானவர்களுக்கு செயன்முறைப் பயிற்சியும், டிப்ளோமாச் சான்றிதழும் வழங்கப்படும். விபரம் நூல்களுடன்

---

சுவிஸ் பேர்ண் மாநகரில்.

**Suji Jewellery Works**

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.

**T.P. 0041-31-8191837**

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

---

**சுவிஸ். பேர்ண் மாநகரில் புதிய உதயம்.**

**விதுஜா ஏசியன் சொப் வாக் ஹவுஸ்**
**காசே பசாஜ் .8-3011. பேர்ண். சுவிற்சர்லாந்து.**

மைக் டொனால்ட். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் கட்டிட 1ம் மாடியில்.

எம்மிடம் இந்தியா, சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்குரிய கோட், சூட், குருத்தா, ரீசேட், சோட்ஸ், கவுண், பஞ்சாபி, வெல்வெட் பஞ்சாபி, பெண்களுக்கான பஞ்சாபி, சுரிதார், சோலி, வெல்வெட் பஞ்சாபி, மற்றும் புடவைகள், பனாரஸ், கோலம், அஜூர்வா, காஞ்சிபுரம், மைசூர்சில்க், ரூபிகுமின், சமர்குல்ட், ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, என பல்வேறுபட்ட தெரிவுகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் பழைய புதிய திரைப்பட பிரதிகளையும் நாடகப்பிரதிகளையும் 2 str வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும். மற்றும் அனைத்து மளிகைச் சாமான்களையும் அன்பளிப்பு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள். தொலைபேசி அட்டைகள் யாவும் 26 str மட்டுமே. மற்றும் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 கரட். தங்கநகைகள் எங்கள் விற்பனையில்.

தொடர்புகளுக்கு ஆனந்தன் சுவிஸ் T.P 031 311 35 10 or 076 530 67 55 or 031 992 82 67.

---

## Vella Maxi Credit

**கவியில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்**

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு
**கந்தராஜா பிரபு**

**Vella Credit**
Spitalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509

---

## ஜோதிட அருள் சித்தர் கே. கங்காதரன் அவர்களின் 10 உலக நாடுகளுக்கான விஜயம்

பிரபல உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி பேராசிரியர் P.K.சாமி ஐயா அவர்களின் சிரேஷ்ட புத்திரன் பிரபல மனோதத்துவ ஆலோசகரும் பத்திரிக்கைகளின் ஆன்மீக, மனோதத்துவ ரீதியில் கேள்வி பதில் அளிப்பவரும் கைரேகை ஜோதிட நிபுணரும் ஸ்ரீ துர்க்கை யாக சித்தருமாகிய K.கங்காதரன் அவர்கள் எதிர்வரும் 10ம் திகதி புதன்கிழமை ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொள்கிறார். அந்நாடுகளிலுள்ள பல்வேறு அபிமானிகளின் அழைப்பின் பேரிலேயே இவர் இப்பிரயாணத்தை மேற்கொண்டு அங்கு மனோதத்துவ ஜோதிட ரீதியான விளக்கவுரைகளை நடத்தவுள்ள பிரதான நாடுகளும் காலங்களும்.



| | | |
|---|---|---|
| 11-10-2001 - 12-10-2001 | டுபாய் | DUBAI |
| 12-10-2001 - 17-10-2001 | ஜெர்மனி | GERMANY |
| 18-10-2001 - 20-10-2001 | பிரான்ஸ் | FRANCE |
| 21-10-2001 - 23-10-2001 | இத்தாலி | ITALY |
| 24-10-2001 - 25-10-2001 | நெதர்லாந்து | NETHERLAND |
| 26-10-2001 - 27-10-2001 | அஸ்டிரியா | ASTIRIYA |
| 28-10-2001 - 29-10-2001 | பெல்ஜியம் | BELGIUM |
| 30-10-2001 - 31-10-2001 | கிரீஸ் | GREES |
| 01-11-2001 - 03-11-2001 | போத்துகள் | PORTHUKAL |
| 04-11-2001 - 06-11-2001 | ஸ்பெயின் | SPAIN |



*முன்பதிவுகளுக்கு*
RING STR-37
38524 SASSENBURG
GERMANY Phone: 004953716947
0049 16093449499
NO. 162. KOTAHENA ST
COLOMBO-13, SRI-LANKA.
T.P: 00941431137, 342463,466271,466571, 466620, 466820, 470615
FAX:- 00941344831
e-mail:-drpksamy@sltnet.lk www.imexpolanka.com/drpksami

---

## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 23 05 1936



மறைவு: 25 09 2001

### திருமதி சரஸ்வதி-புஸ்பராஜா

எங்கள் அன்புத் தெய்வமே
எத்தனை நாட்கள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம்மை
விட்டகலாது. என்றும் நிலைத்திருக்கும்.
குடும்பத்தின் ஒளி விளக்காய் பாசத்தின்
உறைவிடமாய் அமைதியின் திருவுருவாய்
திகழ்ந்த எம் இதயத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாம் அனைவரும் என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திதி 25 10 2001

பிரிவால் துயருறும்
ந.புஷ்பராஜா-வவுனியா.
024.23328
திருமதி ராஜினி ஸ்ரீசாந்தா (கொழும்பு)
திரு ராஜ்குமார் குடும்பம் (ஜெர்மனி)
தொ.பே.இல: 0049-9723930-366
திரு ரகுமார் (கனடா)
தொ.பே.இல: 001416-7598808
திரு ரவீந்திரகுமார் அன்ரனி (பிரான்ஸ்)
தொ.பே.இல: 00331-48972383
திருமதி ரஞ்சினி சுபகர்ணன் (பிரான்ஸ்)
தொ.பே.இல: 00331-43609179
செல்வி ரஜனி
செல்வி ரதிமாலா வவுனியா
பேரப்பிள்ளைகள்
துவாரகன், தனுஷா, நிகாஷினி, தீபிகா (துர்க்கா)

தகவல்: கணவர் ந.புஷ்பராஜா-30/41A கோவில்வீதி, குருமன்காடு, வவுனியா.

---

## மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

T.P: 00941 342463 , 00941 470615; **தேவைகளுக்கு:-**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

**உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

---

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



### சிவராஜா-தேவப்பிரியா (சுபா)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27.03.1975 | 24.10.1997 |

ஆறாத்துயரில் எமை ஆழ்த்திட்ட
ஆண்டுகள் நான்காயின
உலகை விட்டு மறைந்தாலும்
எங்கள் உள்ளங்களை விட்டு மறையவில்லை
என்றும் உன் நினைவாலும் பிரிவாலும் வாடும்
தாய் சகோதரங்கள்

தகவல்: T.கோனேஸ்வர ராஜா
திருகோணமலை.

# உரம்பெறவேண்டிய அரசியல் தீர்வுக்கோரிக்கை!

**அலசுவது - இராஜதந்திரி**

இலங்கையின் பன்னிரெண்டாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் சூடேற ஆரம்பித்துள்ளது.

தென்னிலங்கை, வடக்கு-கிழக்கு, மலையகம் எனப் பிரதேச வாரியாக இத்தடவைத் தேர்தல் முக்கியம் பெற்றுள்ளது.

இந்த மூன்று பிரதேசங்களிலும் தமிழ், முஸ்லிம் கட்சிகள், இடதுசாரிகள், தொழிற்சங்கக்கட்சிகள், தேசியக் கட்சிகள், எனப்பலரகத்திலும் அரசியல் கட்சிகள் தேர்தலுக்காகத் தயாராகின்றன. இவற்றோடு சுயேட்சை வேட்பாளர்களும் அதிகளவில் களமிறங்குகின்றனர்.

இத்தடவை தேர்தலை எடுத்து நோக்கும்போது வடக்கு-கிழக்கு, மலையகம், மற்றும் தென்னிலங்கை ஆகிய மூன்று பிரதேசங்களிலுமுள்ள கட்சிகள் அவ்வப்பிரதேசம் சார்ந்த பிரச்சனைகளை பெரிதும் பிரதிபலிப்பவையாகவே தேர்தலில் குதித்துள்ளன.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்தவரை ஐந்துக்குமதிகமான அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. இவற்றில் நான்கு கட்சிகள் ஓரணியில் ஒரே சின்னத்தின் கீழ் தம்மைக் கூட்டுச் சேர்த்துள்ளன. ஏனையவை தனித்தனியாகப் போட்டியிடுகின்றன.

மலையகத்திலும் அங்குள்ள இருபிரதான கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவை ஒரே அணியில் சேர்ந்துள்ளன. சுமார் ஏழுவருடங்களுக்கு முன்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட எஸ்.செல்லச்சாமி மீளவும் அக்கட்சியில் இணைந்து தேர்தலில் குதித்துள்ளார்.

தென்னிலங்கையில் முக்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியவை தமது பிரசாரக் கணைகளைத் தொடுத்து தேர்தல் வியூகங்களை அமைக்க ஆரம்பித்துள்ளன.

ஒருவருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிப்பீடமேறிய பொதுஜன ஐக்கிய முன்னணியினால் பதினோராவது பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்யமுடியவில்லை.

ஆளுங்கட்சியாகவிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலரும் எதிரணிக்குத் தாவியுள்ளனர். இதனால் ஜனாதிபதிப்பதவியினால் மட்டுமே தப்பிப்பிழைத்துள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பெரும் சவாலையே எதிர்நோக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது.

1977ம் ஆண்டிலிருந்து பதினேழு வருடகாலம் 1994ம் ஆண்டுவரை ஆளுங்கட்சியாகவிருந்த ஐக்கிய தேசியக்கட்சி, கடந்த ஏழு வருடகாலத்தில் இடம் பெற்ற தேர்தல்களில் மீளவும் ஆட்சி பீடமேறக் கூடியவிதத்தில் பல மடைந்திருக்கவில்லை.

ஆனால் தற்போது ஆளுங்கட்சியிலிருந்த அநேகர் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்துள்ள நிலையில், அக்கட்சி மீளவும் உஷாரடைந்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கடந்த பாராளுமன்ற ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்னர் ஒருகுறிப்பிட்ட சில வாரகாலம் ஆளுங்கட்சியோடு ஒரு பங்காளிக் கட்சியாகவே விளங்கியிருந்தது.

அண்மைக் காலங்களில் ஜே.வி.பி தென்னிலங்கை அரசியல் கோதாவில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கைப் பெற்றதாகவே இருந்து வருகின்றது.

குறிப்பாக தென்னிலங்கையின் இளஞ்சந்ததியினரிடையே மக்கள் விடுதலை முன்னணி ஓரளவு பிரபலத்தைப் பெற்றிருக்கின்றது.

ஆளுங்கட்சியாகவிருந்த பொது ஜன ஐக்கிய முன்னணி, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை ஒன்றையொன்று எதிர்த்துப் பிரசாரங்களை முன்னெடுத்துள்ள நிலையில் மக்கள் விடுதலை முன்னணி, இந்த இரு பெருங்கட்சிகளுக்கும் எதிராகத் தனது பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் ஸ்தாபகரான காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப்பின் தலைமையின்கீழ் ஒரு பலம் பெற்ற நிலையிலிருந்தது. ஆனால் அமைச்சர் அஷ்ரப்பின் திடீர் அகால மறைவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களிடையே பிளவுகளையும் உண்டுபண்ணியுள்ளது.

இத்தடவைப் பொதுத் தேர்தலைப் பொறுத்தவரை, ஆட்சியமைக்கும் எந்தவொரு கட்சியானாலும் ஒரு பலம் மிக்க நிலையில் இருக்க வேண்டுமென்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

பலவீனமான நிலையில் ஆளுங்கட்சி இருக்குமேயானால் அரசியல் நெருக்கடிகளும் தொடர்ந்திருக்குமென்பதையே எதிர்பார்க்கமுடியும்.

இத்தடவை பொதுத் தேர்தலில் தத்தமது வெற்றிக்காக மட்டுமல்ல. தேர்தல் முடிவுற்றதும் ஆட்சியமைப்பதற்குரிய பலத்தைப்பெறுவதற்கும் முன்னணி நிலைக்கு வரும் கட்சிகள் சவால்களை எதிர்நோக்க வேண்டியதாகவே இருக்கும்.

சிறுபான்மையினக் கட்சிகளைப் பொறுத்தவரை தத்தமது பிரதேசங்கள் மற்றும் மக்கள் சார்ந்த பிரச்சனைகளுக்கே இத்தடவைத் தேர்தலில் பெருமளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் தோன்றியுள்ள அரசியல் கட்சிகளது கூட்டணிகள் வெறுமனே பாராளுமன்ற ஆசனங்களையே குறிவைப்பதாக இருக்காது, அப்பிரதேச மக்களது அரசியல் ரீதியான எதிர்பார்ப்புகளுக்கே முக்கியமளிப்பவையாக இருக்கவேண்டியது அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்கில் தற்சமயம் ஐந்துக்குமதிகமான அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் நான்கு மட்டுமே கூட்டுச் சேர்ந்துள்ளன. ஏனையவை தனித்தனியாகப் போட்டியிடுகின்றன.

வடக்கு-கிழக்கின் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கும்போது, 1977ம் ஆண்டில் கூட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களை உள்ளடக்கியதாகவே தமிழர் விடுதலைக்கூட்டணி பொதுத் தேர்தலில் போட்டியிட்டிருந்தது. அன்று தமிழ் அரசியல் நிலபரத்தைப் பொறுத்தவரை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கூட்டணி அரசியல் காணப்பட்டது.

இன்றிருப்பது போல ஏகப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள் அன்றிருக்கவில்லை. வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் விதத்தில் தனிநாட்டுக் கோரிக்கையுடன் 1977ம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு-கிழக்கில் போட்டியிட்டதுடன் ஓர் 'ஏகபோக' வெற்றியையும் பெற்றுக் கொண்டது.

வெறுமனே வடக்கு-கிழக்கில் மிகப்பெரும் வெற்றியை மட்டும் ஈட்டவில்லை. பாராளுமன்றில் ஓர் எதிர்க்கட்சியாகவும் இடம் பிடிக்கும் நிலையையும் தமிழர் விடுதலைக் கூட்டணி எட்டியிருந்தது.

இருந்தபோதிலும் தேர்தல் பிரசாரத்தின்போது தனிநாட்டுக் கோரிக்கை மற்றும் சுயநிர்ணயக் கோரிக்கை எனக் கொடுத்த வாக்குறுதிகளை தேர்தல் வெற்றியின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை.

இதே சமயம் தென்னிலங்கை அரசியலில் உருவாகிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை, அத்துடன் வடக்கு-கிழக்கில் ஆரம்பித்த ஆயுதப்போராட்டம் என்பவை வடக்கு-கிழக்கு அரசியலில் ஒரு புதிய பரிமாணத்தையே ஏற்படுத்தலாயிற்று.

இந்நிலையில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக வடக்கு-கிழக்குப்பிரதேச அரசியலைப் பொறுத்தவரை ஒரு உறுதியான அரசியல் தலைமைத்துவமும், அதற்குரிய சூழ்நிலையும் ஏற்படாமலேயே இருந்து வருகின்றது.

தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டுச்சேரலாம்; அல்லது தனித்தனியாகத் தேர்தலில் குதிக்கலாம். ஆனால் வடக்கு-கிழக்கு அரசியல் நிலபரத்தைப் பொறுத்தவரை உறுதியான நிலைப்பாடுகளுக்கு முக்கியமளிக்க வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

வடக்கு-கிழக்கின் அரசியல் வரலாற்றை அசைபோட்டுப் பார்க்கும்போது சமஷ்டிக் கோரிக்கை ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டது. பின்னர் அக்கோரிக்கையிலிருந்தும் முன்னேறி தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தவர்களே சமஷ்டிக் கோரிக்கைக்கும் மிகக் குறைவான மாகாண சபை அமைப்பை ஏற்கவும் முன்வந்தனர்.

எனவே வடக்கு-கிழக்கின் அரசியல் கோதா காலத்துக்குக்காலம் நிலையற்றதாகவும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப மாறுதல்களை அடைவதாகவுமே இருந்து வந்துள்ளது.

எது எப்படியிருந்தபோதிலும் ஓர் அழுத்தம், திருத்தமான, இறுதியும் முடிவுமான அரசியல் தீர்வொன்று கிடைக்கவேண்டுமென்பதே வடக்கு-கிழக்குப் பிரதேச மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேச தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமல்லாது, தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் கூட கடந்தகால பொதுத்தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல்கள் என்பவற்றின்போது, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைகளைத் தீர்ப்பது தொடர்பாக பல்வேறு வாக்குறுதிகளை முன்வைத்தன. ஆனால் அவ்வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படாமலேயே இருந்துள்ளன.

அரசியல் தீர்வு மற்றும் அமைதியான வாழ்க்கைச் சூழல் என்பவற்றை எதிர்நோக்கிய வடக்கு-கிழக்கு மக்கள் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் பாரியளவிலான அரசியல், சமூக, பொருளாதாரப் பின்னடைவுகளுக்கே முகங்கொடுத்தவர்களாக இருக்கின்றனர்.

இத்தடவை பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் கட்சிகள் எத்தகைய கோணத்தில் போட்டியிட்டாலென்ன, வடக்கு-கிழக்கு மக்கள் மீளவும் ஓர் அரசியல் தீர்வைத் தமது பிரச்சனைகள் குறித்து எதிர்பார்த்தவர்களாகவே இத்தடவை தேர்தல் அரங்கை அணுகுவார்கள்.

வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல. எதிர்காலத்தில் முழு நாட்டிலுமே ஓர் ஆரோக்கியமான அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகள் தோன்றுதற்கு வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வுக்கு முதன்மையளிக்கப்படவேண்டியதே அவசியமானதாகின்றது.

இலங்கையின் அரசியல் குழம்பிப்போயுள்ள அதேசமயம் பொருளாதார நிலபரம்கூட வெகுவாகவே ஆட்டங்கண்டு போயுள்ளது.

தென்னிலங்கைஅரசியல் கட்சிகள் அரசியலமைப்புச் சீர்திருத்தம், ஜனாதிபதி ஆட்சி நீக்கம் மற்றும் இனப்பிரச்சனைத் தீர்வு, பொருளாதார மேம்பாடு எனப் பலதரப்பட்ட வாக்குறுதிகளுடன் இத்தடவை தேர்தலை சந்திக்கத் தலைப்படலாம்.

ஆனால் இவ்வாக்குறுதிகள் அனைத்திலும் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு என்பதே முதன்மைபெற வேண்டியதாகின்றது.

இது விடயத்தில் தென்னிலங்கைக் கட்சிகள் எவ்வளவு தூரம் கடந்த காலங்களில் தாம் விட்ட தவறுகளை உணர்ந்து தம்மைத் திருத்திக் கொள்ளும் என்பதை அனுமானிப்பது கஷ்டம்.

ஏனெனில் தென்னிலங்கையின் அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது, எந்தவொரு கட்சியும் நாட்டு நலன்கருதி அரசியல் யாப்பக்களைத் தயாரித்ததாகவோ அல்லது ஆட்சியதிகாரங்களை தகுந்த விதத்தில் பயன்படுத்தியதாகவோ கூறுவதற்கில்லை.

எப்போதுமே சொந்த அரசியல் நலன்களுக்கும் அதிகாரப்போட்டிக்குமே இடமளித்தவையாக தென்னிலங்கை கட்சிகள் இருந்து வந்துள்ளன.

இதேவேளை பெருமளவு பாதிப்புக்களை கடந்த கால்நூற்றாண்டு காலத்தில் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக வடக்கு-கிழக்கு மக்களே பெருமளவில் அனுபவித்துள்ளதை தமிழ் அரசியல் கட்சிகள் மனதில் நிறுத்தவேண்டியவையாகின்றன.

இந்நிலையில் கூட்டுச்சேர்ந்தாலென்ன, தனித்துநின்றாலென்ன உறுதியானதும், நிரந்தரமானதுமான அரசியல் தீர்வொன்றுக்கு குரல் கொடுக்க வேண்டியதே இத்தடவைத் தேர்தலில் வடக்கு-கிழக்குக் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கவேண்டியதாகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



***கொழும்பில கூடிப்பேசி*** கூட்டணி அமைச்சுக்கொண்டு யாழ்ப்பாணத்தில போய் இந்தக் கூட்டணியை ஆதரியுங்கோ வெண்டு கேட்ட அழுக்கு சங்கரி யாரை கட்சித் தொண்டர்கள் பிச்சுப் பிடுங்கிட்டினம். யாரையும் கேட்காமல் கண்டபடி கூட்டுச் சேர்ந்துட்டு வந்து சட்டம் பேசுறீரோ என்று சீறிப் பாய்ந்தவையாம். யாரையும் கேட்கத் தேவையில்லை தான் நினைச்சால் யார் கூடவும் ஒட்டிக் கொள்ளுவன் எண்டு சூடா பதில் சொன்னவராம் அழுக்கர். உதுல பாருங்கோ... தங்களின்ர கூட்டமைப்பில இருக்கிற சிலரின்ர வண்டவாளங்கள வெளியில சொன்னால் கூட்டு உடைஞ்சிடு மெண்டதுக்காக மௌனமா இருக்கிறனென்று சொல்லுறார் சங்கரியார். உதுலயிருந்து என்ன விளங்குதெண்டால்.. தங்கட கூட்டணிமேல அவருக்கே மனத்திருப்தியில்லை. கதிரையை காப்பாத்தோணமெண்டால் உந்த மாதிரி ஏதாவது 'ட்ரிக்ஸ்' போட்டால் தான் உண்டு எண்ட கட்டாயம்தான் உந்தாக்களை ஒட்டி வச்சிருக்கு.

***சித்தரின்ர நிலைமையை*** சிந்திச்சால் பரிதாபமாக்கிடக்கு பார்த்தியளே...உந்த மனுஷனை தமிழ்க் கட்சிக் கூட்டணியில இருந்து வெட்டி விட்டுட்டினம். உவரை உதுல சேர்க்கப் போறதில்லே எண்டது உறுதியெண்டாலும் அதை நம்ப மறுக்கும் சித்தர் ஒரு கனவுலகத்துல மிதந்து கொண்டு தன்னை அந்தக் கூட்டணி அழைக்குது. இந்தக் கூட்டணி அழைக்குதெண்டு கதை விட்டுக்கொண்டு திரியிறார். சனத்துக்கு முன்னால போய் அல்வா சாப்பிடும் வரையில ஏதாவது சொல்லிக்கொண்டுதான் இருப்பினம்!

***மின்சார வெட்டு*** எத்தனை வேகமா குறைஞ்சு கொண்டு வருதெண்டு கண்டியளே... மழை வந்தாலும் வராட்டாலும் எலக்சன் வருதல்லோ... அதனால எப்படியும் கரண்ட் கிடைக்கும் யோசிக்காதைங்கோ. உதை விட சார்ஜாவில கிரிக்கெட்மெட்ச் ஆரம்பிச்சிட்டு தெண்டால் தொடர்ந்து வெளிச்சமிருக்கும்!

***கரிகாலனை*** எஸ்.எல்.பி.சி.காரர் கிளேமோர் வச்சு கொண்டு புதைச்சிட்டினம்! உந்த மாதிரி பச்சை புழுகுகளையாவது ஒரே தடவையோடு நிறுத்தியிருக்கலாமல்லோ... திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டே இருக்கினம். எத்தனை தனியார் வானொலிகள் உதிச்சாலும் அரசாங்க வானொலி செய்திக்கு ஒரு தனி மரியாதை இருந்தது. ஒரு மாதிரியாக அதையும் இல்லாமல் பண்ணிக்கொண்டு வருகினம்!

***மலையகத் தலைவர்கள்*** சேவலை அறுத்து குழம்பு வச்சுப் போட்டு யானையின்ர காலில நிற்கப் பார்க்கினம். கிழக்கில தனித்துவக் கட்சிக் காரரும் தங்களின்ர மரத்தை வெட்டி அடுப்புல போட்டுட்டு யானை மேல ஏறி உட்கார்ந்திட்டினம். ஏற்கனவே ஒரு தடவை கதிரைக் காலில நின்று நீதிமன்றம் வரை அலைஞ்சு திரிஞ்சும் மற்றவையின்ர காலில நிற்கிற புத்தி விட்டுப் போகேல்ல. கதிரையிலயாவது கால் உடஞ்சால் காயமின்றி தப்பிச்சிடலாம். யானை மிதிச்சதெண்டால்...

***வேட்பு மனுத்தாக்கல்*** செய்யிறதுக்குள்ளயே வன்முறைகள் மட்டும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகுது. காலத்துக்கு ஏற்ற ஒரு வாசகம் கேளுங்கோ..

**இத்தகைய மோசமான ஒரு யுகம் தோன்றக் காரணம்**
**திருடர்களினதும், மோசடிப்பேர்வழிகளினதும்**
**செயற்பாடுகள் அல்ல: நேர்மையான மனிதர்களின்**
**அபாயகரமான மௌனம்தான் இதற்குக் காரணம்!** (யாரோ)



## உண்மைத் தொடர் 29

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

யுத்தம் ஒன்று மூழ்வதை தடுக்க ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பலரும் இராஜதந்திர முயற்சிகளில் இறங்கியிருந்தனர். அயல் நாடுகள் தொடர்பில் ஹிட்லர் கடைபிடித்த கடும் போக்கான கோட்பாட்டை தளர்த்துமாறு பலரும் வலியுறுத்தினர். ஆனால் அவை எதையும் அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. செக்கோஸ்லாவாக்கியாவைஅல்லது போலந்தை ஜெர்மன் படைகள் ஆக்கிரமிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட சமயம் செக்கோஸ்லாவாக்கியத் தலைவர் ஜெர்மனிக்கு விஜயம் செய்தார். அவரைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பிரதமரும் பெர்லினில் ஹிட்லரை சந்தித்தார். ஆனால் அவன் தனது போர் வெறியை தளர்த்தத் தயாரில்லை என்பதை நிரூபித்துக் கொண்டே இருந்தான்.

ஜெர்மன் ஆயுதப் படைகள் தொடர்ச்சியாக ஒத்திகைகளில் ஈடுபட்டன. விமானப் படை தம்மிடமுள்ள சகல நவீன விமானங்களையும் பரீட்சித்துப்பார்த்தது. நீர் மூழ்கிகள் அயல் நாடுகளின் கடற்பரப்பை ஊடுருவி நிலமையை அவதானிக்கத் தொடங்கின. பிரிட்டிஷ், பிரான்ஸ், போர்க்கப்பல்களும் தம்பங்குக்கு உளவுப் பணிகளை தீவிரப்படுத்தியிருந்தன. எந்நேரமும் போர் வெடிக்கலாம் என்ற நிலவரமே ஐரோப்பாவில் காணப்பட்டது. ஆனால் ஹிட்லர் தன்பலம் மீது கொண்டிருந்த அதீத நம்பிக்கையினால் வெற்றி நிச்சயம் என்ற நினைப்புடன் இருந்தான்.

தனது தளபதிகளை அழைத்து ஹிட்லர் நீண்ட போரொன்றுக்கு நாட்டை தயார்படுத்துமாறு உத்தரவிட்டான். 'உலகம் ஜெர்மனியை தோற்றவர்களின் நாடு' என்ற இளக்காரத்துடன் பார்க்கிறது. அந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டும். உலகிலேயே நாம்தான் வல்லமை படைத்தவர்கள் என்பது எமக்குத் தெரியும். ஆனால் அதனை நாம் மாத்திரம் அறிந்திருந்தால் போதாது எம்மிடம் வாலாட்டும் எதிரிகளும் உணர வேண்டும். எமது எல்லை முழுவதும் எம்மை பகைவர்களாக நோக்குபவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. அவற்றை நாம் கைப்பற்ற வேண்டும். உலகவரை படத்தில் ஜெர்மனியின் எல்லை விரிவடைய வேண்டும். அயல் நாடுகளில் ஜெர்மன் பிரஜைகள் மோசமாக நடத்தப்படுகிறார்கள்.

அதை அனுமதிக்க முடியாது. எமது மக்களின் உரிமைகளை மறுக்கும் அரசாங்கங்களுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும்" என்று தளபதிகள் மத்தியில் வீராவேசத்துடன் உரையாற்றினான் ஹிட்லர்.

***

ஹிட்லரிடம், யுத்தம் அவசியம்தானா என்ற தொனியில் மெதுவாகக் கேட்டாள் ஈவா பிரவுன். அவனுக்கு கோபம் வரும் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவன் கோபப்படவில்லை. சிரித்துக் கொண்டே பதில் சொன்னான் "எமக்கு எதிரிகள் இருக்கிறார்கள். யுத்தம் அவசியம்தான்."

அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை. போர் வெடித்தால் தமது நாட்டுக்கு என்ன ஆகுமோ என்று உள்ளூர பயம் ஈவாவுக்குள் இருந்தது. ஆனால் தனது நம்பிக்கையீனங்களை அவள் ஒருபோதும் ஹிட்லரிடம் வெளிப்படுத்தியதில்லை. எப்பொழுதுமே அவள் அவனை ஆமோதித்துக் கொண்டிருந்தாள். தன்னை எதிர்த்துப் பேசுவது ஹிட்லருக்கு பிடிக்காது என்பதை அறிந்திருந்த ஈவா முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் அவனுடன் உடன்பாடாகவே நடந்து கொண்டாள்.

### ஷானு

மெல்லிய விளக்கொளியில் தடிப்பமான போர்வையால் தன் உடலை மூடிக்கொண்டிருந்தாள் ஈவா. அந்தப் போர்வை அவசியமில்லை என்பது போல் இருந்தது ஹிட்லரின் பார்வை. அதை அவனே விலக்கட்டும் என்று பேசாதிருந்தாள். அவள் எதிர்பார்த்ததை அவன் செய்தான். மிக மெல்லிய இரவு உடை ஈவாவை மொத்தமும் காண்பித்துக் கொண்டிருந்தது. அவளது வெள்ளை மேனியில் பட்டுத்தெறிக்கும் விளக்கொளியால் பொன்னிறமாக இருந்தாள். போர் வெறி பிடித்த அந்த சர்வாதிகாரி அவளது மடியில் ஒரு அடிமையாக சரணடைந்து கிடந்தான். இந்த உலகம் முழுவதும் தன் ஆளுகையின் கீழ் வரவேண்டும் என்ற சிந்தனையில் இருந்தவன் ஈவாவின் பாதங்களில் மெதுவாக முத்தம் பதித்து அவளது உணர்வுகளை உயிர்ப்பித்தான். அவளது அசைவுகள் அவனை சூடேற்றின. உதறித்தள்ளிய போர்வைக்குள் மூடிக்கிடந்த இரகசியங்களை பாதி வெளிச்சத்தில் ஆராயத் தொடங்கினான் ஹிட்லர். அவளது சில சைகைகள் அவனை வேகப்படுத்தின. அவனது கைகள் அவளுக்கு போர்வையாகின. கடும் குளிரிலும் இருவருக்கும் வியர்த்தது.

***

இத்தாலியில் இருந்து முசோலினியின் முக்கிய தளபதிகள் இருவர் ஜெர்மனிக்கு விஜயம் செய்து போர்காலத்தின்போது இரு நாடுகளினதும் தொடர்பாடல்கள் குறித்து ஆராய்ந்தார்கள்.

ஜெர்மனியர்கள் வசமிருந்த நவீன தொடர்புக் கருவிகள் குறித்தும் அவற்றின் செயற்பாடுகள் குறித்தும் அந்த அதிகாரிகளுக்கு விளக்கப்பட்டது. ஆனால் அவர்களை நம்பி முழுவிபரத்தையும் தெரிவிக்கக் கூடாதென ஹிட்லர் உத்தரவிட்டிருந்தான்.

ஹிட்லருக்கு எவர் மேலும் பூரண நம்பிக்கை இருந்ததில்லை. தமது இராணுவ இரகசியங்களை பிறர் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதில் அவன் மிகவும் கவனமாக இருந்தான். ஜெர்மன் இராணுவ செயற்பாடுகளில் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் தலையெடுத்து விடக்கூடாது என்ற விடயத்தில் கடும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

அப்படியிருந்தும் ஜெர்மனிக்குள் உளவு பார்க்கும் வேலையை பிரான்ஸ் கச்சிதமாக செய்து வந்தது. ஜெர்மனியர்களும் அயல் நாடுகளில் உளவுப் பணிகளில் ஈடுபட்டனர். பெண்களிடம் இரகசியங்களை கொட்டிவிட வேண்டாம் என்று இராணுவ அதிகாரிகளுக்கு ஹிட்லர் கடும் உத்தரவு பிறப்பித்திருந்தான்.

இரண்டாம் உலக மகாயுத்தம் வெடிக்க முன்னர் பல தடவை ஜெர்மனியின் முக்கிய நகரங்களில் செயற்படும் விலைமாதர்கள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டன. சந்தேகத்துக்கு இடமான பலர் பின் தொடரப்பட்டார்கள். பலர் கைது செய்யப்பட்டார்கள். பெண்களை விட்டு இராணுவ இரகசியங்களை கறக்கும் செயல் முதலாம் உலக யுத்தத்தின் போது வெகுவாக நடைபெற்றதால் அந்தத் தவறை விடக்கூடாது என்று பல நாடுகளும் முனைப்பாக இருந்தன. அப்படியிருந்தும்கூட பிரிட்டிஷ், பிரான்ஸ், உளவாளிகள் தமது கைவரிசையை காண்பித்தார்கள்.

வருவான்...

# மூண்டது போர் 3

தருவது ~ தண்டாயுதன்



கடுங்குளிரிலும் யுத்தம் புரிவதில் பயிற்சி பெற்ற விசேட படையணிப் படையினர்

● அமெரிக்காவின் விசேட படையணி (Special Forces) ஆப்கானிஸ்தானில் தரை இறங்கியுள்ளது. அமெரிக்க இராணுவத்திலுள்ள இருபத்திரெண்டு லட்சம் வீரர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 46 ஆயிரம் கமாண்டோக்களை உள்ளடக்கியதே இந்த விசேட படையணி. அனைத்து விதமான தரையமைப்பு, காலநிலை என்பவற்றுக்கேற்றாற்போல இப்படையணி பயிற்சி பெற்றுள்ளது.

● கடுமையான விமானக்குண்டு வீச்சின் பின்னர் ஆப்கானிஸ்தானின் கந்தஹார் பிரதேசத்தில் இந்த விசேட படையணி கடந்தவாரம் தரையிறக்கப்பட்டது. ஹெலிகப்டர்கள் இப்படையைத் தரையிறக்கின. தாக்குதல்களை நடத்திய வேகத்திலேயே பின்வாங்கும் யுத்த தந்திரத்தை இவை கையாண்டன. கந்தஹார் தலிபான் போராளிகளின் புனிதப் பிரதேசம். தலிபான் தலைவர் ஓமார் மொஹமட் முல்லா தலைமறைவாகு முன்னர் இங்கே இருந்தார். அமெரிக்க விசேட படையணி கந்தஹாரில் தலிபான் போராளிகள் பாவித்த கட்டடங்களைத் தாக்கியிருந்தது. இதன் பின்னர் தளம் திரும்பிய விசேட படையணியின் ஹெலிக்காப்டர் ஒன்று பாகிஸ்தானில் தரையிறங்கியபோது விபத்துக்குள்ளானது. இதில் இரு அமெரிக்க வீரர்கள் பலியானார்கள். இந்த இருவருமே ஆப்கானிஸ்தான் யுத்தத்தில் உயிர் நீத்த முதலாவது அமெரிக்கப் படைவீரர்களாவர்.

● எதிர்வரும் நவம்பர் மாதம் 17ம் திகதி ரமழான் நோன்பு ஆரம்பமாகிறது. இந்த நோன்பு மாதத்துக்கு முன்பதாக குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை எட்டவே அமெரிக்கா முயலுகிறது. ரமழான் மாதத்திலும் தாக்குதல் நீடித்தால் முஸ்லிம் நாடுகளின் எதிர்ப்பை அமெரிக்கா கடுமையாக எதிர் நோக்க நேரிடும்.

● ரமழான் நோன்புகாலம் முடிந்ததும் ஆப்கானிஸ்தானில் குளிர்காலம் ஆரம்பமாகிறது. மேற்கு நாடுகளில் இருக்கும் குளிர் காலத்தை (Winter) விட ஆப்கானிஸ்தான் குளிர் மோசமானது. ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான இடங்கள் பனிக்கட்டிகளால் மூடப்பட்டு வாகனங்கள், ஆள் நடமாட்டங்கள் என்பவை முடங்கிவிடும் அபாயமே ஏற்படும். அமெரிக்காவின் விசேட படையணிகள் இந்த காலநிலைப் போராட்டத்துக்கு ஈடுகொடுக்கக் கூடியவை எனப்படுகிறது. மறுபுறத்தே தலிபான்கள் கூட அக்கடுங் குளிரைத் தாக்குப்பிடிக்கக் கூடிய மண்ணின் மைந்தர்கள் எனக் கூறப்படுகிறது.

● அமெரிக்காவின் ஆயுதத் தயாரிப்பாளரது 'காட்டில் மழை பெய்கிறது'. கூடுதலானளவு ஆயுதத்தளபாடங்களின் உற்பத்திக்கு அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் பச்சைக்கொடி காட்டியுள்ளது. ஏவுகணைகள், தொலை தொடர்புக் கருவிகள், விமானங்கள், ஹெலிக்காப்டர்களின் உதிரிப்பாகங்கள், கனரக வாகனங்கள் எனப் பல்வேறு ரகங்களிலும் ஆயுதத் தயாரிப்பாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பல பில்லியன் வருவாய்களை அவர்கள் வாரிச்சுருட்டவுள்ளனர்.

● போரிடும் படைவீரருக்கு இரும்புத் தலைக்கவசம் இன்றியமையாதது. ஆனால் இத்தலைக்கவசம் கூட மிக நவீனமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் தரை இறங்கியுள்ள அமெரிக்கப் படை வீரர்கள் அணியும் தலைக்கவசம் இரவில் பார்க்கக்கூடிய கண்ணாடிகள் பொருத்தப்பட்டது. நுண்ணிய தொலை தொடர்புக் கருவி இதில் இருக்கிறது. இதன் மூலம் படைவீரர் ஒருவருக்கொருவர் தொலைவில் இருந்தே பேசமுடியும். செய்மதிகளோடும் தொடர்பு கொள்ளும் அன்டனாக்கள் இத்தலைக்கவசத்தில் உள்ளன. இதன் மூலம் ஒரு போர்வீரர் இருக்குமிடம், அவரது பாதுகாப்புப் பற்றி தெளிவாகவே கண்காணிக்க முடியும்.

● ஆப்கானிஸ்தானில் யுத்தம் சூடுபிடித்துள்ளதையடுத்து, அப்பாவி ஆப்கானிஸ்தான் மக்கள் லட்சக்கணக்கில் நிர்க்கதியாகியுள்ளனர். அகதிகளாகியுள்ள இம் மக்கள் தமது நாட்டின் எல்லைகளைக் கடக்க முயன்று வருகிறார்கள். ஏற்கனவே பலர் பாகிஸ்தானுக்குள் ஊடுருவிவிட்டனர். ஈரான் புதிதாக அகதி முகாமொன்றை ஆப்கானிஸ்தான் மக்களுக்காகத் திறந்துவிட்டுள்ளது. உணவுக்காகப் போட்டியிடும் இம் மக்கள் கைகலப்பிலும் ஈடுபடுகிறார்கள். கொள்ளை, திருட்டு என்பவையும் பசி, பட்டினி காரணமாக இந்த அகதிகளிடையே வெளிப்பட்டுள்ளன. பாகிஸ்தான் தனது நாட்டுக்குள் வரமுயலும் அளவுக்கதிகமான அகதிகளை அடித்து விரட்டியும் வருகிறது.




பாரியளவு மனிதாபிமானப் பிரச்சனைகளை எதிர்நோக்கும் அப்பாவி ஆப்கான் அகதிகள்.


(தொடரும்)

# டெண்டுல்கரின் நகல்கள்

'ஃபியட் பாலியே' என்ற புதிய காரை பிரபல கார் உற்பத்தி நிறுவனமான 'ஃபியட்' அண்மையில் அறிமுகப்படுத்தியது. இந்த வைபவத்தில் கலந்து கொண்டார் இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர்.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செல்வதற்கு முன் டெண்டுல்கர் கலந்து கொண்ட இந்த வைப்வத்தில், சில இளைஞர்களும் யுவதிகளும் டெண்டுல்கர் முகம் போன்று வடிவமைக்கப்பட்டு முகமூடிகளை அணிந்து கொண்டு ஆர்ப்பரித்த காட்சிதான் இது. ■







# அமெரிக்க கட்-அவுட்

நம் நாட்டில் அரசியல் வாதிகளுக்கும் நடிக நடிகையர்களுக்கும் தான் ஆளுயர கட்-அவுட் வைத்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் அமெரிக்காவில் விளையாட்டு வீரர்களுக்குத்தான் கட்-அவுட் வைக்கிறார்கள்.

அமெரிக்க கால்பந்தாட்ட வீரரான ஜோய் ஹாரிங்டன் என்பவருக்கு வைக்கப்பட்ட கட்-அவுட்தான் இது. இதன் உயரம் எவ்வளவு தெரியுமா? 15 மீட்டர்.




# தகவல் பெட்டி



## வழுக்கு மரத்தில் (துவிச்சக்கர) வண்டிகள்

நம் நாட்டில் வருடப்பிறப்புத் திருவிழாக்களில் வழுக்கு மரம் ஏறும் போட்டி நடைபெறும். கிறீஸ் பூசிய மரத்தின் உச்சியில் இருக்கும் பரிசுப் பொருட்களைக் கஷ்டப்பட்டு ஏறி எடுப்பார்கள்.

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளை அடுத்து இந்தோனேசியா நாட்டில் இந்தப் போட்டிக்கு அமோக வரவேற்பு.

அங்கு வழுக்கு மரத்தில் பரிசுப் பொருளாக துவிச்சக்கர வண்டிகளை, வைத்து விடுகிறார்கள். ■

# 1308 வைரங்களாலான நெக்லஸ்

நகைகளை விரும்பாத பெண்களே உலகில் இருக்க மாட்டார்கள். அதிலும் வைரங்கள் பதிக்கப்பட்ட நகைகள் என்றால் கேட்கவும் வேண்டுமா?


படத்தில் வைரங்களால் இழைக்கப்பட்டு அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய நெக்லஸை அணிந்திருப்பவர் மலேசிய நாட்டின் மொடல் அழகி சோஃபி ரஹ்மான். அண்மையில் ஹொங்கொங் நகரில் இடம்பெற்ற ஏல விற்பனையொன்றில் 1308 வைரக்கற்கள் பதித்த இந்த நெக்லஸை அணிந்திருந்தார்.

ஸ்டேஃபானோ கண்டூரி என்பவரால் வடிவமைக்கப்பட்ட இந்த வைரநெக்லஸ் 134 காரட் எடை கொண்ட வைரங்களாலானது. இதே போன்ற சாயல் கொண்ட வைர நெக்லஸ் ஒன்றை 'மௌலின் ரொக்' என்ற ஆங்கிலப்படத்தில் நிக்கோல் கிட்மன் என்ற நடிகை அணிந்திருந்தார். அதன் பெறுமதி நம்மூர் மதிப்பில் சுமார் 90 இலட்சம் ரூபா.

# படிக்கத் தடையில்லை

வகுப்பறையில் ஆசிரியர்கள் சொல்வதை எவ்வளவு ஆர்வமாய்க் கவனிக்கிறார்கள் இந்தச் சிறுமிகள். இருக்காதா பின்னே? சொந்த நாட்டில் இந்தச் சிறுமிகளுக்குப் படிக்கத் தடை அல்லவா விதிக்கப்பட்டிருந்தது.

போர் மூண்டதை அடுத்து பாகிஸ்தானுக்கு வந்த ஆப்கான் சிறுமிகள் தான் இவர்கள். ஆப்கானிஸ்தானில் பெண் குழந்தைகள் படிப்புக்குத் தடை. பெஷாவரில் உள்ள அகதிமுகாமில் இருக்கும் பாடசாலை ஒன்றில் ஆர்வமாகப் படிக்கிறார்கள் ஆப்கான் அகதிச் சிறுமிகள்.



## பிரபுவின் இரண்டாவது படம்

தற்போது மலையாளத்தில் இருந்து மொழிமாற்றப்பட்டு வரும் 'ரோசி' படத்தில் சுரேஷ் கோபி, அபிராமி, சம்யுக்தா வர்மா ஆகியோர் நடித்திருக்கின்றனர். இப்படத்தை ராஜசேனன் என்ற மலையாள இயக்குநர் இயக்கியுள்ளார்.

ராஜசேனன் இப்போது பிரபு-ஜெயராம் இணைந்து நடிக்கும் மலையாளப்படம் ஒன்றை இயக்குகிறார். நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்டு வரும் இப்படம் பிரபுவின் இரண்டாவது மலையாளப்படம் ஆகும்.

ஏற்கனவே பிரபு, வினயன் இயக்கத்தில் 'லவ் அண்ட் வோர்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படம் இன்னமும் முடிவடையவில்லை.

## தெ.ஆபிரிக்காவில் கார்த்திக்-மீனா

நடிகை பத்மினி தயாரிக்கும் 'காதலே சுவாசம்' படத்தில் கார்த்திக்-மீனா ஜோடியாக நடிக்கின்றனர். படத்தின் முதற் கட்டப் படப்பிடிப்புக்காக தென்னாபிரிக்கா சென்றுள்ளது படப்பிடிப்புக் குழு.

முதலில் அங்கு கார்த்திக்-மீனா சம்பந்தப்பட்ட பாடல் காட்சிகள் படமாக்கப்படவுள்ளன.

## விற்கப்பட்ட தபு

இந்தியாவின் வட மாநிலங்களில் வறுமை காரணமாக ஆடு, மாடுகளை விற்பது போல் பெண்களை விற்கும் அவலம் நடக்கிறது.

அப்படி விற்கப்பட்ட ஒரு பெண்ணின் கதை தான் 'சாந்தினி பார்' என்ற இந்திப்படம். இதில் விற்கப்பட்ட பெண்ணாக நடிக்கிறார் தபு.

## கமலின் அடுத்தபடம்


தீபாவளிக்கு வெளியாகும் 'ஆளவந்தான்' படத்தையடுத்து கமலின் 'பம்மல் கே சம்பந்தம்' படம் அடுத்த வருட முற்பகுதியில் வெளியாகவுள்ளது.

இதையடுத்து கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் தமிழ்-இந்தி ஆகிய இரு மொழிகளில் தயாராகும் படத்தில் நடிக்கவுள்ளார் கமல். 'அவ்வை சண்முகி', 'தெனாலி' ஆகிய வெற்றிப்படங்களை அடுத்து கமல்-கே.எஸ்.ஆர். இணையும் இப்படத்தில் கமலுக்கு ஜோடியாக நடிக்கிறார் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய்.

## விஜய்யின் தொடர் விலகல்கள்

விக்ரமன் இயக்கத்தில் விஜய் நடிப்பதாக இருந்த 'மௌனமே காதலாகி' படத்தில் இருந்து விலகியதை அடுத்து மேலும் சில படங்களில் இருந்து விலகியுள்ளார்.

'பரியமுடன்' வின்சென்ட் செல்வா இயக்கத்தில் விஜய் நடிப்பதாக இருந்த படம், பாரதிராஜா இயக்கத்தில் விஜய் நடிப்பதாக ஒப்புக் கொண்ட 'லவ்', ஆபாவ் குட் ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் 50வது படம் ஆகியவற்றிலிருந்து விஜய் விலகிக் கொண்டுள்ளார்.



சூர்யா-லைலா
படம்: நந்தா

## தீபாவளிக்கு அஜித்தின் 3 படங்கள்

தீபாவளி தினத்தன்று அஜித் நடித்த 3 படங்கள் வருகின்றன. அஜித்-பிரியா கில் நடித்த 'ரெட்', அடுத்து இந்தியில் இருந்து தமிழுக்கு மொழி மாற்றப்பட்டு வரும் 'அசோகா'. சந்தோஷ் சிவன் இயக்கத்தில் ஷாருக்கான்-கரீனா கபூர் நடித்திருக்கும் இப்படத்தில் அஜித் வில்லனாக நடித்துள்ளார்.

அடுத்தது, 'பூவெல்லாம் உன் வாசம்'. இது எப்போதோ வெளியாகி விட்டதே என்கிறீர்களா? தீபாவளி தினத்திறகாக சின்னத்திரை ஒன்றில் இப்படம் விசேடமாக ஒளிபரப்பாகவுள்ளது.



லைலா-ரம்பா
படம்: த்ரீ ரோஸஸ்

## காதோடு சொல்லுகிறோம்

மூவேந்தர்களில் ஒருவரின் பெயரைக் கொண்ட நடிகர் அவர். 'இமய' இயக்குநரின் 'மண்வாசனைப்' படத்தில் அறிமுகமான அந்த நடிகர் விறுவிறுவென்று முன்னுக்கு வந்தார். மேலும் பல படிகள் ஏறியிருக்க வேண்டியவர் 'பெண்கள்' விஷயத்தில் கொஞ்சம் அப்படி இப்படியிருந்ததால் சறுக்கி விட்டார். இப்போது போதையின் பிடியில் சிக்குண்டு இருக்கும் அவர் அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறாராம்.

இவரும் மூவேந்தர்களில் ஒருவரது பெயரைக் கொண்டவர்தான். ஆனால் நடிகர் அல்ல இயக்குநர். சமீபத்திய படமான 'மகாபாரத பூமி' படத்தில், இவர் அறிமுகப்படுத்திய நடிகையுடன் 'நெருக்கமாக' இருந்தது பலரும் அறிந்த ஒன்று. அந்த நடிகையை இயக்குநர் இரகசியத் திருமணம் செய்தது பலரும் அறியாத ஒன்று. அந்த இயக்குநர் ஏற்கனவே திருமணமானவர் என்பது பலருக்குத் தெரிந்த ஒன்று.

கிரிக்கெட் வீரர்களுக்கு வரும் தசைப்பிடிப்பு இப்போது நடிகைகளுக்கும் தொற்றி விட்டது. அண்மையில் தொடையழகி நடிகைக்கு அவரது எடுப்பான தொடையில் 'பிடிப்பு' ஏற்பட்டதாம். ஆனால் நடிகையின் தாய்க்குலமோ அதற்கு வைத்தியம் பார்க்கவிடாமல், 'போட்டி நடிகை யாரோ சூனியம் செய்து விட்டதாகக் கூறி, மாந்திரீகர் ஒருவரை வரவழைத்து பரிகார பூஜை செய்தாராம்.

சமீபத்தில் வெளியான நடனப்புயலின் படம் வசூலில் பணத்தை 'அள்ளித்தர'வில்லையாம்... இது இப்படியிருக்க இதே நிறுவனம் தயாரிக்க உலகப் புகழ் பெற்ற ஆங்கில நகைச்சுவை நடிகரின் பெயரில் உருவாகி வரும் படத்தின் பாடல்கள் சரியில்லை என்று முன்றெழுத்து இளம் இசையமைப்பாளரிடம் அவட்சியமாக நடந்து கொண்டாராம். ஏற்கனவே நடிகர் மேல் கடுப்பாக இருக்கும் படத் தயாரிப்பாளர், புதிய படத்திலிருந்து நடிகரைத் தூக்க முடிவு செய்துள்ளாராம்.

## தீபாவளி ரேஸில் கலந்து கொள்ளும் படங்கள்

இம்முறை தீபாவளி ரேஸில் பல படங்கள் போட்டியிடப் போகின்றன. கமலின் 'ஆளவந்தான்', விஜய்யின் 'ஷாஜகான்', அஜித்தின் 'ரெட்', சூர்யாவின் 'நந்தா', மாதவனின் 'பார்த்தாலே பரவசம்', விஜயகாந்தின் 'தவசி' ஆகியவற்றுடன் விக்ரம் உட்பட முன்னணி நடிகர்களின் படங்கள் கோதாவில் குதிக்கவுள்ளன.

முன்னணி நடிகர்களின் படங்கள் பலத்த எதிர்பார்ப்புக்களுக்கிடையே இருக்க, எதிர்பார்ப்புக்களே இல்லாத படங்கள் முந்திக் கொள்வதும் உண்டு. இம்முறை எப்படியோ?



மாதவன்-ஸ்நேகா
படம்: பார்த்தாலே பரவசம்

திரையுலக மறுபக்கம் 21 தமிழ்நாட்டிலிருந்து மயன்

## நடிகரைத் தொடர்ந்து சென்று தாக்குதல் நடத்தும் மர்மக்கும்பல்

நான்கெழுத்துப் பெயரையுடைய நாயகன் இவர். சில வருடங்களுக்கு முன் மூன்றெழுத்து இயக்குநரால் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இவருக்கு அதன் பின் பல வாய்ப்புக்கள் வந்தன.

இருப்பினும் கதைத் தேர்வில் நடிகர் கோட்டை விட்டதால் இன்னமும் முன்னுக்கு வராமல் தவித்துக் கொண்டிருக்கிறார். என்றாலும் இரண்டாவது மூன்றாவது நாயகனாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

அண்மைக் காலமாக மர்மக் கும்பலொன்று இவரைத் தொடர்ந்து சென்று திடீர் திடீரென்று காரை மடக்கி, இவரை வெளியே இழுத்துப் போட்டு அடித்து உதைத்து வருகிறது.

பின்னர் ஏதோ எச்சரிக்கை செய்து விட்டுத் தலைமறைவாகி விடுகிறது அந்தக் கும்பல். தொடர்ந்து 3 முறை இப்படி நடந்துள்ளது.

மிக அண்மையில் இரண்டு பெயர்களுக்கு நடுவே இனிஷியல் கொண்ட படத்தின் படப்பிடிப்புக்காக இந்த இளம் நடிகர் காரில் விரைந்திருக்கிறார்.

போகும் வழியே காரை மடக்கிய அந்த மர்மக்கும்பல் வழக்கம் போல அடித்து உதைத்து விட்டு மறைந்தது. இதனால் படப்பிடிப்புக்கு தாமதமாகச் சென்றார் நடிகர்.

படப்பிடிப்பில் இரண்டாவது நாயகனாக நடிக்கும் இந்த இளம் நடிகருக்காகக் காத்திருந்தார் படத்தின் நாயகன். தாமதமாகச் சென்ற இளம் நடிகர் படத்தின் நாயகனிடம் நேராகப் போனார்.

இரத்தக் காயங்களுடன் வந்த இளம் நடிகரைப் பார்த்த அந்த 'நடிப்பின் நாயகன்' பதறிப் போய், தனியாக அழைத்துச் சென்று என்னவென்று விசாரித்தார்.

பிறகு உடனே பொலிஸில் புகார் செய்யும் படியும் பாதுகாப்புக்காகத் துப்பாக்கி லைசென்ஸ் ஒன்றைக் கேட்கும்படியும் இளம் நடிகருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார் படத்தின் நாயகன்.

அதுமட்டுமல்ல, "உடனடியாக டாக்டரைப் பாருங்கள் நீங்கள் இந்த நிலையில் நடிக்க வேண்டாம், போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி அன்றைய படப்பிடிப்பை இரத்துச் செய்துவிட்டார்.

உடனடியாக மருத்துவரைப்பார்த்த இளம் நடிகர், காயங்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டாரே தவிர பொலிசாரின் உதவியை நாடவில்லை.

பலமுறை தாக்கப்படும் இளம் நடிகர் ஏன் பொலிஸ் உதவியை நாடவில்லை? தாக்குதல் நடத்தும் மர்மக்கும்பல் இவரை மிரட்டுவதற்காகத் தாக்குகிறார்களா? அப்படியென்றால் எதை எதிர்பார்த்து மிரட்டுகிறது அந்தக் கும்பல்? அந்தக் கும்பலிடம் நடிகர் சிக்கியது எப்படி?

இப்படிப் பல கேள்விகள் எழுந்தாலும், சம்பந்தப்பட்ட இளம் நடிகருக்கும் அந்த மர்மக் கும்பலுக்கும் தான் வெளிச்சம்.

## மும்தாஜின் பாதிப்பு

கடந்த வருடம் 'குஷி' படத்தில் விஜயுடன் ஆட்டம் போட்டு மும்தாஜ் நடித்த 'கட்டிப்புடி கட்டிப்புடிடா' பாட்டு எந்தளவு ஆட்டம் கிளப்பியதோ, அந்தளவுக்கு இந்த வருடம் 'சாக்லெட்'டில் மும்தாஜ் ஆட்டம் போட்டிருக்கும் 'மல மல மருதமல' பாடல் ஆடாக இருக்கிறதாம்.

'சாக்லெட்' படம் பார்க்க தியேட்டருக்குச் செல்லும் சில இளைஞர்கள் இந்தப் பாடல் முடிந்ததும் எழுந்து வெளியே போய் விடுகிறார்களாம். அந்தளவுக்கு இந்தப் பாடல் காட்சியில் மும்தாஜ் அவர்களைப் பாதித்திருக்கிறார்.

## ஏ.வி.எம். தயாரிக்கும் 'ஜெமினி'

பல வருடங்களுக்கு முன் போட்டி போட்டுக் கொண்டு பல படங்களைத் தயாரித்த நிறுவனங்களில் ஒன்று எஸ்.எஸ்.வாசனின் ஜெமினி நிறுவனம்.

தற்போது இதே பெயரில் இன்னொரு பழம்பெரும் படநிறுவனமான ஏ.வி.எம். நிறுவனம் படமொன்றைத் தயாரிக்கிறது.

வித்தியாசமான கதையமைப்பில் மிகுந்த பொருட்செலவில் உருவாகவிருக்கும் இப்படத்தில் விக்ரம் கதாநாயகனாக நடிக்கிறார். ஏனைய நடிக நடிகையர் தேர்வு நடைபெற்று வருகிறது.

ஒளிப்பதிவு வெங்கடேஷ், இசை பரத்வாஜ், பாடல்கள் வைரமுத்து, கதை-திரைக்கதை-வசனம்-இயக்கம் சரண்.

## அழகி விலகல்

பெற்றோரை எதிர்த்துக்கொண்டு இந்தி நடிகர் சல்மான் கானைத் தீவிரமாகக் காதலித்து வந்த முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய், இப்போது அவரிடமிருந்து விலகி இருக்கிறார்.

என்ன நடந்ததோ தெரியவில்லை, சில மாதங்களாக இவர்கள் இருவருக்கிடையிலும் பேச்சுவார்த்தைகள் இல்லை. அத்துடன் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதும் இல்லை.

## பிரகாஷ்ராஜ்-மீனா இணைந்து நடிக்கும் 'தயா'

பாலச்சந்தரின் 'டூயட்' படத்தில் அறிமுகமான பிரகாஷ்ராஜ் 'டூயட் சினிமா' என்ற பட நிறுவனத்தைத் தொடங்கி 'தயா' என்ற படத்தைச் சொந்தமாகத் தயாரிக்கிறார்.

இதில் பிரகாஷ்ராஜ் கதாநாயகனாக நடிக்க, முதன் முறையாக இவருடன் ஜோடி சேர்கிறார் மீனா. இவர்களுடன் ஜனகராஜ், லட்சுமி, ரமேஷ் கண்ணா, காக்கா ராதா கிருஷ்ணன், தாமு உட்பட பலர் நடிக்கின்றனர்.

இப்படத்தில் பிரகாஷ்ராஜிற்கு இணையான வேடமொன்றில் நடிக்கிறார் ரகுவரன்.

ஒளிப்பதிவு விஜய் மில்டன், இசை பரத்வாஜ்.

கதை-திரைக்கதை-இயக்கம் புதியவரான செந்தில்குமார். இவர் ஆர்.வி.உதயகுமார், அகத்தியன் ஆகிய இயக்குநர்களிடம் உதவியாளராகப் பணியாற்றியவர்.

## மனிஷா நடிக்கும் 'கனவே'

'கலகலப்பு' படத்தைத் தயாரித்த ஏ.எல். அழகப்பன் தன் மகன் உதயாவை வைத்துத் தயாரிக்கும் புதிய படம் 'கனவே'.

இதில் மனிஷா கொய்ராலாவின் தம்பி சித்தார்த் இரண்டாவது நாயகனாக அறிமுகமாகிறார். இவர்களுக்கு ஜோடிகளாக மும்பைப் புதுமுகங்கள் அறிமுகமாகவிருக்கின்றனர்.

இவர்களுடன் மனிஷா கொய்ராலா முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார். 'பம்பாய்', 'இந்தியன்', 'முதல்வன்', 'ஆளவந்தான்' ஆகிய படங்களை அடுத்து மனிஷா நடிக்கும் தொகுதித் தமிழ்ப்படம் இது.

பி.சி.ஸ்ரீராமிடம் உதவியாளராக இருந்த தீரன் ஒளிப்பதிவைக் கவனிக்க, ஆகோஷ் இசையமைக்கிறார்.

கதை-திரைக்கதை-இயக்கம் ப்ரிவியாக மணிரத்னத்தின் உதவியாளரான இவர் 'சாந்தி சாந்தி சாந்தி' என்ற கன்னடப் படத்தை இயக்கியுள்ளார். இது 'ரிலாக்ஸ்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளியானது.



அஜித்-பிரியாகில்
படம்: ரெட்



விஜய்-ரீச்சா பலோட்
படம்: ஷாஜகான்

## மினிசினி

- சசி இயக்கத்தில் புதுமுகம் ஸ்ரீகாந்த்-பூமிகா ஜோடியாக நடிக்கும் 'ரோஜாக் கூட்டம்' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடித்து வருகிறார் ஆகாஷ்.
- ரம்பா-ஜோதிகா-லைலா நடிக்கும் 'த்ரீ ரோஸஸ்' படத்திற்கு இசையமைக்கவுள்ளார் ரஞ்சித் பரோட். இவர் 'விஜபி' படத்திற்கு இசையமைத்தவர்.
- விக்ரமன் இயக்கத்தில் விஜய் நடிப்பதாக இருந்த 'மௌனமே காதலாகி' படத்தில் சூர்யா நடிப்பது உறுதியாகி விட்டது. இப்போது படத்தின் பெயரையும் 'உன்னை நெஞ்சேசேன்' என்று மாற்றியுள்ளார்கள்.
- பிரத்யுஷாவுடன் இணைந்து 'பொன்னான நேரம்' படத்தில் நடித்து வரும் ராமராஜன், அடுத்து சொந்தமாகத் தயாரித்து இயக்கும் படத்தில் நடிக்கவுள்ளார். இதில் ரோஜா நாயகி.
- சுரேஷ் இயக்கத்தில் 'ஜூனியர் சீனியர்' படத்தில் சீனியராக மம்முட்டி நடிக்கிறார். ஜூனியராக நடிப்பவர் ரவிச்சந்திரனின் மகன் அம்சவிர்தன்.
- அண்மையில் வெளியாகி வெற்றி பெற்ற 'குட்டி' படத்தைப் போன்ற படமொன்றை இயக்கவுள்ளார் சின்னி ஜெயந்த். 'அம்மி' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தில் நாயகியாக நடிக்கிறார் சுவாட்வரி.
- கே.பாலசந்தர் இயக்கத்தில் மாதவன்-சிம்ரான்-ஸ்நேகா நடிக்கும் 'பார்த்தாலே பரவசம்' படத்தைத் தயாரித்து வரும் கவிதாலயா நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படம் ஒன்றை வசந்த் இயக்கவுள்ளார்.
- இராமநாராயணன் இயக்கத்தில் ரோஜா இரட்டை வேடங்களில் நடித்து வரும் 'வேப்பிலை அம்மன்' படத்தின் பெயரை இப்போது 'கோட்டை மாரியம்மன்' என்று மாற்றியுள்ளார்கள்.

## தமிழுக்கு வரும் 'அங்காள பரமேஸ்வரி'

'நாகவல்லி', 'நாகதேவதை', 'துர்க்கை அம்மன்' போன்ற மொழி மாற்றுப் பக்திப் படங்களைத் தயாரித்த தேவிச்சித்ரம் நிறுவனம் தெலுங்கில் இருந்து தமிழுக்கு வரும் புதிய மொழி மாற்றுப் படத்தைத் தயாரிக்கிறது.

மீனா-ரோஜா-பிரேமா ஆகிய மூவர் நாயகிகளாக நடிக்கும் இப்படத்திற்கு 'அங்காள பரமேஸ்வரி' என்று பெயரிடப்பட்டுள்ளது. மற்றும் சாய்குமார், அனுஜா, சுசன்கான் உட்பட பலர் நடிக்கிறார்கள்.

இப்படத்தில் அலமேலு என்ற ஆடும் நடிக்கிறது.

வாலியின் பாடல்களுக்கு தீனா இசையமைக்கிறார். கதை-திரைக்கதை அமைத்து இயக்கியிருப்பவர் காசிப்பிரகாஷ்.

## முகப்பில்

விஜய்

ஐஸ்வர்யா ராய்

## ...நாடுகளில் கலைச்சேவை

...காலம் முன்னணி நடிக, நடிகைகள் தான ...சிகள் என்ற பெயரில் 'கலைச் சேவை' செய்ய ...களுக்குப் பறப்பார்கள்.

...இந்தப் பட்டியலில் கவர்ச்சி நடிகைகளும் ...டார்கள். பாடல் காட்சிகளில் குலுக்கல் நடனம் ...போதும் பாபிலோனா, பானு ஆகியோர் 'கலைச் ...சேவைக்' தனித்தனிக் குழுக்களாக வெளிநாடுகளுக்குச் ...ள்ளார்கள்.

## ...ர்த்துகிறார் ஜோதிகா

...படத்திற்குப் படம் தனது ஊதியத்தைக் ...கொண்டே போகிறார். 'த்ரீ ரோஸஸ்' படத் ...லட்சம் இருந்த ரூபாய் வாங்கியுள்ள ஜோதிகா ...ரமாக ஒடுவதை அடுத்து தனது ஊதியத்தை ...ாக்கி விட்டுள்ளார்.

...புதிதாக இயக்கவுள்ள 'ஒன் டு த்ரீ' என்ற ...ஜோதிகாவை நடிக்கக் கேட்டபோது, 60 இலட் ...2 இலட்சத்தைக் குறைத்து 58 இலட்சம் ...ளார்.

## ...ன்று ...டேபர்ம

...கதாநாயகனாக ...'படத்தில் அவ ...யாக ரிமி கன்னா ..., அத்துடன் தேர்ந்த ...அழகியையும் ஒரு ...நடனமாட வைத் ...இப்போது மேலும் ...மாடல் அழகியை ...பாடல் காட்சி ஒன்றை ...ள்ளார்.

## கவர்ச்சி காட்டும் சந்தர்ப்பம்

குணாலுக்கு ஜோடியாக 'நைல் நதியே' நடித்து வரும் என்ற படத்தில் நடிக்கிறார் பிரத்யுஷா. 'மனுநீதி', 'சவுண்ட் பார்ட்டி' ஆகிய படங்களின் தயாரிப்பாளர் தான் 'நைல் நதியே' படத்தையும் தயாரித்து வருகிறார்.

இந்த 3 படங்களிலும் நாயகி பிரத்யுஷாதான். முதலிரு படங்களிலும் கவர்ச்சி காட்ட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்கிறார் பிரத்யுஷா. 'நைல்நதியே' படத்தில் தன் முழுக் கவர்ச்சித் திறமையையும் காட்ட சந்தர்ப்பம் கிடைத்ததாக சந்தோஷப்படுகிறார்.

## செல்வா இயக்கத்தில் விக்ரம்

'பார்த்தாலே பரவசம்' சிறப்பாக வந்திருப்பதில் உற்சாகமாக இருக்கிறது கவிதாலயா நிறுவனம். படத்தில் பாலச்சந்தரின் இணை இயக்குநராகப் பணியாற்றியுள்ளார் இயக்குநர் 'தலைவாசல்' செல்வா.

பாலசந்தரிடம் உதவியாளராகப் பணியாற்றிய செல்வா, தனியாக வந்து பல வெற்றிப்படங்களை இயக்கியவர். அவருக்கு உதவி செய்யும் பொருட்டு அவரது 100வது படத்தில் இணை இயக்குநராகப் பணியாற்றிய செல்வாவுக்கு ஒரு படத்தைத் தயாரிக்க வாய்ப்பளித்திருக்கிறது.

செல்வா இயக்கத்தில் அநேகமாக விக்ரம் நாயகனாக நடிப்பார் எனத் தெரிகிறது.

## இலங்கைப் பெண் லைலா


'சேது' வெற்றிப் படத்தை அடுத்து 'நந்தா' படத்தை மிகக் கவனமாக எடுத்து வரும் பாலா, இம்முறை இந்தியா செல்லும் இலங்கை அகதிகள் பற்றிய கருவைக் கதையாக்கியுள்ளார்.

இதில் சூர்யா இலங்கைத் தமிழராக நடிக்கிறார் என்பது தெரியும். லைலாவும் இலங்கைத் தமிழ்ப் பெண்ணாகவே நடிக்கிறார்.

## லாராவின் காதலர்

அர்ஜுன் ஜோடியாக 'அரசாட்சி' படத்தில் நடித்து வரும் முன்னாள் உலக அழகி லாரா தத்தா விரைவில் அமெரிக்காவில் குடியேறவுள்ளார்.

அமெரிக்க விளையாட்டு வீரரான கெல்லி டோரியைக் காதலிக்கும் லாரா, ஹொலிவுட் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். இதில் பிரபல நடிகரான நிக்கலஸ் கேஜ் கதாநாயகனாக நடிக்கிறார்.



மனிஷா கொய்ராலா
படம்: ஆளவந்தான்

# சிலை மனிதர்கள்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டபோது, கட்டடங்களுக்கு வெளியே, கையில் சூட்கேசுடன் சீமெந்து பெஞ்ச் ஒன்றில் அமர வைக்கப்பட்ட வெண்கலத்தாலான மனிதர்தான் இப்படிக் காணப்படுகிறார்.

கட்டட இடிபாடுகளின்போது, ஏற்பட்ட தூசியால் மனிதர்கள் பலர் சிலைகள் போல் காணப்பட்டனர். வெண்கலத்தாலான இந்த மனிதரும் தூச் படிந்து இருந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இவர் கையில் பூக்களுடன் காட்சியளிக்கிறார்.

## தூரதேச நண்பனுக்கு...

நம் தேசக்காற்றை
சுவாசிக்க ஏங்கும்-தேச
விசுவாசியே..!
சுதேசம் பறிக்கப்பட்ட
தேசத்தின் ஓரத்தில்
நின்றபடி-உனக்கெழுதும்
ஓலை இது!
***
உரிமை மறுக்கப்பட்ட
தேசத்தில் வசிப்பதால்-நான்
நலமில்லை...
சம்பிரதாயத்திற்கு-உன்
'நலம் அறிய ஆவல்.'
***
நம் பள்ளி நாட்களில்
பாதம் பதித்த
அத்தனை வீதிகளையும்
அன்று நமக்கு
இனிப்புத் தந்த-அத்தனை
தெருக்கடைகளையும்
இன்று தொலைத்துவிட்டு
நிற்கிறேன்.
***
அந்த இடத்தில்-இப்போது
நீயும் நானும்
உண்ண விரும்பிடாத
'தேன்குழல்' இனிப்பு
வடிவில்
***
ஏதேதோ..
பெயர்ப் பலகைகள்
கண்முன்னே!
***
என்னை
அடையாளம் கண்டு
கொள்ளாத
எத்தனையோ
மனிதர்கள்...!
எனக்குப் புரியாத
ஏதோவொரு-மதலை
பாஷைகளைப்
பேசிக்கொண்டு...
***
நண்பனே...!-என்
தேசத்தில் நானே..
விசாரிக்கப்படுகிறேன்!
விருந்தாளிகளால்...
***
ஒரு நாள்!-நீ
என்னைத் தேடி
நம் தேசம் வந்தால்..
என் கல்லறையை
நேசிக்க வேண்டி
மயானத்தையே!
தேடியலையப் போகிறாய்.
நம்மினம்
வாழ்ந்ததாய் அடையாளம்
காட்ட அதுவொன்றே
***
இன்று
மீதப்பட்டிருக்கிறது.
நாளை அதுவும்
இருக்கப்போவதில்லை!
***
என் தேசக்காற்றை
சுவாசிக்க ஏங்கும்
சுதேச விசுவாசியே...!
நாளை நம்
தேசம் தேடித் தேடி
'சமாதான நகரில்'
அலையாதே!

'சம்பூர் எம்.வதனரூபன்.

உன்
கடி தவரிகளுடன்
கண்ணீர்த்துளிகளையும் சேர்த்து
அனுப்பியிருந்தாய் படித்தேன்!
***
வறுமைக்கும் புலமைக்கும் போல்
வெள்ளைக்கும் நீலத்திற்கும்
எப்போதுமே வெறுப்பு
ஏற்படாது என்பதனை
நான் சொல்லித்தான்
தெரியவேண்டுமா உனக்கு...?
***
என் ஓரப்பார்வையின்
ஒய்யாரங்கள்
மரணித்துக் கிடந்தவுன்
புலன்களை
மறுசீரமைத்ததென்று
மெச்சியிருந்தாய்...!
***
என் பார்வைகளின்
மகிமை கண்டு
எனக்கும் சந்தோஷம்தான்!
***
என் மனமென்ன
மரக்கட்டையா..?
***
ஆசைகளையெல்லாம்
சுட்டுப்பொசுக்கிவிட்டு
சும்மாயிருப்பதற்கு!
***

## வா!

மௌன வேஷம்
போடுவதாயொரு
புரளியினை
புரட்டிவிட்டிருந்தாய்..
***
மௌனம் ஒன்றும்
மறுப்பதற்கான மொழியல்லவே
***
அது சம்மதத்தின்
சரித்திரச் சைகையே!
***
போயும் போயும்
பர்தாவில் படியும்
புழுதியாய் இருந்துவிட்டு(ப்)
போகவா இத்தனை
சித்திரவதைக்குள்ளானாய்..!
***
சலவைச் செய்யும்போது
உன்னைச் சாக்கடையில்
சேர்த்துவிடுவதை என்னால்
சகித்துக்கொள்ள முடியாது!
என் முகத்தோடு
முகம் புதைத்து
முத்தம் கொடுக்கும்
பர்தாவாகவே வந்து
குந்திக் கொள்!
***
வா!
வந்துவுன் காதலை
என் காதருகே கத்தி(ச்)
சொல்லிவிட்டுப் போ!

து.பிரபாகர்-ஹப்புத்தளை.

# தேன் கிண்ணம்

## ஏங்கும் விழிகள்

இமைகள் இரண்டின்,
நடுவில் சிறைப்பட்டிருந்த,
என் விழிகளை,
உன் இமைகள்,
சிறைப்படுத்தின!
***
உன்,
நிரந்தரமற்ற கனவுகளை,
விழிகளில் சுமந்து
வாழ்ந்தேன்.
இன்று ஏங்கும்,
விழிகளில் நீ சுமக்க
வைத்தது கண்ணீரைத்தானே.?
***
பசுமையான என் வாழ்வில்,
உதித்து பாச வேஷத்தால்,
என்னை வென்று
ஒன்றாகவே பள்ளி சென்று,
சில நாட்களாய் பழகி,
தொடர் நாட்களில் பிரிந்தாய்.
***
அன்று உன்,
வரவுக்காய் ஏங்கிய
என் விழிகள்,
இன்று உன் கனவுக்காய்,
ஏங்குகின்றன.

எஸ்.சசிகலா-ஹாலி-எல.

## அமுதவிஷம்

மரண மந்திரத்தை
உன்
உதடுகள்
புகையினால்
உச்சரிக்கின்றன.
***
சிவப்பு நெருப்பு
உன்
புதைகுழியின்
திக்கைக் காட்டும்
கலங்கரை விளக்கு!
***
கீழே...
சிந்திவிழும்
சாம்பல்...
எமன்-உன்
எதிரே நிற்கின்றானென்பதை
எச்சரிக்கின்றது...
***
உன் உதடுகளில்...
நெருப்புத் தூரிகையால்
கறுப்புச் சித்திரம்
தீட்டும்
நிக்கோட்டின் ஓவியன்கூட
ஒரு வகையினில்..
ஓர் எச்.ஐ.வி.தான்!
***
உன்னை
இன்பத்திலாழ்த்தி
சந்தோஷப்படுத்தவும்
துன்பத்திலாழ்த்தி...
வேதனைப் படுத்திக்
கொல்லவும்
உருவாக்கப்பட்ட
அமுதவிஷம்!
***
சிகரட்-
மனிதவேலியை
அரிக்கும்
கறையான்!!


கலையன்பன் நிலாம் (தாராபுரம்)

## காதல் நாயகி

காதல் என்ற காவியத்தை தேர்ந்தெடுத்தேன்!
ஆரம்பமே சுவையானதால்,
என்னையே முழுமையாக காவியத்திற்காய்,
கொடுத்து நின்றேன்.
அதன் நாயகியை மட்டும் நேசித்தேன்.
பசியை மறந்தேன்.
படுக்கையை இழந்தேன்.
கண் மூடாமல் கனவு கண்டேன்.
கண்ணையே தொலைத்து நின்றேன்.
உறவுகளை வெறுத்தேன்.
காரணம் இல்லாமல் சிரித்து நின்றேன்.
உலகமே காவியத்தின் நாயகி,
என நினைத்தேன்-
உற்றார்
ஆதரவையெல்லாம் இழந்து நின்றேன்
காவியத்தை எழுதி முடிப்பதற்குள்
சிதைந்து போனேன்.
என் வாழ்வினையே இன்னொருவர்
எழுதும் நிலைக்கு ஆக்கிவிட்டேன்.

எம்.எச்.ஹிலாம், பொத்துவில்-02.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். சதீஸ்குமார்,
வயது: 16
முகவரி: கல்வயல், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எஸ். கோமளா,
வயது: 28
முகவரி: இல.460/6, சக்கரியாஸ் வீதி, சீலாமுனை, மட்டுநகர்.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எல். அஷ்ரப்,
வயது: 20
முகவரி: 17/ஏ, மத்ரசா வீதி, கல்முனை-09
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

## நில் கவனி முன்னேறு

பாஸ்ச்சர் என்ற விஞ்ஞானி தன்னுடைய ஆராய்ச்சியின் பயனாக டார்ட்டாரிக் அமிலத்தின் இயல்பினைக் குறித்து அதுவரை கண்டு அறியப்படாத உண்மை ஒன்றைக் கண்டுபிடித்து வெளியிட்டார்.

அதே சமயத்தில் உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சு நாட்டு அறிவியல் அறிஞரான பையட் என்பவர் டார்ட்டாரிக் அமிலத்தின் இயல்பு குறித்து நீண்ட நாட்களாக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்.

ஆனால் அவர் தன்னுடைய முயற்சியில் வெற்றியடையவில்லை. இந்தப் பிரச்சனையின் தொடர்பாக அறிஞர் பாஸ்ச்சர் வெற்றிபெற்று விட்டதை பையட் அறிந்தார். அவர் பொறாமை கொள்ளவில்லை.

பெருமிதம் அடைந்தார். பாய்ச்சர் இருக்கும் இடம் தேடி தாமே வந்து அவரைக் கட்டித் தழுவி பாராட்டினார். வாழ்த்துக்களை அள்ளி வழங்கினார்.

"என்னால் கண்டுபிடிக்க முடியாமல் போன உண்மையினை நீங்கள் கண்டுபிடித்தது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளித்தது. உங்களுடைய வெற்றி விஞ்ஞான உலகிற்கும் மனித குலத்திற்கும் கிடைத்த வெற்றி" என்று மனமார வாயார புகழ்ந்து பாராட்டினார்.

பையட் முதுபெரும் கிழவர் பாய்ச்சரோ இளைஞர். வயது வித்தியாசத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல் ஆராய்ச்சிக்கு மதிப்பளித்தார்.

தன்னைவிட இளைஞராக இருந்தும், பாய்ச்சரை பெருமை பொங்க வாழ்த்தினார்.

இந்திய அறிவியல் அறிஞர் பி.ஸி.ரே, ஒரு கூட்டத்தில் கூறிய சொற்களை நினைத்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். "ஆராய்ச்சிக் கூடத்தில் என்னுடைய மாணவர் என்னைத் தோற்கச் செய்யும் ஒரு நிலை ஏற்பட்டால்

அதனைக் கிடைத்தற்கரிய பெரும் பேறு என்று கருதுவேன்" என்கிறார் பி.ஸி.ரே.

ஆனால் நாமோ எப்பொழுதும் எதிலும் பொறாமைப்பட்டுக் கொண்டே இருக்கிறோம்.

அவர் அப்படி வாழ்கிறாரே, இவர் காரில் போகிறாரே என்று பொறாமைப் பட்டு நம்மை நாமே வேதனையில் ஆழ்த்தி விடுகிறோம். இது நமக்குத் தேவையே இல்லை. பொறாமையால் ஒரு மனிதன் எப்பொழுதும் சிறப்படைய மாட்டான்.

'பொறாமையைப் போன்ற பெரிய குற்றம் வேறு ஒன்றும் இருக்க முடியாது' என்கிறார் சர்ச்சில். அந்துப் பூச்சி ஆடையை அரிப்பது போல பொறாமை நம்மை அழித்துவிடும்.

### பொறாமை ஒரு கெட்ட ஆமை



'பொறாமையை ஆரம்பத்திலேயே கழுத்தை நெரித்து விட வேண்டும். இல்லையென்றால் அது வலிமை அடைந்து உன்னையே கொன்று விடும்' என்று எச்சரிக்கிறார் அறிஞர் டேவனைட்.

'நெருப்பு விறகைத் தின்று விடுவது போல பொறாமை ஒருவன் செய்த நன்மையைத் தின்று விடுகிறது. இது ரோமத்தை நாசம் செய்யும் கிருமிகள் அல்ல; உடலைத் தின்றுவிடும் கிருமிகள்' என்கிறார் நபிகள் நாயகம்.

மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதை விட்டுவிட்டு பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்ளும் பண்பை வளர்த்துக் கொள்வது நம்முடைய வெற்றிக்குத் துணை புரியும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

28.10.2001 தொடங்கி 03.11.2001வரை

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) எடுத்த கருமங்கள் சில தடையாகும். குடும்பத்தில் வீண் சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும். பொருள் வரவு சுமாராக இருக்கும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள், உரிய இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்து முன்னரை) தொழில் கஷ்டங்கள் தீர்ந்து முன்னேற்றம் உண்டாகும். பொருளாதாரம் சிறந்து விளங்கும். உத்தியோக ரீதியாக இருந்துவந்த கஷ்டங்கள் தீரும். மாணவருக்கு கல்வியில் நற்பலன் கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் மத்திமமாக பெறுவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### மிதுனம்:

(மிருகசீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர் பூசத்து முன்முக்கால்) தொழில் சிறப்பும், காரியானுகூலமும் உண்டாகும். எதிர்பார்த்த கருமங்களில் வார இறுதியில் தடையுண்டாகும். உத்தியோகஸ்தர்களின் பதவிகளில் மாற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். முயற்சிகளில் வெற்றியுண்டாகும். பொருள்வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### சிங்கம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால், தொழிலில் உயர்ச்சியும், பணவரவும் உண்டாகும். எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்கள் எதிலும் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 06.

### கன்னி:

(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) தொழில் நிலையில் சிறிது பிரச்சனை காட்டும். வெளியிடப் பிரயாணங்களால் கஷ்டம் உண்டாகும். பொருள் வரவு தாமதமாகும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) மனக் கவலை தீரும். பொருள்வரவு சிறந்து விளங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்களுக்கு நன்மைகள் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வித் தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் நிலையில் பிரச்சனை நிலவும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் தோன்றி மறையும். பொருளாதாரம் மந்தமடையும். உத்தியோகத்தில் உள்ளோர் இடமாறங்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கிரக நிலை

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன் |
| தனு | - கேது |
| மகரம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு |
| கன்னி | - வெள்ளி |

சந்திரன் , மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### தனு:

(மூலம்பூராடம், உத்தராடத்து முதற் கால்) கருமங்களில் வீண் தடை ஏற்படும். குடும்பத்தில் இருந்து வந்த சச்சரவுகள் மறையும். பொருளாதாரம் சிறந்து விளங்கும். உத்தியோக ரீதியான பிரச்சனைகள் சிலருக்கு தீரும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### மகரம்:

(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) மனக்கஷ்டங்கள் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வி கஷ்டங்கள் குறையும். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) தொழிலிலும், குடும்பத்திலும் சந்தோஷ நிலை தோன்றும். பொருளாதார ரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### மீனம்:

பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி தொழில் நிலையிலும், குடும்பத்திலும், சந்தோஷம் நிலவும். பொருள் வரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 01.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## புருஷன் வீட்டில் வாழப்போகும் பெண்ணே!



திருமணமாகிப் புருஷன் வீட்டிற்கு அடியெடுத்து வைக்கும்போது ஒரு புறம் மகிழ்ச்சி, இன்னொரு புறம் தாங்க முடியாத சோகம். தன்மீது உயிரையே வைத்திருக்கும் பெற்றோரைப் பிரிந்து செல்வது அவ்வளவு எளிதா என்ன?

மனதைத் திடப்படுத்திக்கொண்டு, புகுந்த வீடு செல்லும் பெண்கள் மாமியார், மைத்துனிமார் ஆகியோரை சமாளித்தும் அனுசரித்தும் போகவேண்டும். இது கொஞ்சம் கூடிக்குறைந்தால் தோல்விதான் ஏற்படும்.

புகுந்த வீட்டில் நன்றாக நடந்து கொள்ள பெண்கள் தமது தாய்மாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அம்மாக்களும் மகளின் திருமணத்திற்கு முன்பே யார் யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

* மகளின் மனதில் தன்னம்பிக்கையை விதைக்கும் வண்ணம் பேசவேண்டும். மணவாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிராமல் நல்ல விஷயங்களைச் சொன்னால் மகளின் மனதில் உள்ள பய உணர்வு ஒழியும்.
* மாமியார் எவ்வளவு கொடுமைக்காரியாக இருந்தாலும் அவர்களை எப்படி வழிக்குக் கொண்டுவர முடியும் என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.
* கணவனுடன் வாழப்பிடிக்கவில்லை என்றால் தற்கொலைக்கு முயலாமல் வீட்டிற்கு அழைத்து வந்து என்ன செய்வது என்று முடிவெடுக்க வேண்டும்.
* புகுந்த வீட்டில் பிரச்சனை என்று மகள் பிறந்த வீட்டிற்கு வந்தால் அவரை மிரட்டி மறுபடி அனுப்பாமல், ஆறுதலாக நடந்தவற்றை விசாரித்து முடிவெடுக்க வேண்டும். அதற்காக சின்னச் சின்னப் பிரச்சனைக்காகப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வராமல் இருக்கும்படியும் பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.
* மகளுக்குத் திருமணம் செய்து வைத்தால் தனது கடமை முடிந்து விட்டது என்று அம்மாக்கள் இருந்துவிடக் கூடாது.
* தனக்குத் தெரிந்த அத்தனை விஷயங்களையும் மகளுக்குக் கற்றுக்கொடுப்பது தாயின் கடமை ஆகும்.

## பேரீச்சம்பழ மில்க் ஷேக்

இரத்தம் குறைவாக இருப்பவர்களை பேரீச்சம்பழம் சாப்பிடும்படி கூறுவார்கள் மருத்துவர்கள். நார்ச்சத்து அதிகம் கொண்ட பேரீச்சம் பழத்தில் கொழுப்பு மற்றும் சோடியம் ஆகியவை கிடையாது.

பிரக்டோஸ், குளுக்கோஸ், சுக்ரோஸ் போன்ற சீனிச்சத்துக்களும் பொட்டாசியம், விட்டமின் 'பி' கொம்பிளெக்ஸ், தாதுப் பொருட்கள் இதில் அடங்கி உள்ளது.

உணவுப்பண்டங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் இப்போது சீனி, வெல்லம் போன்றவற்றிற்குப் பதிலாக பேரீச்சம் பழத்தையே பயன்படுத்துகின்றன.

அமிலத்தன்மையும் பேரீச்சம்பழத்தில் குறைந்த அளவாகக் காணப்படுவதால் மிகச் சிறந்த பழமாகப் பேரீச்சம்பழம் கருதப்படுகிறது.

பேரீச்சம்பழத்தில் செய்யக்கூடிய மிகவும் சுவையான பண்டங்களில் ஒன்று பேரீச்சம்பழ மில்க் ஷேக். மிகவும் சுவையானதும் செய்ய இலகுவானதுமான இந்தத் தின்பண்டத்தை நீங்களும் செய்து பாருங்கள்.

ஒரு கப் நறுக்கிய பேரீச்சம்பழம், ஒன்றரைக் கப் பால், ஒரு ஸ்கூப் வெனிலா ஐஸ்கிறீம் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளவும். சிறிதளவு பாலையும் ஐஸ்கிறீமையும் வைத்து விட்டு, மீதமுள்ளவற்றை மிக்ஸியில் போட்டு நன்றாக அரைக்கவும். அரைத்த பிறகு எடுத்து வைத்திருக்கும் பாலையும் ஐஸ்கிறீமையும் அதில் கலந்து பரிமாறவும்.


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி

**மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KH

பெயர்:......................

முகவரி:......................

......................

தொழில்:......................

கையொப்பம்:......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-11-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## சுழிபுரம் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**தே. இராஜேஸ்வரி**
74, மூளாய் வீதி, மூளாய் தெற்கு, மூளாய், சுழிபுரம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# அனிதாவின் காதல்கள்

**16**

"எல்லாருக்கும் வேலை! எல்லாரும் பேக்கு மாதிரி வாயைப் பொளந்துண்டுட்டா..."

"முதல்ல வீட்டுக்குள்ள எப்படி வந்தார், ஒன்னை விசாரிச்சுக்கிட்டா..."

"இல்லை மது. பன்னண்டு ஃப்ளாட்டையும் வாங்கப் போறாராம்!"

"மைகாட்!" மது விசிலடித்தாள்... "இது என்ன பயங்கர கோர்ட்ஷிப்பா இருக்குதே!"

லைப்ரரிக்குப் போனா, லைப்ரரி மாமா உயிரை விட்டு லைப்ரரியையே எடுத்துக் கிட்டுப் போங்கறார்..."

"ரொம்ப சிம்பிளா அவர் எல்லாத்தையும் விலை கொடுத்து வாங்கிடறார். என்னைக் கேக்கமாட்டேங்கறாரே!" என்றாள் மது.

"மது எனக்கு ரொம்ப குழப்பமா இருக்கு.."

"ஃபார் எ சேஞ், எனக்கும் குழப்பம் தான்" என்ற மது, "இத பாரு, நடக்கறது நடக்கட்டும்... என்னதான் ஆவுதுன்னு பாரு... அவர் உலகத்தையே 'டேக் 'ஓவர்' பண்ணிருவார் போலத் தெரியது. அதனால் வேடிக்கை பார்க்கறதுதான் நல்லது" என்றாள்.

பாட்டனி க்ளாஸில் லெக்சரர் நடத்திய பாடத்தில் கவனமின்றி ஜன்னலுக்கு வெளியே விநோதமான காட்சி ஒன்றைப் பார்த்தாள் அனிதா. ஏணி மேல் ஏறிக் கொண்டு ஒருத்தன், காலேஜ் கிழக்கு காம்பவுண்டு சுவருக்கு மேல் செம்பருத்தி மரத்தின் அருகில் நின்று வெள்ளை பெயிண்ட் அடித்து 'காண்டாக்ட்' என்று ஒரு டெலிபோன் நம்பர் எழுதப்பட்டிருந்த தகர போர்டில் புதுசாக ஒரு போஸ்டர் ஒட்டிக் கொண்டிருந்தான்.

மதுதான் அனிதாவின் முழங்கையை நிருடி சீட்டு ஒன்றைக் கொடுக்க, அதில் 'ஜன்னலுக்கு வெளியே படி' என்றுமது எழுதியிருந்தாள். திடுக்கிட்டு வெளியே பார்த்தாள் அனிதா.

அதில் அச்சடிக்கப்பட்ட மூவண்ண போஸ்டரில், 'அனிதா ஐ லவ் யூ' என்று பெரிசாக ஒவ்வொரு எழுத்தும் ஒரு ஆள் உயரத்துக்கு எழுதப்பட்டிருந்தது!

அனிதாவுக்குக் கன்னத்தில் ரத்தம் குபுக்கென்று பாய்ந்துவிட, க்ளாஸில் அத்தனை பேரும் இதைக் கவனித்துவிட்டார்கள்.

"என்னடி இது?"

"ஏதோ புதுசா சினிமா வரப்போவதாம்! அதுவும் போஸ்டர்!" என்று மதுதான் சமாளித்தாள்.

க்ளாஸ் விட்டதும், வேப்ப மரத்தடிக்குப் போய் உட்கார்ந்து கொண்டு அனிதா லேசாக அழுதாள்.

"இந்தாளை என்ன பண்றது?" என்றாள். மற்றொரு போஸ்டரை மற்றொரு போர்டில் ஒட்டிக் கொண்டிருந்தான்.

"அந்தாளுக்குச் சரியான காதல் கிறுக்குப் பிடிச்சிருக்கு... வா" என்றாள் மது தீர்மானமாக.

"எங்கே?"

"அந்தாளு வீட்டுக்குப் போய் அப்பா, அம்மாவைப் பார்த்துடலாம் வா...!"

ராதாகிருஷ்ணன் சாலையிலுள்ள வைரவன் ஆபீஸில் சீதள் என்கிற பெண்ணுக்கு போன் பண்ணிவிட்டு விலாசம் வாங்கிக் கொண்டாள் மது.

"மது, நாம பண்றது சரியில்லைன்னு தோணுது" என்று அனிதா ஸீட் பெல்ட்டை மாட்டிக்கொண்டு "ரொம்ப வேகமா ஓட்டறே" என்றாள்.

"எல்லாம் சரிதான். போஸ்டர் ஒட்டி உன்னை அவமானப்படுத்தலாமா அந்த ஆளு! இதென்ன பாம்பே சினிமாவா?" ர்ர்ர்ரும் என்று டயர் விளம்பரத்தில் வருவதுபோல காரை விரட்டினாள்.

சாந்தோம் தாண்டி அடையாறு போகும் வழியில் இருந்த அந்த விலாச முகப்பைப் பார்த்தால் பெரிய வீடு போல தோன்றவில்லை. மது பொறுமையில்லாமல் கதவை கார் ஹார்னால் அதட்டினாள். கதவைத் திறந்துவிட்ட கூர்க்கா ஏதும் கேட்காமல் அனுமதித்தான்.

மது, அனிதாவை வியப்புடன் பார்த்தாள். "ஒல்லிப் பொண்ணு சொல்லியிருக்கணும்" என்றாள்.

உள்ளே போனதும் தான் விஸ்தாரம் விஸ்தீரணம் எல்லாம் புரிந்தது. இடதுபக்க அஸ்பெஸ்டாஸ் கொட்டகையில் ஆறு கார்கள் நின்று கொண்டிருந்தன. பின் குறிப்பாக இங்கே அங்கே டாடா வண்டிகள் மாருதி, மாருதிபோல வேறு 'தி' இப்படி... மரகதப் புல்வெளியில் படுத்திருந்த பச்சை பிளாஸ்டிக் குழாயிலிருந்து நீர் கசிந்து கொண்டிருக்க, மேல்நாட்டு சைக்கிள் தரையில் அநாதையாகக் கிடந்தது. பச்சை இருட்டாக இருந்த கமான் வளைவைத் தாண்டி உள்ளே வராந்தாவில் ஊஞ்சல் தொங்கியது. பட்டை பட்டை மெத்தை போட்டு நிழல் தந்து லேசாக ஆடி 'வா.. வந்து உட்கார்' என்று சொல்லும் ஊஞ்சல்... மரங்களில் முதுகுக்குத் தோதான பிரம்பு ஊஞ்சல்கள்! சங்கிலியில் கட்டியிருந்த நாய்கள் அவர்களைச் சாப்பிடும் நோக்கத்துடன் பாய்ந்து கோபப் பற்களைக் காட்ட, "சீஸர்! ராமு!" என்று உள்ளேயிருந்து அதட்டல் கேட்டது.

வலதுபக்கம் அவுட் அவுஸ் போன்றிருந்த இடத்தின் மாடியில் இரண்டு டிஷ் ஆண்டெனாக்கள் வெவ்வேறு திசைகளில் வான் நோக்கிக் கொண்டிருந்தன. மோட்டார் ஓடிக்கொண்டிருந்தது. மதுகூட அந்த இடத்தின் அலட்சியமான செல்வச் செழிப்பால் ஏற்பட்ட பிரமிப்பில் கொஞ்ச நேரம் மௌனமாகி விட்டாள்.



"மை காட்! திஸ் ப்ளேஸ் இஸ் பிஇஇக்" என்றாள்.

ஒருவேலைககாரன் வராந்தாவில் இருந்த மரபொம்மையை ஏற்கனவே சுத்தமாக இருந்ததை துடைத்துக்கொண்டிருந்தான். இவர்களைப் பார்த்து உள்ளே கைகாட்டினான். வீட்டின் வயிற்றிலிருந்து ஒருவன் மெள்ள நடந்து. வந்து "யாரைப் பார்க்க வந்தீங்க?" என்றான். அவர்கள் அந்த இடத்தில் இருப்பதே அனாசாரம் என்பது போல பார்த்தான்.

"மிஸ்டர் வைரவனோட அப்பாவைப் பார்க்கணும்" என்றாள் மது.

"தூங்கறாரே!"

"சரி, அப்புறம் வரோம்!" என்றாள் அனிதா.

"அவங்க அம்மாவை..?" என்று மது கேட்டாள்.

"வாங்க" என்று உள்ளே அழைத்துச் சென்று, ரிலேரேஸ் போல் ஒரு சேவகியிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட... "வேலைக்காரி கூட ஷிஃபான் ஜார்ஜெட் பாரு" என்றாள் மது லேசான குரலில்.

"ஐயாவைப் பார்க்க வந்திருக்காங்க..." என்றாள் அந்த சேவகி, யாரிடமோ.

"வாம்மா" என்று கனிவான குரல் கேட்டுத்திடுக்கிட்டார்கள். ஒரு பெண்மணி அவர்களை வரவேற்றாள்.

பார்த்தவுடன் சட்டென்று அது வைரவனின் தாயாக இருக்கும் என்பது தெரிந்து விட்டது. அதே சற்று மேல் நோக்கி மூக்கு. அதே கண்கள், கண்ணாடி பிரேமில் தங்கம்... கழுத்தில் வைரம்... லேசான ஜரிகை இழையோடிய பட்டுப் புடைவையில் ஆரவாரமில்லாத பழக்கப் பட்டுப் போன செல்வச் சிறப்பு தெரிந்தது.

"நீதான் அனிதாவா?" என்றாள், அனிதாவைக் கண்கொட்டாமல் பார்த்து, "வைரு சொன்னான்.. உன்னைப் பத்தித்தான் போன மாதம் முழுக்காலும் பேசிக் கிட்டே இருக்கான்..." என்றவள், பக்கத்திலிருந்த மதுவைப் பார்த்து "உம் பேர் என்னம்மா?" என்று கேட்டாள்.

"மது, ஆன்ட்டி! நான் அனிதா க்ளாஸ் மேட்!"

"வைரவன் இப்ப வந்துருவான். ஃபோன் போட்டு இருக்கச் சொன்னான். என்ன சாப்பிடறீங்க? முத மூதல்ல நம்ம வீட்டில அடியெடுத்து வெச்சிருக்கீங்க. எதுவாச்சியும் ஸ்வீட் சாப்பிடணும். எனக்குத்தான் ஸ்வீட் ஆகாது. ப்ளட் பிரஷர் வேற... ஏய் சிங்காரி, சீலு எங்கடா போயிட்டிங்க?"

"அம்மா!" என்று இருவர் உடனே சித்தமாக,

"இவங்களுக்கு என்ன வேணும் கேளு!"

சீலு என்பவன் பவ்யமாக "க்ரானி ஜூஸ் தரலாங்களா?"

"அப்படின்னா?"

"தர்பூசணி இருக்குல்ல... அதில லேசா தேன்விட்டு... ஜூஸ் ரொம்ப ஜோரா இருக்கும்."

மது தலையாட்டினாள். அனிதா பயந்து போய் நிற்க. "உக்காரும்மா... உன்னை நிக்க வெச்சேன்னு தெரிஞ்சா வைரு கோவிச்சுப்பான்!" என்றாள்.

அப்போது, ஒரு பதின்மூன்று வயசுப் பெண் புஷ்டியாக அரை டிராயர் போட்டுக் கொண்டு வலுவான தொடைகளுடன் வந்து அவள் மேல் படர்ந்து, "க்ராண்ட்மா... நான் இன்னொரு 'கோக்' எடுத்துக்கட்டுமா?" என்றது ஆங்கிலத்தில்.

"இது என் பேத்தி. நியுயார்க்ல படிக்குது! அபி.. அனிதாவக்கு 'ஹலோ' சொல்லு."

"ஹாய் அனிதா, யுப்ளே காரம்ஸ்?" என்றது.

"அபி, இப்ப அவங்களைத் தொந்தரவு செய்யக்கூடாது" என்று சொல்லி விட்டு, இவர்களை நோக்கி, "தமிழ் பேசாதே தவிர நல்லா புரிஞ்சுக்கும்" என்றாள்.

அப்போது வெளியே கார் கதவு சாத்தப் படும் சத்தம் கேட்க,

"வைரவன் வந்தாச்சு!"

அனிதாவக்கு மார்பு படபடத்தது. அவன் காலடிகள் விரைவாக வர, அதே வேகத்தில் அவள் நெஞ்சும் அடித்துக் கொண்டது.

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

"சே! எதற்காக இங்கே வந்தோம்!"

வைரவன் "ஹாய் அனிதா, ஹாய் மது! எப்ப வந்தீங்க?"

"இப்பதான்!"

அவன் தன் கழுத்துடையைத் தளர்த்தினான். அந்தப் பெண் அபி "வைரவன் அங்கிள்" என்று அவன் மேல் கட்டிக் கொண்டது.

அவளைக் கவனிக்காமலே தள்ளிவிட்டு, "அம்மா, இதான் சொன்னேனே அனிதா."

"பாத்தேன்... பாத்தேன்..ஷி இஸ் வெரி ஸ்வீட்"

"என்ன சொன்னான் என்னைப்பற்றி?"

"அம்மா, அபியைக் கூட்டிட்டுப் போறீங்களா?"

"உன் சிஸ்டர்ஸ் எல்லாம் அனிதாவைப் பார்க்கணுங்கறாங்க."

"லேட்டர்மா.. அப்பா எந்திரிச்சாங்களா?"

"இல்லை!"

"டென்னிஸ் போறாங்களா?"

"இல்லை... ரோட்டரி ஃபங்ஷன் இருக்குது. நானும் போறேன்."

வைரவன் அம்மாவும் அந்தப் பெண் அபியும் அந்த இடத்தைவிட்டு விலக...

[அனிதா வருவாள்...]

விஞ்ஞானி சேர் ஐசக் நியூட்டனைப் பற்றி நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள்.

பூமிக்கு ஈர்ப்பு சக்தி இருப்பதால் தான் ஆப்பிள் பழம் மரத்திலிருந்து மேலே போகாமல் கீழே விழுகிறது என்ற மிகப்பெரிய உண்மையைக் கண்டறிந்து கூறியவர் இந்த நியூட்டன். இந்தக் கண்டுபிடிப்பிற்காக இங்கிலாந்து

'தான்' என்ற அகந்தை இல்லாதவர். அடக்கமே உருவானவர். வீண் புகழ்ச்சிகளை அறவே வெறுத்தவர். இத்தகைய குணங்களைக் கொண்டிருந்ததால்தான், அவர் இறந்தபின் அவரது உடல் லண்டனில் உள்ள 'வெஸ்ட் மினிஸ்டர் அபே' என்ற உலகப் புகழ்பெற்ற தேவாலய வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

# சேர். ஐசக் நியூட்டன்



அரசு அவருக்கு 'சேர்' பட்டம் வழங்கி கௌரவப்படுத்தியது. அன்று முதல் அவர் 'சேர் ஐசக் நியூட்டன்' என்று அழைக்கப்பட்டார்.

அவர் வாழ்ந்த நாளில் மிகப்பெரும் விஞ்ஞான மேதையாகத் திகழ்ந்தார்.

'வெஸ்ட் மினிஸ்டர் அபே'யில் அடக்கம் செய்யப்படும் கவுரவம் எல்லா ஆங்கிலேயருக்கும் கிடைக்காது. சிறந்த அரசாட்சி செய்த மன்னர்கள், அறிவிற் சிறந்த மேதைகள், சிறந்த சான்றோர்கள் ஆகியோருக்கு மட்டுமே அத்தகைய கௌரவம் கிடைக்கும்.

## பாப்பா முரசு சிறுகதை

சேர் ஐசக் நியூட்டனுக்கும் அத்தகைய கௌரவம் கிடைத்தது.

ஒரு சமயம் ஒரு பெண்மணி நியூட்டனைச் சந்தித்து அவரது அறிவுக் கூர்மை, உழைப்பு ஆகியவற்றைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேச ஆரம்பித்துவிட்டார். அந்தப் புகழ்ச்சியைக் கேட்க நியூட்டனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

உடனே அவர் இந்தப் பெண்மணியைப் பார்த்து,

"அம்மா! உண்மை என்னும் பெரும் சமுத்திரத்தின் கரையில் சிறு சிறு கூழாங் கற்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் ஒரு குழந்தையைப் போலத்தான் நானிருக்கிறேன். என்னை பெரிய மேதை என்று வீணாகப் புகழாதீர்கள். அதற்கு நான் அருக்தையற்றவன்" என்று கூறினார்.

அவரது உண்மையான உள்ளத்திலிருந்து வெளிவந்த அந்த வார்த்தைகளைக் கேட்டு அப்படியே மெய்சிலிர்த்து நின்றுவிட்டார் அந்தப் பெண்மணி.

நியூட்டனைப் பற்றிய இன்னொரு சம்பவம் இது.

ஒரு சமயம் அவர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அவருக்காக சமைக்கப்பட்ட உணவு தனி அறையில் வைக்கப்பட்டிருந்தது.


அப்போது அங்கு வந்த அவரது நண்பர் ஒருவர் அவருக்கு வைக்கப்பட்டிருந்த உணவைச் சாப்பிட்டு விட்டுச் சென்றுவிட்டார்.


அவர் சென்று சில மணி நேரங்கள் கழித்து, தனக்குப் பசியெடுப்பதை உணர்ந்த நியூட்டன் சாப்பாடு வைக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தார்.

உணவு வைக்கப்பட்டிருந்த இடத்தில் வெறும் காலிப் பாத்திரங்களே இருந்தன.

அதைக் கண்ட நியூட்டன் மெல்லப் புன்னகைத்தபடி, "நான் ஒரு முட்டாள்! சாப்பிட்டதையே மறந்துவிட்டு மீண்டும் சாப்பிட வந்திருக்கிறேனே!" என்று கூறிவிட்டு மீண்டும் ஆராய்ச்சிக் கூடத்திற்குச் சென்றுவிட்டார்.


தான் சாப்பிட்டோமா, இல்லையா என்பது கூட நினைவில் இல்லை. அந்த அளவிற்கு தான் ஈடுபட்டிருந்த பணியில் ஒன்றியிருந்தார்.





1 முதல் 21 வரையான புள்ளிகளை இணைத்து முழு உருவத்தையும் பார்த்து இரசியுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **03.11.2001**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **418**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 416

பரிசுக்குரியவர்:
எஸ். சாக்ஷிஹன்,
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-04.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம்.எம்.றிஸ்மி, வெள்ளை மணல், சீனக்குடா. | எஸ். டிலுக்ஷிகா, இந்துத் தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. |
| ஜே. ஜோக்கிம் லோரன்ஸ், வத்தளை. | என். சமீனா, இரஜவல தமிழ் தேசிய கல்லூரி,திகன. |
| எப்.எம். தானிஷ் அசோகா வித்தியாலயம், கண்டி. | என். ரூபினி, பு.அ.ம. மகா வித்தியாலயம், வத்தளை. |
| பா. ராஜ்குமார், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | சு. சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. |
| செல்லையா கண்ணபிரான், சென். ஜோசப் த.ம.வித்., மஸ்கெலியா. | பி. இந்துஷன், மாத்தளை வீதி, அலவதுகொட. |

## ஆபிரிக்கச் செய்திகள்

* உலகிலேயே மிகப் பெரிய பாலைவனமான 'சஹாரா' ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ளது. இதன் பரப்பளவு 34,75,000 சதுர மைல்கள்.

* உலகிலேயே மிக வெப்பமான இடம் ஆபிரிக்காவில் தான் உள்ளது. எத்தியோப்பியாவில் உள்ள டெனாக்கில் அமைந்துள்ள டலோல் என்னுமிடம்தான் அது. இங்கு வருடத்தின் சராசரி வெப்பநிலை 93 பாகை ஆகும்.

* உலகின் மிகவும் நீளமான நதி நைல் ஆகும். இதுவும் ஆபிரிக்காக் கண்டத்தில்தான் உள்ளது. இதன் நீளம் 4,241 மைல்.

* கடல் மட்டத்திற்குக் கீழ் உள்ள ஏரிகளுள் உலகின் இரண்டாவது ஏரி ட்ஜிபோட்டியில் உள்ள அஸ்ஸால் ஆகும். இது கடல் மட்டத்தில் இருந்து 512 அடி கீழே உள்ளது.

* உலகிலேயே மிகவும் சுத்தமான நன்னீர் ஏரி டாங்கனிகா ஆகும். 420 மைல் நீளமுள்ள இந்த ஏரியும் ஆபிரிக்காக் கண்டத்தில்தான் உள்ளது.

* பெரிய தீவுக் கூட்டங்களில் உலகில் நான்காவது இடம் பிடிப்பது மடகாஸ்கர் தீவு. இதன் பரப்பளவு 2,26,658 சதுர மைல்.

* எகிப்தின் கிழக்குப் பகுதியில் உள்ள சுயஸ் கால்வாய் ஆசியாவின் ஒரு பகுதியாகும். இது நைல் நதியில் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது.

## காரணப் பெயர்




தடிமன், தலைவலி ஆகியவற்றைப் போக்கும் களிம்புக்கு 'பாம்' (BALM) என்று ஆங்கிலத்தில் அழைக்கிறோம். இந்தப் பெயர் வந்தது எப்படி என்று தெரியுமா?

'பாம்' என்பது ஒரு மூலிகைச் செடியின் பெயர். இது காய்ச்சலை போக்கும் குணமுடையது. அதில் இருந்து இதுபோன்ற களிம்புக்கு பாம் என்று பெயர் வந்தது.

இதே போல் 'கேரம்' விளையாட்டிற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது தெரியுமா? ஃபிரெஞ்சு மொழியில் 'கேரம்' என்றால் 'அடித்துத் தள்ளச் செய்தல்' என்று அர்த்தம். அதனால் அப்பெயர் ஏற்பட்டது.

## வித்தியாசமான தூண்டில்



நாம் தூண்டிலைப் போட்டு மீன் பிடிப்பதைப் போல் ஒக்டோபஸ் என்ற கடல் உயிரினத்தைப் பிடிப்பதற்காக பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவியைத்தான் பார்க்கிறீர்கள்.

ஒக்டோபஸும் எலிகளும் எதிரிகளாம். இதனால் எலிகளைப் பார்த்தால் ஒக்டோபஸுக்குப் பிடிக்காது என்ற மூட நம்பிக்கை அக்காலத்தில் டோங்கா என்ற பழங்குடிகளிடம் இருந்தது.

எனவே அவர்கள் எலி போன்ற வடிவத்தில் வித்தியாசமான தூண்டில்களைச் செய்து மீன்களைப் பிடித்தார்கள்.

## எவ்வளவு நேரம்?

ஆமை-முயல் கதையைக் கேட்டிருப்பீர்கள். ஆமையும் முயலும் போட்டியிட்டன. பாதி வழியில் முயல் தூங்கி விட, ஆமை மெதுவாக ஊர்ந்து சென்று, இலக்கை அடைந்தது என்பது தானே அந்தக் கதை.

உண்மையில் ஆமை ஒரு மைல் தூரத்தைக் கடக்க எவ்வளவு நேரம் பிடிக்கும் தெரியுமா?

5 மணித்தியாலங்கள்.

## சுறு சுறுப்பான உறுப்பு



மனித உடலில் சுறுசுறுப்பாகவும் அதே நேரத்தில் இடைவிடாமலும் இயங்கும் உறுப்பு எது தெரியுமா? இதயம், மூளை என்றெல்லாம் நீங்கள் நினைத்தால் அது தவறு.

சுறுசுறுப்பான உறுப்பு கண்களில் உள்ள தசைப் பகுதிகள் தான் அவை. விழிப் பகுதியில் உள்ள இந்தத் தசைப் பகுதிகள் தினமும் இலட்சக் கணக்கான தடவைகளுக்கு மேல் அங்கு மிங்குமாக ஓடிச் செயற்படுகின்றன.

தூங்கும்போது வரும் கனவுகளில் காணப்படும் காட்சிகள் எமக்கு மறுநாள் நினைவில் இருப்பதற்குக் காரணம் இந்தத் தசைகள் தான். இவை கனவு காணும் நேரத்தில் செயற்பட்டு நமக்குக் காட்சிகளைப் பார்க்க உதவுகின்றன.

## சூறாவளியால் நன்மை



மிகப்பயங்கரமான சூறாவளிகள் அதிக அளவில் நைதரசன் சேர்வைகளைப் பெற்றுத் தருகின்றன என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். விவசாயச் செய்கைக்கு உரங்களாக இவை பயன்படுகின்றன.

இத்தகைய பெரும் சூறாவளிகளில் தொழிற்சாலைகளில் உற்பத்தியாவதை விட 3 மடங்கு அளவு நைதரசன் உற்பத்தி செய்யப்படுவதாக ரஷ்ய விஞ்ஞான்ிகள் கூறியுள்ளனர்.

# அவள் என்ன செய்வாள்...?

ரூபாராணி

"மானம் மரியாதை எல்லாமே போச்சு. வாழவெட்டியாய் வந்து நிக்கிறியேடி மூதேவி," வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு தலைவிரிகோலமாய் நிற்கிறாள் அம்மா.

"அவளுக்கென்ன? கேட்காதவனிட மெல்லாம் கை ஏந்தி கடனப்பட்டுக் கலியாணத்த முடிச்சு வச்சன் பார் என்னைச் செருப்பாலடிக்கவேணும். இனி மூத்தவளிருக்க இளையவள எப்பிடிக் கரை சேக்கிறது? தன்ர தங்கச்சியப் பத்தி கரிசனை இருந்தா இந்த வேலை செய்திட்டு வந்து நிப்பாளா?" அப்பா இடியாய் முழங்குகிறார்.

தங்கச்சி பரமேசின் முகத்தில் சடுகு வெடிக்கிறது.

இத்தனைக்கும் காரணமான கனகா மட்டும் அடித்த சிலையாய் அடுப்படி மூலையில் அசைவாட்டமின்றி இருக்கிறாள். அவள் கண்கள் சிவந்து உப்பிய கன்னத்துடன் உணர்வுகளற்ற ஜடமாய் எங்கோ பார்வையைப் பதிக்கிறாள்.

அந்தக் குடும்பத்தின் உறைவிடமெங்கும் சூனியம் ஒட்டடையாய் அப்பிக்கிடக்கிறது. கனகாவின் மனதில் மண்டிக்கிடந்த பனிமூட்டம் மெல்லக் கலைய அவள் நினைவுகள் சுழல்கிறது.

"நான் என்ன எனக்குக் கலியாணம் வேணுமென்று கேட்டா அழுதேன்? நானா என் இஷ்டப்படி கணேசனை மாப்பிளையாய் தேர்ந்தெடுத்தேன்? ஒருத்திக்கு ஒருவன் எங்கோ பிறக்காமலா இருப்பான் என்று அடிக்கடி அம்மா கூறுவாள். அதன்படி கணேசன் வவுனியாவில் எனக்கென்று பிறந்துதானே இருக்கிறான் என்று எண்ணியதும் கனகாவின் கண்களில் நீர் முட்டுகிறது.

இத்தனை வயது வந்தும் நான் எவனையாவது லவ் பண்ணல்ல. உண்மையைச் சொன்னால் எனக்கு அப்படிப் பண்ணவும் தெரியல்ல. ஏன் என் தங்கச்சி கலா தானாக ஒருவனைத் தேடிக்கொண்டாள். கலியாணம் என்னால் தாமதமாகிறது. தன் இயலாமையை எண்ணியபோது கனகாவுக்குத் தன் மீதே எரிச்சல் ஏற்படுகிறது.

"இஞ்ச பாருங்கோ, கனகாவுக்கு எத்தன மாப்பிள பாத்தாச்சு ஜாதகம் பொருந்தி வாறாப்பில இல்ல. ரெண்டு குமருகளையும் வச்சிக் கட்டிக்காக்க ஏலாது. வாறது வரட்டும், கலாட கலியாணத்த முந்தி வச்சாலென்ன?" அம்மா அப்பாவுக்கு சாதம் பரிமாறிக்கொண்டு கேட்கிறாள்.

"உனக்கென்ன விசரா? மூத்தவள வச்சுக் கொண்டு இளையவளுக்கு எப்படிச் செய்யிறது? அப்பா பப்படத்தை நொறுக்கியபடி அம்மாவை முறைக்கிறார். அம்மாவின் மௌனம் நீண்டதை அப்பா விரும்பவில்லைப் போலும் அவரே முணுமுணுக்கிறார் கோளா நீரைப் பருகியபடி.

"நான் என்ன செய்ய மாப்பிளையை மரத்திலா புடுங்கிறது? தர்மலிங்கம் மாஸ்டரிட்டச் சொல்லியிருக்கு அவர் புறோக்கரிட்டச் சொல்றதாய்ச் சொன்னார்." இப்படியான பேச்சுவார்த்தைகள் அம்மாவுக்கும் அப்பாவுக்குமிடையில் அடிக்கடி ஏற்படுவது சாதாரணம்.

ஒருநாள்...

வானம் திடுதிப்பென்று இருண்டது. கருமேகங்கள் வீறாப்புடன் விரைந்து மழை நீரைப் பூமியை நோக்கி வாரி இறைத்தது. வீட்டுக் கூரையின் துவாரங்கள் அதிர்ச்சி தாங்காது சொட்டுச் சொட்டாய்க் கண்ணீர் வடித்தன. அப்பா தெப்பமாய் நனைந்தபடி அவசரமாய் உள்ளே நுழைந்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சியின் கோலம்.



"என்னப்பா இந்த மழைக்கு நனைஞ்சி வாறியள் உங்களுக்கு மூளையிருக்கா? போகக்க குடையைக் கொண்டுபோங்க எண்டு எத்தன தடவ சொன்னன்?" அம்மா அப்பாவை அன்போடு கடிந்துவிட்டு துவாயை எடுத்து வந்து கொடுத்தாள். அப்பா தலையைத் துவட்டியபடி சொன்னார்...

"இப்பதான் கடவுள் கண்ணைத் துறந்திருக்கிறார். கனகாவுக்கு ஒருபடியா மாப்பிள பொருந்தியிருக்கு பெயர் கணேசன், வயது நாற்பது, சொந்த இடம் வவுனியா, ரெண்டு மூண்டு சாராயக் கடைக்கு முதலாளியாம். பணத்துக்குக் குறைச்சலில்ல. சீதனம் அடியோடு வேணாமாம். மளமளவென்று செய்தியை முடித்த அப்பா அம்மாவைப் பார்த்து 'சுவீப்' விழுந்திருக்கு," என்று சொல்லி பெரிதாக வாய்திறந்து சிரித்தார்.

இப்போது மழை முற்றாக ஓய்ந்து வானம் பறிச்சென்று இருந்தது. அப்பாவின் மகிழ்ச்சியில் அம்மா பங்கு கொள்ளாதது அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. என்ன சீதனம் கேட்காத மாப்பிளை பிடிக் கல்லியோ என்றார் கிண்டலாக.

"கனகாவுக்கு முப்பது வயது, அது போக சாராயக் கடை எண்டால் குடிகாரனாயிருப்பானோ?" என்றாள் அம்மா கவலையுடன்.

"போடி பைத்தியம் நெருப்பெண்டா சுடுமா? அது அவர்ர சம்பாத்தியம். பத்துப் பதினஞ்சு வயது வித்தியாசம், பெரிய விஷயமா? போய் வேலயப்பாரு. கெதியா கலியாணத்துக்கு நாள்பாக்க கோயில் ஐயரிட்ட போறன்." அப்பாவின் நடையின் வேகத்தில் உற்சாகம் தெரிந்தது.

கலியாண ஏற்பாடுகள் களை கட்டத் தொடங்கியது. அண்டை அயலவர்கள் எல்லாரும் கனகா கொடுத்து வச்சவள் என்று புகழாரம் சூட்டினார்கள்.

சீக்கிரத்தில் கனகாவின் கலியாணம் வவுனியாவில் வெகு விமரிசையாக நடந்தேறியது.அவள் அப்போதுதான் முதல் முறையாகத் தன் கணவனைப் பார்க்கிறாள். பருமனான உடல்வாகு. நடுத்தர வயதைத் தாண்டிய தோற்றம். கழுத்தில் இரட்டை வடச் சங்கிலி. கை விரல்களில் கல்பதித்த மோதிரம். கணவன் கட்டியதாலி கனகாவின் கழுத்துக்கு மட்டுமல்ல மனதுக்கும் பாரமாய்க் கனத்தது.

கனகாவுக்குக் கலியாணம் முடிந்ததில் பெற்றவர்களுக்குத் தலைப்பாரத்தைத் தரையில் இறக்கி வைத்த நிம்மதி. கலியாணம் முடிந்த அன்றே அவர்கள் விடை பெற்றுச் சென்றனர்.

கலியாண மண்டபம் வெறுமையடைந்தது. கனகா உடை மாற்றம் செய்ய அறையுள் அடியெடுத்து வைத்தபோது மற்றொரு அறைவாயிலில் கன்னத்தில் கையூன்றிச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் ஒரு பெண்ணைக் கண்டு உறவுக்காரியாய் இருக்கும் என்ற நினைவில் அவளைப் பார்த்து முறுவலித்தாள். பதில் புன்னகையை எதிர்பார்த்த கனகாவுக்கு அந்தப் பெண்ணின் முறைத்த பார்வை திடுக்கிட வைத்தது.

அன்று கனகாவுக்கு முதலிரவு... படுக்கை அறை அலங்காரத்தைக் கண்டு பிரமித்துப் போனாள் கனகா. அறிந்தும் அறியாத உணர்வுகள் அவளைப் புரட்டி எடுத்தது. கணேசன் அத்தரில் குளித்து, ஆவலுடன் அவளுக்காகக் காத்திருந்தான். கனகா அழகு தேவதையாக அடிமேல் அடிவைத்து கணவனை நெருங்கி அவன் பாதங்களைத் தொடக் குனிந்தபோது சட்டென்று அவளை ஆதரவுடன் அணைத்துத் தன்னருகே உட்கார வைத்தான் கணேசன். கனகாவின் குனிந்த தலையை மெல்ல நிமிர்த்தினான். அவளின் பூவுடல் நடுங்கியது. நிமிஷங்கள் மௌனத்தில் கரைந்தது.

கணேசன் தொண்டையைச் செருமி அந்த மௌனத்தைக் கலைத்தான்.

"கனகா நான் சொல்வதைக் கவனமாகக் கேள்.

"நீதான் என் மனைவி. ஆனால் மனைவியைப் போல் இன்னொருத்தி இங்கே இருக்கிறாள். நீ அவளைக் கொஞ்சம் அனுசரிச்சுப் போனால் உனக்கு வாழ்வே சொர்க்கந்தான்." கணேசன் கூறினான்.

ஒரு கணத்தில் அந்த முறைத்த பார்வை கனகாவின் முன் மின்னலாய்த் தோன்றியது. அவள் உருக்கொண்டவளாய் எழுந்து தாலியைக் கழற்றிக் கட்டிலில் போட்டுவிட்டுப் படிதாண்டிய பத்தினியாக வெளியேறிவிட்டாள். எத்தனை கோடி கொடுத்தாலும் அப்படியொரு சொர்க்கத்துக்கு உடன்பட அவள் தயாராயில்லை.

"கட்டினதாலியக் கழற்றிப் போட்டு எவ்வளவு தைரியமாய் வந்து நிக்கிறாளே இந்தப் பாவி இனி நாலு பேர் முகத்தில நாம எப்படி முழிக்கிறது. எங்காவது செத்துத் தொலையலாம் போல இருக்கு"

அம்மாவின் ஆவேசமான புலம்பல் கனகாவின் காதில் மோதியதும் அவள் நினைவுகள் பட்டென்று அறுந்தது.

தன் வாழ்வைவிடத் தாலியும் நாலு பேரும்தான் முக்கியம் என்று எண்ணும் தன் தாயை நினைத்துக் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு வழிதெரியவில்லை கனகாவுக்கு. ■

---

# மனமாற்றம்!

"நீங்க என்னா சொன்னாலும் சரி நான் நிச்சயமா அந்த ப்ரியாவத்தான் கல்யாணம் பண்ணப் போறேன்" சிவா சற்று குரலை உயர்த்தியே சொன்னான்.

"இதப்பாருடா பைத்தியக்காரன் மாதிரி கத்தாதே, நம்ம குடும்பத்தப் பத்தியும் கௌரவத்தப்பத்தியும் யோசிச்சியா? இவர் பெரிய தியாகினு நெனப்போ விதவைக்கு வாழ்வளிக்கப் போறாராம், இங்க பாரு சிவா நான் கடைசியா சொல்லிட்டேன். எந்த தாய் தகப்பன்மாரும் தங்கட பிள்ளைகள் சந்தோசமாக இருக்கிறததான் விரும்புவாங்க, போயும் போயும் உனக்கு ஏண்டா புத்தி இப்படியெல்லாம் போகுது, உன் அப்பாவுக்கு தெரிஞ்சா எவ்வளவு வருத்தப்படுவாரு தெரியுமா?"

சிறிதாக ஆரம்பித்து அம்மா பெருங்குரலெடுத்து அழவும் சிவாவுக்கு என்னமோ போல் ஆகிவிட்டது. அருகில் சென்றான்;



சி.சிவகுமாரன்-வட்டகொட

"அம்மா இங்க பாருங்கம்மா அழாதிங்க; தயவு செய்து அழாதிங்க, நான் இப்போதைக்கு இந்த கதைய விட்டர்றேன், சரியா? ஆனா ஒன்று சொல்றேன் கேட்டுக்குங்க எனக்கு இப்போதைக்கு கல்யாணம் வேணாம்" என்று கூறியவாறே வெளியே சென்றான் சிவா!

சிவா முற்போக்கான எண்ணங்கள் கொண்ட துடிப்பான இளைஞன். பாடசாலை காலத்திலும் சரி இப்போதும் சரி அவனைச்சுற்றி ஒரு கூட்டம் இருக்கும். அருமையாகக் கவிதைகள் வடிப்பான், சிறந்த ஓவியனும்கூட! அவனது கவிதைகளில் எப்போதும், பெண்ணுரிமை, வறுமை, ஏழ்மை, வரதட்சணை கொடுமை, விதவை மறுமணம் பற்றிய கருத்துக்களே அதிகம் வெளிப்படும்.

சிறு வயதிலிருந்தே அவனுக்கொரு எண்ணம் மற்றோர் போலல்லாமல் தான் வித்தியாசமாக வாழ வேண்டுமென்று. அந்த வாழ்க்கையில் ஒரு திருப்பம் இருக்க வேண்டும் என்று நினைப்பவன்.

அடிக்கடி எல்லோரிடமும் சொல்வான் "நான் கல்யாணம்னு ஒன்னு கட்டினா அது விதவையாகத்தான் இருக்கும்" என்பான். சிலர் கேலி செய்வர்.

"டேய் உன் கிறுக்குத்தனத்தையெல்லாம் கவிதையோட வச்சிக்க வாழ்க்கை வரை போகாது" என்பர்.சிலர் ஆதரவாகப் பேசுவர்.

தற்போது சிவா ஒரு தனியார் நிறுவனத்தில் கடமையாற்றுகின்றான். அவ்வப்போது பத்திரிகைகளுக்கு கவிதைகள், சிறுகதைகள், என கலைத்துறையிலும் தன்னை இணைத்துக் கொண்டான்.

தந்தை வேறு ஒரு இடத்தில் தோட்ட முகாமையாளராக கடமையாற்றுகிறார். ஒரே சகோதரியும் திருமணம் முடித்து சென்று விட்டாள். இவனது திருமண பேச்சை எடுத்த போதுதான் அம்மாவுக்கு ஒரு பேரிடி காத்திருந்தது. அதுதான் சிவா ப்ரியாவை திருமணம் செய்யப் போகிறேன் என்று சொன்னது. கொதித்து எழுந்து விட்டாள் பூரணம்.

ப்ரியா அவர்களது தெருவில் தான் வசிக்கிறாள். திருமணம் முடித்து மூன்று மாதங்களிலேயே கணவனை ஒரு விபத்தில் பறி கொடுத்து விட்டு வீட்டிலேயே அடைந்து கிடக்கிறாள். ப்ரியாவும் சிவாவின் பாடசாலையில் கல்வி கற்றவள்தான். இவனைவிட மூன்று வயது குறைந்தவள். சிவா தன் இலட்சியம் ஈடேறுவதற்கு ப்ரியாவை எப்படியாவது திருமணம் முடிப்பது என்று ஒற்றைக் காலில் நின்றான். ஆனால் தாய் பூரணமோ அசைந்து கொடுக்கவில்லை.

மாலை வீட்டிற்கு வந்த சிவா அம்மாவுடன் ஒன்றும் பேசவில்லை. பூரணமும் ஒன்றும் நடவாதது போல் இருந்துவிட்டாள். அவளும் திருமண பேச்சை எடுக்கவில்லை. காலம் செல்லச் செல்ல சரியாகி விடும் என்று அமைதியாக இருந்து விட்டாள்.

நாட்கள் வாரங்களாகி மாதங்களாகி சென்றன.

மற்றொரு நாள் சிவாவிற்கு ஓர் அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது. அது தான் அவனது தந்தை மாரடைப்பில் காலமாகி விட்டார் என்பதுதான். சிவாவும் பூரணமும் அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள். எல்லாம் முடிந்து விட்டது.

மாலையிட்ட தந்தை படத்தின் கீழ் அமர்ந்திருந்த தாயைப் பார்த்தான் சிவா. விழியோரம் நீர் முட்டியது. அந்த தெருவில் அவளுக்கு நல்ல மரியாதை இருந்தது. எல்லா சுப காரியங்களிலும் பூரணம் தான் முன்னிற்பாள். இனி... ஏனோ அவனுக்கு அப்போது அம்மாவைப் பார்க்க ப்ரியாவின் உருவம் வந்து போனது.

சிவா யோசித்துக் கொண்டிருந்தான். வீட்டில் ஒருவர் ஒருவராக செல்லத் தொடங்கினர். இனி அம்மாவுக்கு நான் மட்டும் தான். அவளின் துணைக்கு தன்னை திருமணம் செய்யச் சொல்லுவளோ என எண்ணியவாறு உறங்கிப் போனான் சிவா.

அன்றொரு நாள் அம்மா "சிவா வீட்டப்பார்த்துக்க நான் மங்களம் வீடுவரை கொஞ்சம் போய் வர்றேன்" என்றவாறு வெளியே சென்றாள். ஒரு ஐந்து நிமிடம் இருக்கும் பூரணம் திரும்பி விட்டாள். சிவா தற்செயலாக அம்மாவின் முகத்தைப் பார்த்து துணுக்குற்றான். அம்மா அழுகிறாளா என்ன நடந்திருக்கும் என்று குழம்பியவாறு "அம்மா என்ன நடந்தது?" என வினவினான்.

"டேய் சிவா நான் மங்களம் வீட்டிற்கு போயிருந்த நேரம் பார்த்து அவ மகள பொண்ணு பார்க்க வந்திருந்தாங்கடா என்னக் கண்டதும் மங்களம்..." அம்மா மேற்கொண்டு கூற முடியாது விம்மினாள்.

"சரி சொல்லுங்கம்மா என்னா நடந்திச்சு?"

"அந்த மங்களம் பாரு என்னையே எடுத்தெறிஞ்சு பேசிட்டா. ஏன் இந்த மாதிரி நேரத்தில எல்லாம் இங்கே வந்து, நீயெல்லாம் முன்னாடி வரக்கூடாது என்று எல்லார் முன்னேயும் பேசிட்டாடா. நான் அவளுக்கு எவ்வளவு உதவி பண்ணியிருக்கேன்னு தெரியுமா?" அம்மா தொடர்ந்து விசும்பினாள்.

சிவா மௌனமானான் அவனுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை.

சிறிது நேரத்தில் அம்மாவே மௌனத்தை கலைத்தாள்.

"டேய் சிவா எனக்கு இப்ப இந்த உலகத்த புரியுதுடா. மனிதத்திற்கு மதிப்பு இல்லைடா வேஷத்திற்கு தான் மதிப்பு. எனக்கு இப்ப புரியுது அந்த ப்ரியா மனசு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும் எண்டு..."

ப்ரியாவின் பெயரை கேட்டதும் சடாரென நிமிர்ந்தான் சிவா.

அம்மா தொடர்ந்தாள். "சிவா நான் வாழ்ந்து முடிச்சவள் ஆனா அந்த ப்ரியா இளந்தளிர்டா. அவ வாழனும் நிச்சயமா வாழனும் எந்த காரணத்த காட்டி நான் அவள வெறுத்தேனோ இப்ப அதே காரணத்தால நான் அவஸ்தைப்படுறேன்.

'பெண்ணா இருக்கிற காரணத்தால மட்டும் இன்னோர் பெண்ணின் துயரத்தை அறிய முடியாது, யாரும் துயரப்படுற பெண்ணோட நிலைமையிலிருந்து பார்த்தால் தான் உண்மை நிலை தெரியும். அந்த வகையில இப்ப நான் இருக்கேன். நாளைக்கே நா ப்ரியாவோட அப்பாவோட பேசுறேன். சிவா நீ தான் அவளுக்கு சரியான துணை. உன்ன மகனாப் பெத்ததற்கு நான் ரொம்ப பெருமை படுறேன்டா." என்றாள் பூரணம்.

"அம்மா" என்று கட்டிக் கொண்டான் சிவா. அவன் முகத்தில் பெருமிதம் படர்ந்தது!

---

நீண்ட நாட்களின் வரட்சிக்குப் பின் அன்று தான் அப் பகுதியில் மழை பெய்தது. அலுவலகம் விட்டு வந்த நான் இடையில் வைத்து பெய்த மழையில் மாட்டிக் கொண்டேன். கையில் அலுவலக வேலை அடங்கிய ஃபைல் 'நனைந்தால் அவ்வளவுதான்' என நினைத்துக் கொண்டு மழைக்கு ஒதுங்குவதற்காய் இடம் தேடினேன்.

அந்த வீதியில் பஸ் தரிப்பிடம் ஒன்று இருந்தது. அதற்குள் ஒதுங்குவதற்காக அதன் அருகில் சென்றேன். அதற்குள் அழகிய பெண் ஒருத்தி கையில் புத்தகங்

# எண்ணுவதெல்லாம்...



ஆரையம்பதி சி. நாகேந்திரன்

களுடன் அமர்ந்திருந்தாள். கண்களுக்கு கறுப்பு நிற கண்ணாடி செக்கச் சிவந்த ரோஜாப் பூவின் நிறம். அவள் அணிந்திருந்த கண்ணாடிக்கும் அவள் நிறத்துக்கும் அவள் அழகுக்கும் அவள் அசல் நடிகை ஜோதிகா மாதிரி இருந்தாள்.

இப்படி ஒரு அழகியை கண்டதற்காக பெய்த மழைக்கு நன்றி சொல்லிக் கொண்டே அப் பஸ் தரிப்பிடத்துக்குள் போய் அமர்ந்து கொண்டேன். நான் அந்த பஸ் தரிப்பிடத்துக்குள் அமர்ந்திருந்தபடி அவளை பல முறை பார்த்த போதும் அந்த பெண் என்னை ஒரு தரமேனும் பார்க்கவில்லை.

பொறுமை இழந்த நான் 'இவ பெரிய அழகி என்ற நினைப்பு அது தான் திரும்பி பார்க்கிறாள் இல்ல. ஒரு தரம் பார்த்தால் என்ன குறைஞ்சா போகப் போகிறது. பக்கத்தில ஒரு வாட்ட சாட்டமான இளைஞன் இருக்கான் கொஞ்சம்கூட திரும்பி பார்க்கிறாள் இல்லையே' என எனக்குள் அவளுக்கு திட்டிக் கொண்டேன். அவள் என்னை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்பதற்காக சத்தமாய் செருமினேன். என் செருமல் சத்தம் கேட்டு திடீரென என் பக்கம் திரும்பினாள். சட்டென்று அவளைப் பார்த்து புன்னகைத்தேன்.

அவள் புன்னகையாது மறுபக்கம் திரும்பிக் கொண்டாள். ஏமாற்றம் அடைந்த நான் 'நீயெல்லாம் வாழப் போற ஆள் இல்ல. அப்படி இப்படி பார்த்து சிரித்தால் தானே யாராவது உங்களை காதலிச்சி கலியாணம் கட்ட முன்வருவானுகள். அத விட்டுட்டு இப்படி திமிர் பிடிச்சி இருந்தா யார் வரப்போறான்,' எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

சில நிமிடத்தில் அந்த இடத்துக்கு வேன் ஒன்று வந்து நின்றது. அதற்குள் இருந்து சில பெண்கள் இறங்கி அந்த பெண்ணை கையில் பிடித்தனர்.

"ம்... வந்து விட்டீங்களா நல்ல காலம் மழைக்கு ஒதுங்குவதற்கு இந்த இடம் கிடைத்தது. இல்லையெண்டா என் நிலைமை அதோகெதிதான்" என்று அவள் கூறி முடித்தாள். அந்த பெண்கள் அவளை பிடித்து வேனில் ஏற்றினர். அவள் தடவி தடவி அந்த வேனில் ஏறினாள்.

அப்போதான் எனக்கு புரிந்தது அந்த பெண்ணுக்கு கண் பார்வை தெரியாது. அவள் எங்கோ போக வந்திருக்கிறாள். இடையில் மழை வந்து விட்டது இதற்குள் ஒதுங்கியிருக்கிறாள். அவளைக் காணாததால் இவர்கள் வந்து வானில் ஏற்றிக் கொண்டு போகிறார்கள் என்பது. "கடவுளே.. நான் என்ன வேலை பார்த்தேன். என்ர வாயை வைச்சுக் கொண்டு சும்மா இருக்க முடியாம' என நினைத்துக் கொண்டேன். என்னை அறியாமலே கண்களால் கண்ணீர் கசிந்தது. வாய் விட்டுக் கத்த வேண்டும் போல இருந்தது. சில நிமிடத்தில் மழை விட வீட்டை நோக்கி விரைகிறேன்.

அசத்தல் தொடர் 08

# ஓடாதே! ஒளியாதே!

லீமாவின் கண்கள் ஆர்வத்தோடு புவன்யாவைப் பார்த்தன. கேட்டாள். "போன காரியம் என்னாச்சு?"

"எதிர்பார்த்ததைவிட சுலபமா முடிஞ்சிருச்சு மேடம்."

"முரளி பொய் சொல்லியிருக்கான்னு தெரிஞ்சதும் ஒரு நிமிஷம் நான் ஆடிப் போய்ட்டேன், புவன்யா."

"பெரிசா நாம கவலைப்படத் தேவையில்லை மேடம்! அவன் தங்கச்சியைத் தவிர்த்துட்டுப் பார்த்தா முரளி ஒண்டிக்கட்டை போலத்தான். சின்ன வயசிலேயே அம்மா இறந்துட்டாங்க. சமீபத்துல குடிகார அப்பாவும் காலமாயிட்டார். காயத்ரிகிட்டே பேசிப் பார்த்ததில் சொந்த பந்தங்களோடு அவங்களுக்குத் தொடர்பே இல்லைன்னு தெரிஞ்சது."

"அப்படின்னா இவனோட விஷயத்தில் அந்தப் பொண்ணு காயத்ரியை மட்டும் சமாளிச்சாப் போதும்..!"

"போதும் மேடம். அவளும் ஒரு வெகுளிப் பொண்ணு. அவளை சுலபமா ஏமாத்திடலாம்."

"புவன்யா, டாக்டர் சொல்றபடி பார்த்தா சிப்லொகேஷன் ஒரே அட்டெம்ட்டில் வெற்றி கிடைக்கிற சமாச்சாரம் இல்லைன்னுதான் படுது. சில உயிர்களைப் பலி குடுத்துத்தான் அதைக் கத்துக்க வேண்டி இருக்கும். முரளி நிச்சயமா இதில் முதல் பலியா இருக்கப்போறான். ஒருவருஷம்



வரைக்கும் காயத்ரி வாயைத் திறக்க மாட்டா அதுக்கப்புறம் அவ அண்ணனைத் தேட, ஆரம்பிப்பா. அப்ப நமக்குத் தலைவலி ஏற்பட வாய்ப்பிருக்கு."

"சமாளிக்கலாம் மேடம்.."

"எப்படி?"

"சிம்ப்பிள். முரளி மேலே திருட்டுப் பட்டம் சுமத்தலாம். தங்கச்சி கல்யாணத்துக்கு பணம் சேர்க்கிற வெறியில் சில விலையுயர்ந்த கருவிகளோட தலைமறைவாயிட்டான்னு ப்ளேட்டைத் திருப்பிட வேண்டியதுதான்."

"அப்படித்தான் செய்யணும்.."

லீமா தலையாட்டினாள்:

✯☆✵

ஆர்த்திக்கு ஏறக்குறைய வீட்டில் சிறைப்பட்டது போன்ற நிலைமை.

அந்த முரட்டு ஆசாமிகள் இரண்டு பேரும் நவீனத் துப்பாக்கிகளோடு ஒவ்வொரு நிமிஷமும் ஆர்த்தியைக் கண்கொத்திப் பாம்பைப் போல் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். அவள் ஓய்வெடுக்க விரும்பினால் ஜன்னல்களற்ற ஏ.சி.படுக்கையறையில் ஓய்வெடுக்கலாம். காலையும், மாலையும் குளியலறையில் அனுமதிக்கப்பட்டாள்.

அந்த இரண்டு அறைகளைத் தவிர எங்கு சென்றாலும் துப்பாக்கியின் ஒற்றைக் கண் அவளைத் தீவிரமாய்க் குறி பார்த்தது.

திடீரென்று யாராவது வீட்டுக்கு வரும் பட்சத்தில் அவர்கள் மறைவிடத்தில் நின்று கொள்கிறார்கள். வந்தவர்களை சாமர்த்தியமாய் பேசி அனுப்பவேண்டியது ஆர்த்தியின் பொறுப்பு.

வந்தவர்களிடம் சந்தேகத்துக்கிடமாய் நடந்து கொண்டாலோ, சங்கேதமாய் ஏதாவது சொல்ல முயன்றாலோ உன்னோடு சேர்ந்துவந்தவர்களும் தீர்த்துக் கட்டப்படுவார்கள் என்று தீவிரமாய் மிரட்டியிருந்தார்கள்.

தனக்கு ஏதாவது நேர்ந்தால் பரவாயில்லை. தன்னால் அடுத்தவர்களுக்கு பாதிப்பு வரக்கூடாது என்ற கவலையில் அவர்கள் சொன்ன பேச்சுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டாள்.

அப்படியிருந்தாலும் அவள் மனசின் ஒரு விளிம்பில் இருபத்திநாலு மணி நேரமும் தொடர்ச்சியாய் சிந்தனை.

'இவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு எப்படியாவது தப்பிக்க வேண்டும்'

'எப்படித் தப்பிக்க?'- யோசனை சட்டென்று அறுந்தது.

"என்னம்மா ஆர்த்தி, பலமா யோசனை?"-எதிரே துப்பாக்கியோடு அவன்.

"ஒ.. ஒண்ணுமில்லை..."

"நீ தீவிரமா யோசிக்கறேன்னு உம் மூஞ்சிலே எழுதி ஒட்டியிருக்கே..." ஒருவன்

கிரைம் சக்கரவர்த்தி

## ராஜேஷ்குமார்

கறைப் பற்களைக் காட்டி சிரித்துக் கொண்டே கேட்டான்.

"இன்னும் எத்தனை நாளைக்கு என்னை இப்படி ஹவுஸ் அரெஸ்ட்ல வெச்சிருப்பிங்க?"

"அது உங்க அப்பாவோட நிலைமையைப் பொறுத்தது. எங்க தலைவர் அவர் கிட்ட ஒப்படைச்சிருக்கும் காரியத்தை எவ்வளவு சீக்கிரமா செஞ்சு முடிக்கறாரோ அவ்வளவு சீக்கிரமா நீ விடுதலை ஆயிடலாம்...

அவன் சொன்னபோது சுவரில் அப்பியிருந்த க்வார்ட்ஸ் கடிகாரம் ஐந்தரை மணியை இசைத்தது.

எழுந்தாள் ஆர்த்தி.

வார்ட்ரோபில் இருந்து மாற்று உடைகளை எடுத்துக் கொண்டு குளியலறை நோக்கிப் போனாள்

"காலைல குளிக்கறது போதாதுன்னு தினமும் சாயந்தரக் குளியல் வேறா..?"

"இது என்னோட அன்றாடப் பழக்கம். உங்களுக்காக மாத்திக்க முடியாது."

சொல்லிக் கொண்டே பாத்ரூமில் நுழைந்து கதவை உட்பக்கம் தாளிட்டாள்.

பைப்பைத் திருகி விட்டாள்.

கொடகொடவென்று சப்தத்துடன் தண்ணீர் விழ ஆரம்பித்தது.

ஆர்த்தி யோசனையாய் பாத்ரூம் வெண்ட்டிலேட்டரைப் பார்த்தாள்.

மிகவும் உயரத்தில் இருந்தது.

'பத்து நிமிஷம்தான் உனக்கு குளிக்கடயம். அதுக்கு மேல பாத்ரூமை விட்டு வெளியே வரலைன்னா நாங்க கதவை உடைப்போம்.'

ஏற்கெனவே கொடுத்திருந்த அவர்களுடைய எச்சரிக்கை ஆர்த்தியின் மனசில் எதிரொலித்தது.

அந்த பத்து நிமிஷ அவகாசத்துக்குள் இங்கிருந்து தப்பி- உதவிக்கு ஆட்களைக் கூட்டி-இவர்கள் இரண்டு பேரையும் மடக்க முடியுமா?

கவலையோடு வெண்டிலேட்டரைப் பார்த்தாள். ஒவ்வொரு முறை பாத்ரூமுக்குள் வருகிற போதும் அந்த வெண்டிலேட்டர் வழியே தப்ப வேண்டும் என்று மனசு பரபரக்கிறது.

காலி பக்கெட்டைக் கவிழ்த்துப் போட்டு அதன் மேலேறி எம்பிப் பார்த்தாள்.

ஊஹூம்.

இன்னும் இரண்டடி பற்றாக்குறை.

சுவரில் பொருத்தியிருந்த கெய்சரும் அதன் செவ்வக கன்டெய்னரும் அவள் கண்ணை உறுத்தியது.

காலி பக்கெட்டின் மேல் அந்த கன்டெய்னரைப் போட்டால் உயரம் சரியாய் இருக்கும்.

ஆர்த்தி இயங்க ஆரம்பித்தாள்.

முதலில் கெய்சர் சுவிட்சை அணைத்தாள்.

ரப்பர் ஹோல்களை சுலபமாய் பிடுங்கி விட்டாள். க்ளாம்ப்பினால் பிணைக்கப்பட்டிருக்கும் அந்த கன்டெய்னரைக் கழற்றுவதுதான் சிரமமான விஷயம்.

'அசைத்துப் பார்க்கலாம்!' 'கன்ட்டெயினரின் உடம்புக்கு சேதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை!'

கவிழ்த்துப் போட்ட காலி பக்கெட்டின் மேல் ஏறி நின்று கன்ட்டெயினரை அசைத்தாள் ஆர்த்தி.

கொஞ்சம் விசை தந்ததுமே அது ஆட்டம் காண ஆரம்பித்தது.

ஆட்டம் கண்ட கன்ட்டெயினரை வெடுக்கென இழுக்க-அவள் நினைத்ததைவிட சுலபமாய்க் கையோடு வந்துவிட்டது.

முகத்தில் சட்டென்று சந்தோஷம் பூத்துக் கொள்ள பக்கெட்டின் இடத்தை மாற்றினாள். அதன் மேல் கன்ட்டெய்னரை நீளவாக்கில் நிறுத்தினாள்.

சுவரை ஜாக்கிரதையாய்ப் பிடித்துக் கொண்டு பாலன்ஸ் செய்து-ஏற ஆரம்பித்த ஆர்த்தி-வெண்டிலேட்டரைப் பிடித்துக்கொண்டு வெளியே எட்டிப் பார்த்தாள்.

திடுக்கிட்டாள்.

★★★

நிவாஸைப் பார்த்து ஆச்சரியப் பட்டாள் காயத்ரி.

"வாங்க..."

அவன் உள்ளே வந்து அமர்ந்தபோது காயத்ரி புன்னகையோடு கேட்டாள்.

"ரெண்டு நாள்ல மறுபடி வந்திருக்கீங்க. என்ன விஷயம்?"

நிவாஸ் பதில் புன்னகை பூத்தான்.

"அன்னிக்கு முரளியோட நண்பன்ங்கற முறையில் வந்திருந்தேன். இன்னிக்கு ஆபீஸ் சமாச்சாரமா இங்கே வந்திருக்கேன்."

காயத்ரி வியப்போடு அவனைப் பார்த்தாள்.

"ஆபீஸ் விஷயமாவா?"

"ஆமா. ஆபீஸ்ல என்னை அனுப்பியிருக்காங்க."

"எதுக்கு..?"

"செட்டில்மென்டுக்காக."- சொன்னவன் தொடர்ந்தான்.

"முரளி ஆபீஸ் அட்வான்ஸ் வாங்கியிருக்கான். பிடித்தங்களைக் கழிச்சது போக முரளி ஆபீஸ்க்கு கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய்க்குப் பக்கம் கட்ட வேண்டியிருக்கு."

(வரும்)

## ஒரு வாக்குக்கு 10 கோடி பேரம்



பதிவு செய்யப்பட்ட உலக கிரிக்கெட் சபைகளில் அதிக பணப்புழக்கம் உள்ள ஒரே கிரிக்கெட் சபையென்றால் அது இந்திய கிரிக்கெட் சபைதான்.

இம்முறை இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் போட்டி தமிழகத்தின் தலைநகர் சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

அகில இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் 31 செயற்குழு உறுப்பினர் உள்ளனர். இம்முறை தற்போதைய தலைவர் ஏ.சி. முத்தையாவை எதிர்த்து முன்னாள் தலைவர் ஜக்மோகன் டால்மியா எதிர்த்துப் போட்டியிட்டார்.

முத்தையாவுக்கு 20 வாக்குகளும் டால்மியாவுக்கு 11 வாக்குகளும் கிடைக்கும் எனக் கணிப்பிடப்பட்டது. எப்படியும் தலைவராகி விட வேண்டும் என்ற எண்ணத்தில் பணத்தை வாரியிறைத்து வாக்குகளைத் தன் பக்கம் எடுக்கத் திட்டமிட்டார் டால்மியா.

இதன்படி ஒரு வாக்குக்கு 10 கோடி இந்திய ரூபாய் என்று பேரம் பேசப்பட்டதாக தமிழக இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. அதுமட்டுமன்றி நட்சத்திர ஹோட்டல்களில் பெரிய திரை மற்றும் சின்னத்திரை நட்சத்திரங்கள் கலந்துகொள்ள அமர்க்களமான விருந்துகளும் வைக்கப்பட்டதாக அந்த இதழ் கூறியுள்ளது.

இறுதியில் டால்மியா தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

## ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதம்

நெதர்லாந்து நாட்டில் அண்மையில் ஒரு புரட்சி நடந்திருக்கிறது. அந்நாட்டில் விபசாரத் தொழில் புரிவோர் அரசாங்கத்திற்கு எதிராக அங்குள்ள வங்கி ஒன்றின் முன்பாக நீண்ட போராட்டம் நடத்தியதன் விளைவாக அத்தொழிலை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இதன் மூலமாக விபச்சாரிகள் அனைவரும் வங்கிகளில் இருந்து கடன் பெறவும், காப்புறுதி செய்து கொள்ளவும், வரிச்சலுகைகள் பெறவும் வழியேற்பட்டுள்ளது. அத்துடன் அவர்களது 'தொழிலும்' பிற தொழில்கள் போல் கௌரவமாக மதிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இதன் விளைவாகவோ என்னவோ பங்களாதேஷின் உயர் நீதி மன்றமும் விபச்சாரம் கௌரவமான தொழில் என்று அறிவித்து விட்டது. இப்படி அறிவிக்கப்பட்டதும் அங்கு இதற்கு எதிர்ப்புக் கிளம்பி விட்டது.

ஈரான் நாட்டில் விபச்சாரிகளை யார் வேண்டுமானாலும் தண்டிக்கலாம் என்று மதவாதிகள் சிலர் கூறி விட ஒரே நாளில் சுமார் 20 விபச்சாரிகள் என்ற விகிதத்தில் தினமும் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

தொழில் என்னவோ ஒன்றுதான். ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான மரியாதை.

## குறையுள்ள குழந்தைகளுக்குக் காரணமான 'புகை' அம்மாக்கள்



அமெரிக்காவில் பெருகிவரும் புகை பிடிக்கும் அம்மாக்களால் அவர்களது குழந்தைகள் கடுமையான பாதிப்புக்குள்ளாவதாக கணக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கிறது.

குழந்தை பெற்றவர்களிடம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் பெரும்பாலான குழந்தைகள் நிறை குறைவாகப் பிறந்ததற்கு 'புகை' அம்மாக்கள் காரணமாக இருந்தது தெரிய வந்துள்ளது.

இப்படிப்பட்ட அம்மாக்கள் ஒரு நாளைக்கு ஒரு டசின் கணக்கில் சிகரெட்டை ஊதித் தள்ளுகிறார்களாம். இவர்கள் பாடசாலைகளில் படிக்கும்போது ஆண் நண்பர்களோடு சேர்ந்து புகை பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளானவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

அத்துடன் ஹேரோய்ன், மதுபானம் போன்ற போதைப் பொருட்களைப் பாவித்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

16முதல் 19 வயதிற்குள் கெட்டுப்போகும் இப்பெண்கள் பின்னர் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும்போது குறையுள்ள குழந்தைகளுக்குக் காரணமாகிறார்கள்.

சில குழந்தைகளுக்கு புற்றுநோய் வந்து அவர்களைப் பாடாய்ப்படுத்தியும் விடுகிறது.

## துணிச்சல்கார பெண் நிருபர்

ஆப்கானிஸ்தானின் தலிபான் தீவிரவாத அமைப்பிடம் உண்ணாவிரதம் இருந்து விடுதலையாகி வந்திருக்கிறார் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பெண் நிருபரான யோனோ ரிட்லே.

கடந்த மாதம் போர் குறித்துத் தகவல்கள் சேகரிக்க துணிச்சலுடன் ஆப்கானுக்குள் நுழைந்தார் இவர். ஆப்கானில் பெண்கள் அனைவரும் புர்கா அணிய வேண்டும் என்ற தலிபானின் சட்டத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார்.

உடல் முழுவதும் புர்காவால் மறைத்துக்கொண்டு ஆப்கான் முழுவதும் சுற்றி வந்து செய்தி சேகரிக்கத் தொடங்கினார் ரிட்லே. என்ன தான் உடலை மறைத்துக் கொண்டாலும் இவரது மேற்கத்திய பாணி நடைமுறை காட்டிக்கொடுத்து விட்டது.

கடந்த செப்டெம்பர் மாதம் 28ம் திகதி தலிபான் அமைப்பால் இவர் கைது செய்யப்பட்டார். தனது விடுதலைக்காக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட, தலிபான் விடுதலை செய்து பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்து விட்டது.

தலிபானின் சிறையில் இருந்து திரும்பிய ரிட்லே தன்னை அவர்கள் நல்ல முறையில் நடத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

## காதலுக்குத் தூதுபோன வீரர்



டென்னிஸ் உலகப் பிரபலங்கள் ஆன்ட்ரே அகாஸியும் ஸ்டெபி கிராஃபும் காதலித்து இப்போது குழந்தைக் காகக் காத்திருக்கிறார்கள். ஹொலிவூட் நடிகை புரூக் ஷீல்ட்டுடன் 2 வருட கால திருமண பந்தத்தின் பின் விவாகரத்தானவர் அகாஸி.

கார்ப்பந்தய வீரரான மைக்கல் பார்ட்லஸுடனான 7 வருடக் காதல் முறிந்த பின் தனியாக இருந்தார் ஸ்டெபி.

அந்த நேரத்தில்தான் இருவருக்கும் இடையில் நட்பு மலர்ந்தது. முதலில் தமது சோகங்களைப் பகிர்ந்து, ஒருவருக்கொருவர் ஆறுதல் தேடிக் கொண்டபோது இருமனங்களும் இணைந்துவிட மீண்டும் ஒரு காதல் அத்தியாயம் தொடங்கப்பட்டது.

ஆனால் இருவரும் ஒருவரிடம் மற்றவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஒருமுறை அகாஸி, "நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று கூற அதை தமாஷ் என்று எண்ணி ஒன்றும் பேசாமல் இருந்து விட்டார் ஸ்டெபி.

இருப்பினும் தனது ஆசையை அதற்கு மேல் வெளியிடாமல் இருந்த அகாஸி, வேறொரு வழியை நாடினார். அவர் வேறுயாருமல்ல இன்னொரு டென்னிஸ் வீரரான பொரிஸ் பெக்கர்.

பெக்கரும் ஸ்டெபியும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர்கள். ஒருமுறை பெக்கரிடம் தனது காதலைச் சொல்லி தூது அனுப்பினார் அகாஸி. அதன் பின் இவர்களது காதல் பயணம் ஜெட் வேகத்தில் பறந்தது தெரிந்ததுதானே.

# எஸ்.டி.எஸ். தொடர் 72

# அடுத்த தேர்தலுக்கான ஆயத்தங்கள்

தமிழரசுக் கட்சி உருவாகி வட-கிழக்கு மாகாணங்களில் தனது கிளைகளைப் பரப்புவதற்கான பிரயத்தனங்களைச் செய்து கொண்டிருந்தபோதே காலம் வெகு வேகமாகச் சுழலத் தொடங்கி விட்டது. முதலாவது பாராளுமன்றம் தனது ஆயுட்காலத்தை நிறைவேற்றி முடித்துவிட்டு இரண்டாவது பாராளுமன்றத்தைத் தோற்றுவிப்பதற்கான காலம் அண்மித்துக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் 1952ம் ஆண்டு கொழும்பில் 'கொழும்புத் திட்ட மாநாடு' நடைபெற்றது. இம்மாநாட்டுடன்



திரு.டி.எஸ்.சேனநாயகா

கொழும்பு விக்டோரியா பூந்தோட்டத்தில் சர்வதேசக் கண்காட்சி ஒன்று மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தக் கால கட்டத்தில் எவருமே சற்றும் எதிர்பாராத அசம்பாவிதம் ஒன்று இடம்பெற்றது.

இந்நாட்டின் முதலாவது பிரதம மந்திரியான கௌரவ.டி.எஸ். சேனநாயகா அகால மரணமானார். சேனநாயகா அவர்கள் காலை வேளையில் காலிமுகத திடல் சென்று குதிரைச் சவாரி செல்வது வழக்கம். இடைவிடாத தேகப் பயிற்சியும் குதிரைச் சவாரியும் அவரை எப்போதும் திடகாத்திரமாகவே வைத்திருந்தது. அன்றைய தினம் சேனநாயகா அவர்கள் சவாரி செய்த குதிரை அவரை தரையில் வீழ்த்தி விட்டது. இதுவே அவருடைய மறைவுக்கு காரணமாகிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும், நாட்டின் பிரதமராகவும் விளங்கிய திரு.சேனநாயகாவின் மறைவினால் உடனடியாக கட்சியின் தலைவராகவும் பதில் பிரதமராகவும் மற்றுமொருவரை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டிருந்தது.

திரு.சேனநாயகாவின் அடுத்த நிலையில் கட்சியின் தலைவர்களாக நியமனம் பெறவேண்டிய சில முக்கிய தலைவர்கள் இருந்தபோதும் திரு.சேனநாயகா அவர்களின் புதல்வரான திரு.டட்லி சேனநாயகா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டி.எஸ்.சேனநாயகா அவர்களின் பின்னர் கட்சியின் தலைவராகவும்,பிரதமராகவும், பதவியேற்கத் தகுதி பெற்றவர்களுள் திரு.ஜோன் கொத்தலாவல அவர்களும் திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களும் இருந்தனர். அவ்வாறு இருந்தும் மறைந்த தலைவரின் மகனை அப்பதவியில் நியமிப்பதற்கு கட்சி தலைமைப்பீடம் எடுத்த முடிவு மேற்கூறப்பட்ட இருவரையும் சங்கடத்தில் ஆழ்த்தியது. இவ்விருவரும் ஏறத்தாழ சமமான அந்தஸ்தினை கட்சிக்குள் பெற்றிருந்தமையினால், தலைமைப்பதவிக்கு வருவதில் இருவருக்குமிடையில் பனிப்போர் நிலவியது. இவர்கள் இருவரில் எவரை அப்பதவிக்கு நியமித்தாலும் கட்சிக்குள் பெரும் பிளவு ஏற்படலாம் என்ற நிலை உருவாகியிருந்தமையினால், திரு.டட்லி சேனநாயகா அவர்களின் நியமனம் ஓரளவு வரவேற்கத்தக்கதாக அப்போது இருந்தது.



திரு.ஜி.பாலசுப்பிரமணியம் (பாலா)

தமிழரசுக் கட்சி 1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதியன்று அங்குரார்ப்பனம் செய்யப்பட்டது. இப்பொழுது- 1952ம் ஆண்டு பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன. இடையில் ஆக மூன்று வருடங்கள் மட்டுமே தமிழரசுக் கட்சிக்கு அவகாசம் இருந்தது. இக்காலக் கெடுவுக்குள் வடகிழக்கில் கட்சியை வளர்த்து பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு உரிய வேட்பாளர்களைத் தேர்நதெடுப்பது என்பது பகீரத பிரயத்தனமாக இருந்தது. தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை தமிழ்பேசும் மக்களின் மத்தியில் விளக்கிப் பிரசாரம் செய்வதற்கே போதுமான கால அவகாசம் இருக்கவில்லை. இதற்கிடையில் கட்சி வேட்பாளர்களாக நிற்பதற்குரியவர்களைத் தெரிவு செய்வது என்பது முடியாத காரியம். இருப்பினும் கட்சித் தலைவர்கள் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களைச் சுற்றி வந்தனர். கொள்கைகளும் தலைவர்களும் மக்கள் மத்தியில் பிரபலமடையாமல் இருந்தமையும் கட்சியின் எதிரிகளாக விளங்கிய பலருடைய எதிர்ப்பிரசாரங்களும் இருந்தமையினாலும் கட்சித் தலைவர்களின் நடவடிக்கைகளில் பலதரப்பட்ட தயக்கங்கள் ஏற்படவே செய்தன. இவை எல்லாவற்றையும் விட பொருளாதார நிலையில் கட்சி மிகவும் பின்னடைந்தே காணப்பட்டது.

மட்டக்களப்பின் பல தேர்தல் தொகுதிகளுக்கும் சென்று அடுத்துவரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்குடன் தந்தை செல்வா உட்பட ஏனைய பல தலைவர்களும் வந்து சேர்ந்தனர். அப்போது மட்டக்களப்பில் இருந்த நிலை பற்றி ஏற்கனவே நான் விபரமாகக் கூறியிருந்தேன். மட்டக்களப்பைச் சேர்ந்த எந்தக் கன-தனவான்களும் தமிழரசுக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து உரையாடுவதற்குக்கூட விரும்பவில்லை. இந்த வேளையில் மட்டக்களப்பு அமிர்தகழியில் வசித்து வந்த திரு.ஆர்.வி.கதிர்காமர் அவர்கள் மட்டக்களப்பு நகரத் தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட முன் வந்திருந்தார். அவர் ஒரு சட்டத்தரணி. இருப்பினும் போதுமான பணவசதி கொண்டவரல்ல. அங்கு வந்திருந்த தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் திரு. இராசதுரை அவர்களுக்கு நெருக்கம் இருந்ததை அறிந்த கதிர்காமர் அவர்கள் திரு.இராசதுரையை அணுகி தமிழரசுக் கட்சியின் ஒத்தாசையைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார். அமிர்தகழியில் தேநீர் கடை வைத்திருந்த மற்றுமொரு இராசதுரை அவர்களும் வேறு சிலரும் ஒரு நாள் மாலை திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்களால் நடாத்தப்பட்டு வந்த சித்திரா ஸ்டூடியோவுக்கு வந்து சோந்தனர். அங்கு திரு.ஆர்.வி.கதிர்காமர் அவர்களுடைய தமிழரசுக் கட்சியில் இணைந்த வேட்பாளராக போட்டியிடும் விருப்பம் பற்றி ஆராயப்பட்டது. திரு.சிவநாயகம் அவர்களோ இதற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்கவில்லை.

தமிழரசுக் கட்சியில் இணைவதானால் முதலில் பகுத்தறிவு இயக்கத்தில் சேர்ந்து, அதன் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு சம்மதம் அளிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். இன்னும் தமிழரசுக் கட்சிக் கொள்கைகள் பற்றியும் வந்திருக்கும் தலைவர்களுடன் திரு. கதிர்காமர் கலந்துரையாடி தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும் என்று அங்கு வந்திருந்தவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. வந்திருந்தவர்கள் இத்தகவலை திரு.கதிர்காமர் அவர்களிடம் தெரிவித்து சம்மதம் பெற்றுவருவதாகக் கூறிச் சென்றனர். அடுத்த நாள் மாலைவரை இக்கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டது.

திரு.கதிர்காமர் அவர்களோ, தான் பகுத்தறிவு இயக்கத்தின் கொள்கைகளை மனப்பூர்வமாக ஆதரிப்பதாக ஒப்புதல் அளித்தார். ஆனால் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவதில் சற்று தயக்கம் காட்டினார். இதற்கும் காரணமும் இல்லாமலில்லை. அவரை தேர்தலில் ஆதரிக்கவிருக்கும் வாக்காளர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தாரை வெறுப்பவர்களாக அப்போதிருந்தனர். அத்தகையோர் அனைவரையும் கண்டு கலந்தாலோசித்த பின்னர் நேரடியாக கட்சி வேட்பாளராக போட்டியிட நோக்கம் கொண்டிருப்பதாகவும் கூறிய அவர் மேலும் சில நாட்கள் தனக்கு அவகாசம் தரும்படி கேட்டுக் கொண்டார். திரு.கதிர்காமரிடம் முடிவினை அறிந்து தங்களுக்கு அறிவிக்கும்படி கட்சித் தலைவர்கள், சுண்ணாகத்தைச் சேர்ந்த நியாயவாதியான திரு.நடராஜா அவர்களிடமும் அப்புக்காத்து உலகசேதாரம் மற்றும் திரு.மு.மாணிக்கம் ஆகியோரிடம் பொறுப்பினை ஒப்படைத்துவிட்டு கல்முனை நோக்கி சென்றனர். இறுதியில் தமிழரசுக் கட்சியின் ஆதரவு பெற்ற வேட்பாளராக திரு.கதிர்காமர் மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிடுவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. இருப்பினும் இந்த முடிவினை திரு.சிவநாயகம் அவர்கள் பூரணமாக ஆதரிக்கவில்லை.

திரு.ஆர்.பி.கதிர்காமர் அவர்களின் தமிழரசுக் கட்சி ஆதரவு பற்றி அறிவித்தலை திரு.இராசதுரை அவர்கள் மட்டக்களப்பு மைதானத்தில் முதல் முதலில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போது வெளியிட்டார்.


அன்று தான் திரு.இராசதுரை அவர்களின் மிகச் சிறப்பான தமிழ்ப் பொழிவை மட்டக்களப்பு மாநகரமே கேட்டு மகிழ்ந்தது. திரு.கதிர்காமர் அவர்களுக்கு அந்தக் கூட்டத்தில் போதுமான ஆதரவு ஆரம்பத்தில் இருந்ததோ இல்லையோ, திரு. இராசதுரை அவர்களின் பேச்சில் அனைவரும் உறைந்துபோய் கரவொலி எழுப்பவும் மறந்து போய் இருந்தனர்.

அம்முறைத் தேர்தலில் மட்டக்களப்பில் திரு.கதிர்காமர் வெற்றியீட்டினார். இந்த வெற்றிக்கு முழுமுதற் காரணமாக இருந்தவர் திரு.இராசதுரை அவர்களே என்றால் அது மிகையாகாது.

கட்சியின் ஆரம்ப காலத்திலேயே மாணவப் பருவத்தில் இருந்து என்னைப் போன்ற பலர் இணைந்து கொண்டனர். கொழும்பில் நடைபெற்ற கட்சியின் அங்குராட்பணக் கூட்டத்தில் பங்குபற்றி விழா ஆரம்பப்பாடலை நானே பாடினேன் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். என்னுடன் திரு.ஜி.பாலசுப்பிரமணியம் (பாலா) மற்றும் கே.ஆனந்தராஜா ஆகியோரும் வந்திருந்தனர்.

பாலா அவர்களைப்பற்றி தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். திரு.மோகன் ராஜ், அவர்களின் 'அப்சராஸ்' இசைக்குழுவில் இணைந்து பல ஐரோப்பிய நாடுகளிலும் பாடி பிரசித்தி பெற்றவர் அவர். சற்று வயதான தோற்றமுடையவராக பாலா காணப்பட்டாலும் அவருடைய துள்ளலாட்டப் பாடல்களால் பலரையும் கவர்ந்தவர் அவர். அவர் இப்போது எம்மிடம் இல்லை இருப்பினும் அவருடைய குரலைக் கேட்டவர்கள் என்றுமே அவரை மறக்கமாட்டார்கள். திரு.ஆனந்தராஜா அவர்களும் 1990ம் ஆண்டு திருகோணமலை சென்றவர் மீண்டும் திரும்பவில்லை. அவருடைய குடும்பத்தார் அவருக்கு இறுதிக் கடன்களைச் செலுத்தவும் முடியாத துர்ப்பாக்கி நிலை ஏற்பட்டு விட்டது.

மாணவப் பருவத்திலேயே தமிழரசுக் கட்சியின் கோட்பாடுகளில் ஆர்வம் கொண்டு கட்சிப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தியோர்களில் மற்றுமொருவர் திரு. மசூர் மௌலானா அவர்கள். ஏற்கனவே



திரு.மசூர் மௌலானா

இவருடைய தந்தையார் இவரைப் பற்றி தந்தை செல்வாவிடம் கூறிய கருத்துக்களை இப்பத்திகளில் தெரிவித்திருந்தேன். மிகவும் சரளமாகவும் நகைச் சுவையாகவும் மேடையில் பேசவல்லவர் இவர். மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.மசூர்மௌலானா இன்று முஸ்லிம் காங்கிரசின் மேலதிக கொள்கை பரப்புச் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார். (திரு.மசூர்மௌலானா அவர்கள் பற்றிய மேலதிக விபரங்களும் தகவல்களும் பின்னர் தெரிவிக்கிறேன்)

கல்முனை நோக்கிச் சென்ற தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மருதமுனையில் உள்ள திரு.மசூர் மௌலானா, அவர்களுடைய இல்லத்துக்கே முதன்முதலில் சென்றனர்.

அவருடைய தந்தையார் தலைவர்களை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்தார். கல்முனைத் தொகுதி யில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்து கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்கள் விண்ணப்பித்திருந்தார். அவரைக் காண்பதற்காகவே தலைவர்கள் கல்முனை சென்றிருந்தனர். **(வளரும்)**

இரா.பத்மநாதன்

# வாரம் ஒரு வார்த்தை!

## தென்கச்சி – கோ.சுவாமிநாதன்

### 39. பெண்களின் முதுமை

ஒரு டவுன் பஸ் போக்கிட்டிருந்தது. கூட்டம் கொஞ்சம் அதிகம்தான்.

ஒரு பெண் கொஞ்சம் சிரமத்தோட மேலே கம்பியைப் பிடிச்சிக்கிட்டு நின்னுகிட்டிருந்தாங்க! கண்டக்டர் பார்த்தார். "அந்த அம்மாவுக்கு யாராவது ஒரு இடம் குடுங்க சார் உட்காரட்டும்!"ன்னார்.

ஒருத்தர் எழுந்திரிச்சு இடம் குடுத்தார். அந்த அம்மா உக்கார்ந்தாங்க. எல்லாம் சரி!

இப்ப அவங்க முகம் எப்படி இருந்திருக்கும்னு நினைக்கிறீங்க! கொஞ்சம் நன்றி உணர்வோட அந்த கண்டக்டரைப் பார்த்திருக்கும்-எழுந்திரிச்சி இடம் குடுத்தவரைப் பார்த்திருக்கும்! இதுதானே உங்க நினைப்பு?

ஆனா அப்படி இல்லே! ரொம்ப கோவமாக அந்தக் கண்டக்டரை முறைச்சிப் பார்த்துட்டு அந்த இடத்துலே உக்காந்தாங்க. கடைசி வரைக்கும் முகத்துலே தெரிஞ்ச அந்த கடுகடுப்பு மாறவே இல்லே!

எனக்கு இது ஆச்சரியமா இருந்தது. 'என்ன விஷயம்?' ன்னு தெரிஞ்சுக்கணும்ன்னு எனக்குள்ளே ஒரு ஆவல்.

ஒரு இடத்துலே பஸ் நின்னுது. அவங்க இறங்கினாங்க. நானும் இறங்கினேன். கொஞ்சம் தைரியத்தை வரவழைச்சிக்கிட்டு கிட்டே போனேன்.

"ஏங்க? அந்த கண்டக்டர் ரொம்பவும் இரக்கப்பட்டு உங்களுக்கு ஒரு இடம் கொடுக்கச் சொன்னாரே.. அவரு ரொம்ப நல்லவரு இல்லையா?"ன்னேன்.

"நல்லவருதான். யாரு இல்லேன்னாங்க?" அப்படின்னாங்க.

"அப்படின்னா அவரு அப்படிச் சொன்னதும் நீங்க ரொம்பவும் கோவமா இருந்தீங்களே!"ன்னேன்.

"பின்னே என்னாங்க...? என்னைப் பார்த்து அம்மாங்கறாரே! என்னைப் பாத்தா அவ்வளவு வயசு ஆனதாவா தெரியுது? அந்த 'அம்மா'வுக்கு யாராவது இடம் குடுங்கன்னு தானே சொன்னாரு! அதுதான் எனக்குக் கோவம்! இப்ப நீங்களே சொல்லுங்க. எனக்கு என்ன வயசிருக்கும்?"ன்னாங்க.

நான் என்ன அந்த அளவுக்கு விவரமில்லாத ஆளா? மனசுலே என்ன தோணிச்சோ அதுலே ஒரு 20 வயசை குறைச்சிக்கிட்டு சொன்னேன். 'என்ன ஒரு 20 இல்லேன்னா 21 இருக்கும்'ன்னேன்.

'நீங்கதான் சார் ஜீனியஸ்'ன்னு சொல்லிபுட்டு அவங்க ரொம்பவும் சந்தோஷமா போயிட்டாங்க.

இது எதுக்கு சொல்ல வந்தேன்னா முதுமையை நாம யாரும் ஆசைப்பட்டு கூப்பிடறதில்லை. ஆனா அதுவா ஆசைப்பட்டு நம்மை நெருங்கி வந்துக்கிட்டிருக்கு.

அதுகூட பாருங்க விவரம் தெரியாமே பெண்கள்ன்னா கொஞ்சம் சீக்கிரமா வந்துடுது. ஆண்களோட ஒப்பிட்டுப் பார்க்கறப்போ பெண்களுக்கு முதுமை சீக்கிரமே வந்துடுது! இது ஒரு பொதுவான அபிப்பிராயம். விஞ்ஞான ரீதியா இது உண்மையா?

இதைத் தெரிஞ்சிக்கறதுக்காக அமெரிக்காவுலே 'யேல்' பல்கலைக்கழகத்துலே ஒரு ஆராய்ச்சி நடந்திருக்கு. அதிலேருந்து சில முக்கியமான தகவல்லாம் கிடைச்சிருக்கு.

'மனுஷ உடம்புலே செல்கள் தொடர்ச்சியா இறந்துகிட்டே இருக்கும்! இதை 'செல்களில் இனப் பெருக்கம்'ன்னு சொல்றாங்க.

ஒரு குறிப்பிட்ட வயசு ஆகறப்போ, ஆண்களுக்கும் பெண்களுக்கும் புது செல் உண்டாகிறது குறைஞ்சுடும். அந்த சமயத்துலேதான் உடம்புலே தசைகள் சுருங்க ஆரம்பிக்குது. அதனாலேதான் வயசான தோற்றம் உண்டாகுது!

இப்ப நடந்த ஆராய்ச்சிகள்லேயிருந்து என்ன தெரியுதுன்னா.. "இந்த செல்களின் இயக்கம் ஆண்களை விட பெண்களுக்கு சீக்கிரமாகவே குறைய ஆரம்பிச்சுடுது"ன்னு தெரிய வந்திருக்கு!

குறிப்பா எந்த வயசுலே இந்த இயக்கம் குறைய ஆரம்பிக்குது? அதை துல்லியமா சொல்ல முடியலே! இருந்தாலும் ஆண்களுக்கு 35 வயசுலே இது ஆரம்பிக்கும்னா பெண்களுக்கு 30 வயசுலேயே இந்த இயக்கம் குறையலாம்ன்னு கண்டுபிடிச்சிருக்காங்க!

அதனாலேதான் பாருங்க. சில சமயம் கிட்டத்தட்ட ஒரே வயசுலே கல்யாணமான தம்பதிகளை கொஞ்ச நாள் கழிச்சி பார்த்தா கணவனைவிட மனைவிக்கு வயசு அதிகமா தோணும்!

பல பேரு நினைச்சிக்கிட்டிருக்காங்க... குழந்தை பொறக்கறதுனாலே தான் பெண்களுக்கு முதிர்ச்சி அதிகமாகுது-ன்னு! அது சரியில்லையாம். குழந்தை பேறுக்கும் முதுமைக்கும் சம்பந்தமில்லைன்னு சொல்லுது இந்த ஆராய்ச்சி.

அது இருக்கட்டும். பெண்கள் உடம்புலே சீக்கிரமா குறையற இந்த செல்களின் தன்மையை மேம்படுத்தறதுக்கு ஏதாவது வழியுண்டா? புது ஹார்மோன் எதையாவது கண்டுபிடிச்சாதான் அது முடியும். 'ஜெனிடிக் கோடிங்' அப்படிங்கற புதிய துறையிலே இது சம்பந்தமான ஆராய்ச்சியெல்லாம் மும்முரமா நடந்துகிட்டிருக்கு. அதனாலே பெண்கள் அதிகமா கவலைப்பட வேணாம்.

உங்களுக்கு மட்டுமா அந்த கவலை. அதனாலே ஆண்களும்தான் ரொம்ப அவஸ்தை பட வேண்டியிருக்கு! எப்படிங்கறீங்களா? ஒரு பத்திரிகை நிருபர் ஒரு சினிமா நடிகையை பேட்டி காணப் போனார். அந்த அம்மா ஒரு 30 வருஷ காலமா சினிமாவுலே நடிக்கறவங்க. கேக்கக்கூடாத ஒரு கேள்வியை கேட்டுட்டார். அதாவது "உங்க வயசு என்ன?"ன்னார்.

அந்த அம்மாவும் கொஞ்சம்கூட அலட்டிக்காமே "இந்த ஜூன் வந்தா 20 முடிஞ்சி 21 ஆரம்பம்!"ன்னாங்க.

இந்த நிருபர் திடீர்ன்னு புத்தி கலங்கினது மாதிரி தன் கையாலேயே தன் தலையிலே ஓங்கி ஓங்கி குட்டிக்கிட்டார். அந்த அம்மா..

"என்னங்க... நான் ஏதாவது தப்பா சொல்லிப் புட்டேனோ? என் பதில் சரியில்லேன்னா நினைக்கிறீங்க?"ன்னாங்க.

அதுக்கு இவர்...

"உங்க பதில் சரிதாங்க. என் கேள்வி தான் சரியில்லே. இந்த கேள்வியை 20 வருஷத்துக்கு முன்னாடி உங்ககிட்டே கேட்டிருக்கணும். நான்தான் ரொம்ப லேட்! அதுதான் குட்டிக்கிறேன்!"ன்னு மறுபடியும் குட்டிக்கிட்டார்.

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## இலங்கை வரும் லாரா



தனக்கு ஏற்பட்டுள்ள முட்டுவலியை மறந்துவிட்டு, இலங்கைக்கான சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் பிரையன் லாரா, பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

முட்டு வலிக்காகச் சிகிச்சை பெற்று வரும் லாரா இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்யும் மேற்கிந்தியத் தீவு அணி வீரர்கள் பட்டியலில் முதலில் இடம்பெற்றிருக்கவில்லை.

கடந்த வாரம் லாராவுக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேனிங் எனப்படும் விசேட சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதை அடுத்து அதன் அறிக்கை இவ்வார இறுதியில் வெளியாகவுள்ளது.

இதைத் தொடர்ந்து வைத்தியர்களின் ஆலோசனைக்கமைய பயிற்சி நடவடிக்கைகளில் லாரா ஈடுபடுவார் என மேற்கிந்தியத் தீவுகள் அணியின் நிர்வாகியான ரிக்கி ஸ்காரிட் தெரிவித்துள்ளார்.

32 வயதான லாராவுக்கு ஏற்பட்ட இந்த முட்டுவலி காரணமாக ஸிம்பாப்வே மற்றும் கென்யா ஆகிய நாடுகளுக்கான சுற்றுப்பயணங்களின்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பெற்றிருக்கவில்லை.

## வோவ் எழுதிய கடிதம்


இந்தியாவின் கல்கத்தாவில் உள்ள 'உதயான்' என்ற தொழுநோயால் பாதிக்கப்பட்ட அநாதை இல்லத்தைச் சேர்ந்த சிறார்கள், அவுஸ்திரேலிய கிரிக்கெட் கப்டன் ஸ்டீவ் வோவ் சுகம் பெறவேண்டிப் பிரார்த்தனை செய்து வருகிறார்கள்.

1998ம் ஆண்டிலிருந்து 'உதயான்' அமைப்பிற்கு உதவி செய்து வரும் வோவ் இந்தியாவுக்குச் செல்லும்போது அங்கு சென்று அவர்களுடன் விளையாடி மகிழ்வூட்டுவார். அண்மைக்காலமாக 'வெய்ன்த்ரோம் போலிஸ்' என்னும் இரத்தக்கட்டி நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார் வோவ்.

இந்த இரத்தக் கட்டியால் இவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று மருத்துவர்கள் எச்சரித்ததை அடுத்து 'உதயான்' அமைப்பைச் சேர்ந்தவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதைக் கேள்விப்பட்ட ஸ்டீவ் வோவ், மருத்துவமனையில் இருந்து கொண்டே, 'உதயான்' குழந்தைகளுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில், "எல்லாம் சரியாகி மீண்டும் நான் உங்களுடன் விளையாட வருவேன்" என்று எழுதியுள்ளார் வோவ்.

## வோல்ஷை நெருங்கும் வோர்ன்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர் என்ற கபில்தேவின் சாதனையை முறியடித்த மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஷ், இந்தச் சாதனையை அதிக நாட்கள் தன் வசம் வைத்திருக்க முடியாது போல் தெரிகிறது.

வோல்ஷின் சாதனையைத் தொடும் முயற்சியில் அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் வேகமாக முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் முடிவடைந்த இங்கிலாந்திற்கெதிரான ஆஷஸ் கிண்ண டெஸ்ட் தொடரின்போது 400 விக்கெட்டுக்களைத் தாண்டியிருக்கும் வோர்னுக்கு இந்தச் சாதனையை முறியடிப்பது அவ்வளவு கடினமாக இருக்காது.

400 விக்கெட்டுக்களைத் தாண்டிய முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனைக்குரிய வோர்ன் வீழ்த்திய முதல் விக்கெட் இந்திய முன்னாள் வீரர் ரவிசாஸ்திரி. 400வது விக்கெட் இங்கிலாந்தின் அலெக் ஸ்ருவர்ட்.

வோர்ன் இதுவரை வீழ்த்திய 407 விக்கெட்டுக்களில் இங்கிலாந்திற்கெதிராக அதிக விக்கெட்டுக்களையும் ஸிம்பாப்வேக்கு எதிராக குறைந்த விக்கெட்டுக்களையும் எடுத்துள்ளார்.

இங்கிலாந்திற்கெதிராக 118 விக்கெட்டுக்களையும் ஸிம்பாப்வேக்கு எதிராக 6 விக்கெட்டுக்களையும் வோர்ன் எடுத்துள்ளார். வோர்னுக்கு உள்நாட்டை (அவுஸ்திரேலியா) விட வெளிநாடுகளே அதிகம் கை கொடுத்துள்ளன.

உள்நாட்டில் மொத்தம் 188 விக்கெட்டுக்களை வீழ்த்திய இவர் வெளிநாடுகளில் 219 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏக்கப் பார்வை

தூரத்தில் பூங்குழலி அமர்ந்திருந்த விதமே சனாதனன் உள்ளத்தில் விவரிக்க முடியா சோக அலைகளை எழுப்பியது.

மஞ்சள் பூசிய வானின் பின்புலத்தில் ஒரு சோகச் சித்திரமாய் அமர்ந்திருந்தாள் குழலி.

அவனைக் காத்துக் காத்து ஏமாந்த சோகம் அவள் தலைச் சரிவில் தெரிந்தது. அருகே சென்று முகத்தை நிமிர்த்தி, அந்தக் கண்களில் தெரியும் பரிதாப ஏக்கத்தைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா என்கிற தவிப்புடனேயே அவளை நெருங்கினான் சனாதனன்.

ஓசையெழுப்பாமல் அவள் பின்புறம் சென்று அமர்ந்தவன் மெல்ல அவள் காதுக்குள் "என்னை மன்னித்துவிடு குழலி" என்றான்.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. திரும்பிய வேகத்தில் தள்ளாடிய தன் உடலைச் சமனப்படுத்திக் கொள்வதற்குள், அவன் கரங்கள் தன் தோளில் விழுந்து அழுத்துவதை உணர்ந்ததாலும், அந்த நிலையில் அவன் முகம் அவளுக்கு மிக நெருக்கமாக மூச்சுக்காற்றை உணரும் வகையில் இருந்ததாலும், பேசச் சக்தியற்று உள்ளிருந்த சொல்லை வெளிக்கொட்ட முடியாமல் திணறினாள்.

"என்ன, அதிகம் காக்க வைத்துவிட்டேனா?" அவனே மீண்டும் மிருதுவாகக் கேட்டான்.

தன் முதுகுப் புறத்தில் அவன் உடைகள் உராய்ந்ததையும், முகமிரண்டும் மூக்குநுனிகள் தொட்டுவிடும் தூரத்தில் இருந்ததையும், தோளில் இருந்த அவன் கரங்கள் மெல்ல அசைய முற்பட்டதையும் உணர்ந்த அவள் உணர்ச்சிகள் உச்சியை எட்டிக் கொண்டிருந்தன.

காத்திருந்த நேரத்துத் துன்பங்கள் எவையும் இப்போது காணாமல் போயிருந்தன. அவள் என்ன சொல்வாள். "ம்" என்பதை மெல்லிய முனகலாக வெளிப்படுத்தியவள் அவன் பிடியினுள்ளேயே மெல்ல அசைந்தாள்.

அப்படி அவள் அசைந்ததால் உராய்ந்த அவள் அழகுகளால் பெரிதும் நிலை குலைந்த சனாதனன் நிலை மிகுந்த சங்கடத்திற்குள்ளாகியிருந்தது.

எதுவும் பேசாமலும், காத்திருந்த நேரத்தில் ஏக்கத்தால் நிரப்பி வைத்திருந்த மூச்சுக்களை மெலிதாக வெளியே விட்டவண்ணம், மனதை அள்ளும் ஒரு சோகக் கனவே போல தென்பட்ட அவளால் சனாதனன் உணர்ச்சியலைகளில் சிக்குண்டிருந்தான் என்றால், அவளாடு அடுத்த அசைவு அவனை அடியோடு தடுமாற வைத்தது.

தோளிலிருந்த அவன் கரத்தின்மீது மெல்ல தனது கன்னத்தைச் சாய்த்து வைத்துக் கொண்டாள் குழலி. அவள் குழல் சரிந்து தரையில் விழுந்தது. கறுத்து அடர்ந்து நீண்டிருந்த கொடி ஒன்று சுருள் சுருளாகத் தரையிலிருந்து மேலெழுந்து அவள் தலையில் சென்று ஒட்டிக் கொண்டது போல இருந்தது. அந்தக் கறுப்புச் சுருள் கொடியின் உச்சியில் சில மலர்களும் பூத்திருந்தன.



விலகிய கூந்தலிடையே தெரிந்த அவள் கழுத்தின் வெண்மை கண்களைக் கூச வைத்தது. கரங்களை சிறிது நகர்த்தி அவள் கழுத்துவளைவை அண்மித்தான். அக்கழுத்து லேசாகச் சுட்டது. அந்தச் சூட்டையும், கழுத்தின் வெண்மையையும் கவனித்த சனாதனன், "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" என்று இதையா சொன்னார்கள்? என்று தன் சிந்தனையை ஓடவிட்டான்.

கழுத்தில் அவன்கை பட்டதையும், பிறகு அவன் முழங்கை சற்று முன்புறம் வந்து உராய முற்பட்டதையும், கழுத்தைச் சுற்றிப் பின்புறமாக மேற்சென்று அவன் கைவிரல்கள் பின் தலையின் குழலிடை அளைந்ததையும் கவனிக்கவே செய்த பூங்குழலி, 'இவனால் எவ்வளவுதான் நாம் துன்பப்பட்டாலும், வந்து நெருங்கி விட்டானென்றால், கோபம் எழவே முடியாதபடி செய்துவிடுகிறான்' என்று எண்ணிக் கொண்டாள்.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் நெளிந்து உடலை, அசைத்த குழலி, மெல்ல அவன் மார்பை நோக்கித் திரும்பினாள். அப்படி அவள் திரும்பியபோது அசைந்த அழகுகளும், அவளது உடலின் மென்மைக் குழைவு ஏற்படுத்திய கிளர்ச்சியும் அவனைப் பதற்றப்பட வைத்தது.

ஒரு கையை அவள் கழுத்திலிருந்து அவசரமாகக் கீழிறக்கினான். தவறுதலாகப் பட்டதுபோல அந்தக் கை சென்று பட்ட இடங்களையும், பட்ட மறுகணமே அவசரமாக இழுத்துக் கொண்டு விட்டதையும் உணர்ந்த குழலி உணர்ச்சி அலைகளின் நடுவே மிதந்தபடியும் உள்ளுக்குள் சிரித்தாள். "ஆசைக்கும் அறத்துக்குமான போராட்டம்" என்று தனக்குள்ளாக மெல்லச் சொல்லியும் கொண்டாள்.

மறுகையை அவளது கன்னத்தில் பதித்து முகத்தைத் தனக்காகத் திருப்பினான். கீழே சென்ற கையும் இப்போது தனக்கான இடத்தைத் தேடி அடைந்துவிட்டதுபோல அவள் இடையைச் சுற்றி வளைத்தது.

அவன் பிடிக்குள் தான் முழுமையாகச் சிக்கியிருப்பதை உணர்ந்த குழலி, அவனையும் தன் பிடிக்குள் வளைத்துவிடும் முயற்சியில் கைகளிரண்டையும் உயர்த்தி அவன் கழுத்தை வளைத்தாள். பிறகு மெல்லத் தன்னை நோக்கி இழுத்தாள்.

அப்படி இழுக்கையில் தன் மார்போடு மோதிய அவள் மார்பின் மென்மையை உணர்ந்த சனாதனன் தன் அற நினைவுகள் கட்டுப்பாடுகள் அனைத்தையும் அறவே இழந்தான்.

கன்னத்தோடு கன்னம் உராய்ந்த நிலையில் குழலி அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள். "நான் ஒருத்தி இருப்பதை மறந்துவிட்டீர்களோ, என்று நினைத்தேன்..."

அவள் மென்மையையும், வாசனையையும் முழுமையாகத் தனக்குள் வாங்கிய நிலையில், 'இவளை நான் மறப்பதா?' என்று தனக்குள் நினைத்துச் சிரித்தான் சனாதனன்.

'தேவையில்லாத பிகு எதையும் பண்ணிக் கொள்ளத் தெரியாதவள். நெருங்கித் தொட்டால் இருந்த அன்போடு விரைந்து ஆவேசமாக அணைத்துக் கொள்பவள், காணக்கான உள்ளத்திலே இன்பமூட்டும் அழகையுடையவள், மெல்லிய மார்பும் கறுத்துத் திரண்ட கூந்தலும் கொண்டவள்...

பக்கத்தில் மேயச் சென்ற தாய்ப்பசுவையே எண்ணி, அது எப்பொழுதுவரும் என்று அதன் வருகைக்காக ஏங்கியிருக்கும் இளங் கன்றைப் போல ஏங்கிய பார்வையோடு என்னை எதிர்பார்த்திருக்கும் பரிதாபமான பார்வையை உடையவள். இந்தக் கண்களையும், மென்மையையும், அழகையும், மறந்து ஒரு கணமேனும் நானிருக்க முடியுமா? என்றெல்லாம் தனக்குள் நினைத்தபடி, வெளியே எதுவும் பேசாமல் அவளைத் தன்னோடு இறுக்கினான் சனாதனன். அந்த அணைப்பே அவளுக்கு அவனை விளக்கப் போதுமானதாயிருந்தது.

கவவுக் கடுங்குரையள், காமர் வனப்பினள்,

குவவு மென்முலையள், கொடிக் கூந்தலளே,

யாங்கு மறந்து அமைகோ யானே, ஞாங்கர்க்

கடும் சுரை நல் ஆன் 'நடுங்குதலைக்

-குழலி

தாய்காண் விருப்பின் அன்ன,

சா அய் நோக்கினளே! மா அயோளே.

(குறுந்தொகை 132)

# சிந்தியா பதில்கள்

பக்கமிருக்கிறது என்றே தடுமாறும் குமாரர்களும் சேர்ந்து அவர்களுக்காகப் பேச வதற்காகப் பாராளுமன்றம் போக வேண்டுமாம்! தாங்கள் வாங்கிய-வாங்கப்போகும் சூடுகள் எல்லாவற்றையும் விட அந்தக் கதிரைச் சூட்டின்மேல் குதிவிட ஆலாய்ப் பறக்கிறார்களே.... அந்தச் 'சூடு' தான் என்னை ஆச்சரியப்படுத்துகிறது.

★ **தேர்தலில் கூட்டுச் சேர்ந்திருக்கும் தமிழ்க் கட்சியினர் வென்றால் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறதுதானே?**

சொ. திருச்செல்வம், பதுளை.

ஆமாம். இப்போது பொ.ஐ.மு.வை எதிர்த்து ஐ.தே.க.வை ஆட்சியில் அமர்த்தத் துடித்துக் கொண்டிருக்கும் நம் தமிழ் மானத் தலைவர்கள் (ஒருவேளை ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால்) பிறகு மூன்றே மாதத்தில் பொ.ஐ.மு.வோடு சேர்ந்துகொண்டு ஆட்சியிலிருக்கும் ஐ.தே.க.வுக்கு எதிராகக் கோஷமிட ஆரம்பிப்பார்கள். இப்படியே சிங்களக் கட்சிகளை எதிர்த்துக் கூக்குரலிட்டபடி தங்கள் பதவிகளையும், பதவியால் வரும் சலுகைகளையும், உயிரையும் காப்பாற்றிக் கொண்டிருப்பதுதான் இவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்யும்-இனியும் செய்யப் போகும் சேவை, தியாகம், அர்ப்பணிப்பு.... இன்னோரன்ன பிற எல்லாம்.

★ **கவிஞர்களின் ஆய்வுகூடம் பெண்கள் என்பது பற்றி...?**

ந. கனகலிங்கம், பொகவந்தலாவ.

பெண்களைப் பெண்களாகவே உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாதா? சரி போகட்டும். அதை 'காதலை எழுதும் ஆண் கவிஞர்களின்' என்று வேண்டுமானால் போட்டுக் கொள்ளுங்கள்.

★ **தனியார் வானொலிகள் பற்றி சிந்தியா என்ன சொல்கிறீர்கள்?**

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

நான் சொல்ல என்ன இருக்கிறது? அவர்களுடைய கொள்கை விளக்கங்கள் எல்லாவற்றையும்தான் ரஜினி, விஜய், விவேக், கவுண்டமணி, செந்தில் போன்ற அறிஞர்கள் எல்லாம் அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்களே!

★ **நாலு தமிழ்க் கட்சிகளேனும் ஒரு கூட்டுக்கு வந்திருக்கின்றன. சந்தோஷம்தானே?**

ம. விஜயநிலா, வவுனியா.

இந்தத் தமிழ்க் கட்சிகளினது கடந்த காலத்தை திரும்பிப் பார்த்தால் ஒரு சத வீதத்துக்கும் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக எதுவும் இல்லை. பிறகெங்கே மகிழ்ச்சியடைவது?

★ **நீர் தனிமையில் இருக்கின்றபோது உமது எண்ணத்தில் அதிக இடம் பிடித்துக் கொள்பவர் யார்?**

சோ.தனு, மட்டுநகர்.

நானேதான்!

★ **உங்கள் சமீபத்திய ஆச்சரியம் என்ன?**

செ. முருநந்தன், கொழும்பு-05.

இரண்டெழுத்தாரை இரகசியமாக மனதுக்குள் திட்டிக் கொண்டிருப்பவர்களும், தங்கள் தலைவர்களைக் கொன்றவர்கள் எப்போது அழிந்துபோவார்கள் என்று நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டு காத்திருப்பவர்களும், அவர்களை அழித் தொழித்துவிட மாகாண சபையில் ஆள் சேர்த்தவர்களும், தலைவரைக் கொன்றவர்களை எப்போதேனும் ஒருநாள் பழி வாங்கியே தீருவோம் என்று வீர சபத மெடுத்தவர்களும், யாழ்ப்பாணம் எந்தப்




★ **அமெரிக்காவின் இன்றைய நாயகன் யார்?**

ஹுதா நசாக், காத்தான்குடி-03.

சந்தேகம் என்ன, பின் லாடன்தான்!

★ **பிரசாந்தின் 'விரும்புகிறேன்' ஏன் இன்னமும் வெளிவரவில்லை?**

செ. சுதாசன், அக்கரைப்பற்று.

கதாநாயகியின் கால்ஷீட் தொல்லை. இயக்குநரின் அதிக செலவினம் என்றெல்லாம் காரணம் சொல்லப்பட்டு வந்தது. இப்போது தயாரிப்பாளரின் கடன்தொல்லையால் கடன்காரர்கள் கடனுக்குப் பதில் சொல்லாமல் படம் வெளியாக விடமாட்டோம் என்று தடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. உண்மைக் காரணத்தை யாரறிவார் பராபரமே!

★ **தற்போது அடிக்கடி பத்திரிகைகளில் 'தவிசாளர்' என்று ஒரு பதவி குறிப்பிடப்படுகிறதே.. அது என்ன பதவி?**

ஏ. மரியகுசை, அட்டன்.

தலைமைப் பதவிதான் 'தவிசு' என்ற சொல்லுக்குப் பொருள். 'ஆசனம்' ஆசனத்தை ஆள்பவர் 'தவிசாளர்'. ஆங்கிலத்தில் உள்ள 'Chair Person' என்பதன் நேரடித் தமிழாக்கம் அது.

★ **என் அபிமான நடிகை சிம்ரனின் முகவரி தருவீர்களா?**

எஸ். ஜெயந்தன், நோர்வூட்.

தற்சமயம் கடிதம் போடுவதாக இருந்தால் திநகரிலுள்ள Residency Hotelக்குத்தான் போடவேண்டும். வீட்டிலிருந்து வெளியேறி அங்குதான் தங்கியிருக்கிறார். நடனக்காரரைக் கைப்பிடித்துத் தனி முகவரிக்குப் போகட்டும். அதன் பிறகு கேளுங்கள்.

★ **இப்போதெல்லாம் இந்திய சினிமாப் பாடல்களில் இலங்கை யுத்தம் பற்றி எழுதுவது குறித்து...?**

மி. விக்கினேஸ்வரன், ஹட்டன்.

பாட்டு மட்டுமில்லை. வரவிருக்கும் மணிரத்னத்தின் படமான 'மஞ்சல் குடை' கதையும், 'சேது' பாலாவின் படமான 'நந்தா'வின் கதையும் இலங்கை யுத்தம் பற்றியதுதானாம். அடுத்து அமெரிக்க-ஆப்கான் யுத்தத்தைப் பற்றியும் சொல்வார்கள். சுற்றி நடப்பதைப் பற்றித்தானே சொல்ல முடியும்?

# மன்னாதி மன்னன்

78

## உயிர் பெற்றெழுந்த அபரஞ்சி....

இராஜகுமாரன்

**மா**மன்னர் விக்கிரமாதித்தனும் அமைச்சர் பட்டியும் இராஜபுரி நகரில் மாறுவேடத்தில் இரத்தினக் கற்களை வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். விக்கிரமாதித்தன் பெரிய காந்தையச் செட்டி என்றும் பட்டி சின்னக் காந்தையச் செட்டி என்றும் தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டனர்.

ஒரு நாள் மாலை ராஜவீதி வழியாக விக்கிரமாதித்தன் சென்று கொண்டிருந்த போது ஓர் அழகான மாளிகையின் உப்பரிகையில் ஓர் அழகான இளமங்கையைக் கண்டார். அவளும் விக்கிரமாதித்தனை பார்த்துக் கொண்டாள். காளிகாம்பாள் தன்னிடம் தெரிவித்திருந்ததைப் போல் இந்த ஆணழகனே விக்கிரமாதித்தனாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். தனது தோழிகளுடன் கீழே ஓடிவந்து பெரிய காந்தையச் செட்டி என்றழைக்கப்பட்ட விக்கிரமாதித்தனை வரவேற்று தனது மாளிகையின் சப்ரகூட மஞ்சத்திற்கு அழைத்துச் சென்று பலவிதமான உபசாரங்களையும் செய்தாள்.

அன்றிரவு முழுவதும் அந்தப் பெண்ணினுடைய உபசரிப்பில் மனதைப் பறிகொடுத்து அவளுடன் உல்லாசமாகப் பொழுதைப் போக்கிவிட்டு அடுத்த நாட்காலை பட்டி தங்கியிருந்த சத்திரத்திற்கு திரும்பி வந்து, முதல் நாள் இரவு தான் பெற்ற விசித்திரமான அனுபவங்களை எல்லாம் பட்டியிடம் கூறி மகிழ்ந்தார்.

விக்கிரமாதித்த மன்னன் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாக பட்டி "அண்ணா நீங்கள் ஏமாற்றப்பட்டு விட்டீர்கள். அந்த அழகி வேறுயாருமல்ல இந்த நகரில் உள்ள விலைமாதான தாசி அபரஞ்சி என்பதுதான் அவளுடைய பெயர். அவள் உங்கள்மீது காட்டிய அன்பும், அக்கறையும் வெறும் போலியானவை" என்று கூறினார். இதனைக் கேட்ட விக்கிரமாதித்தன் வெகுண்டெழுந்தார். தன்னுடைய வாழ்நாளில் இத்தகைய ஒரு பெண்ணை தான் சந்தித்ததில்லை என்று வாதிட்டார்.

"அண்ணா, தங்கள்மீது அவள் உண்மையான காதல் கொண்டிருப்பாளானால் நாளைக்காலை தாங்கள் திரும்பும்போது அவள் மூக்கின் நுனியை அரிந்து தரும்படி கேட்டுப்பாருங்கள்" என்று கூறி அனுப்பினார். விக்கிரமாதித்தன் அடுத்த நாள் அபரஞ்சியினுடைய மூக்கு நுனியை கொண்டுவந்து பட்டியிடம் காட்டினார். இருப்பினும் மந்திரி பட்டிக்கு அபரஞ்சிமீது எள்ளளவும் நம்பிக்கை பிறக்கவில்லை.

அடுத்தடுத்த நாட்களில் அவளுடைய தலைமுடியையும் இறுதியில் அவளுடைய மார்பகங்களையும் பெற்றுக் கொண்டுவருமாறு பட்டி, விக்கிரமாதித்தனிடம் கூறி அனுப்பினார். அபரஞ்சி விக்கிரமாதித்தன் கேட்டுக் கொண்டதைப்போல் முதல் நாள் அவளுடைய தலைமுடி முழுவதையும் சிரைத்து விக்கிரமாதித்த மன்னனிடம் கொடுத்தனுப்பினாள். இறுதி நாளான்று தனது இரு கொங்கைகளையும் அரிந்து விக்கிரமாதித்தனிடம் கொடுத்தாள்.

தாசி அபரஞ்சி தன்னுடைய அழகுகள் அனைத்தையும் விக்கிரமாதித்தனுக்காகவே இழந்துவிட்டதாக பட்டியிடம் கூறி, "இத்தகைய அரிய தியாகங்களைச் செய்த பெண் மீது உனக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லையா?" என்று சற்றுக் கடுமையாகவே தம்பி பட்டியைக் கடிந்து கொண்டார்.

பட்டி சற்றும் தயங்காமல் "இன்னும் சொல்லுகிறேன் அந்தப் பெண் செய்யும் அத்தனை செயல்களும், அவள் தங்கள் மீது கொண்ட உண்மையான அன்புக்கு அறிகுறியல்ல. இதனை இன்னும் 8 நாட்களில் நான் தங்களுக்கு நிரூபித்துக் காட்டுகிறேன்." என்று சூளுரைத்தார்.

அன்று முதல் ஏழு நாட்கள் வரை எக்காரணம் கொண்டும் தாசி அபரஞ்சியின் வீட்டுக்கு மன்னன் விக்கிரமாதித்தனை செல்ல விடாது பட்டி கண்டிப்பான உத்தரவு போட்டார். இவ்வாறு ஏழு நாட்கள் கழிந்தன.

எட்டாவது நாளன்று காலையில் பட்டி "அண்ணா இன்று அந்தப் பெண் அபரஞ்சியின் போலி அன்பை தங்களிடம் வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய நாளல்லவா? வாருங்கள் கடை வீதிக்குச் சென்று நமக்குத் தெரிந்த சகலரிடமும் விடைபெற்றுக் கொண்டு வெளியேறிவிடுவோம்" என்று கூறிய பட்டியின் சொற்படி இயந்திரம் போல் விக்கிரமாதித்த மன்னன் செயற்பட்டார்.

நகர எல்லையைத் தாண்டியதும் விக்கிரமாதித்தனை பட்டி ஓரிடத்தில் கொண்டு போய் மறைத்து வைத்துவிட்டு சின்னக் காந்தையச் செட்டி எனும்பட்டி விறகுகளைப் பொறுக்கி தீ மூட்டினார். அதனருகே நின்று பலத்த சப்தமிட்டு "ஐயோ அண்ணா என்னை தனியாக பரிதவிக்க விட்டுவிட்டு நீங்கள் ஓடி மறைந்து விட்டீர்களே" என்று ஓலமிட்டார். நகரத்தில் இருந்து வெளியேயும் உள்ளேயும் செல்லும் வழிப்போக்கர்கள் பட்டியிடம் சென்று அவர் அழுது புலம்புவதற்கான காரணத்தைக் கேட்டறிந்து கொண்டனர்.

"ஊரவர்களே உங்கள் அனைவருக்கும் எனது அண்ணனான பெரிய காந்தையச் செட்டியை நன்கு தெரியும். நாங்கள் இருவரும் ஓர் அவசர காரியத்திற்காக ஊர் திரும்பிக் கொண்டிருந்தோம். அந்த வேளையில் ஒரு கொடிய பாம்பு என் அண்ணனைத் தீண்டி அவர் மரணமடைந்துவிட்டார். அவருடைய இறுதிக் கிரியைகளை நான் செய்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விட்டேனே!" என்று மேலும் அழுது புலம்பினார். தனக்குத் தெரிந்தவர்களிடம், "எனது அண்ணன் பெரிய காந்தையச் செட்டியை தாசி அபரஞ்சி மிகவும் காதலித்தாள். அவர் மாண்ட செய்தியை தயவு செய்து அவரிடம் யாராவது தெரிவியுங்கள்" என்று தகவல் சொல்லி அனுப்பினார்.

பெரிய காந்தையச் செட்டி மாண்டு போன செய்தி தாசி அபரஞ்சிக்கு எட்டியது., உடனடியாக எண்ணை வைத்துக் குளித்து கையில் ஒரு செம்பும், எலுமிச்சம் பழமும் எடுத்துக் கொண்டு அரண்மனை சென்று அரசனைக் கண்டு "மன்னவரே! நான் உயிருக்குயிராக நேசித்த என் காதலர் இரத்தின வியாபாரியான பெரிய காந்தையச் செட்டி மாண்டுபோனார். ஆகவே நான் இன்னும் உயிருடன் இருந்து எவ்வித பலனும் இல்லை. ஆகவே நான் என் காதலருடைய சிதையில் வீழ்ந்து அந்தத் தீயில் என்னுடைய உடலையும் பொசுக்கிவிடத் துணிந்து கொண்டேன்" என்று கூறினாள். அரசர் அவரைத் தடுத்து "உன் குலத்தொழிலை மறந்து நீ இவ்வாறு செய்வது நியாயமில்லை. ஆகவே பெரிய காந்தையச் செட்டியை மறந்துவிட்டு வேறொரு அழகனுடன் வாழ்வாயாக," என்று புத்தி கூறினார். ஆனால் அபரஞ்சி அரசருடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கவில்லை. நேராகவே நகரின் எல்லையில் எரிந்து கொண்டிருக்கும் சிதையை நோக்கி வேகமாக நடந்து சென்றாள்.

"அபரஞ்சி தன்மீது கொண்ட மாறாக் காதலினால் அல்லவோ தான் உண்மையிலேயே இறந்து சிதையில் எரிந்து கொண்டிருப்பதாகக் கருதி உடன் கட்டை ஏறுவதற்கு வந்து கொண்டிருக்கிறாள்" என்று மறைவிடத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த விக்கிரமாதித்தன் கருதினார். சைகைமூலம் பட்டியை தனதருகில் அழைத்து "தம்பி பட்டி இத்தனைக்குப் பிறகும் உன் மனம் இரங்கவில்லையா? அவளைத் தடுக்கா விட்டால் நேராகச் சிதையில் ஏறி தீயுடன் சங்கமிக்கப் போகிறாளே" என்று வேதனையுடன் கூறினார்.

"மன்னாதி மன்னரே! என் அருமை அண்ணாலே! இன்னும் சற்று நேரத்தில் அவளுடைய போலித்தனம் வெளிப்படப் போவதை நீங்களே பார்க்கப்போகிறீர்கள். அவள் உண்மையில், நீங்கள் கருதுவதுபோல் ஓர் உத்தமியல்ல. அவளுக்கு உண்மையில் உங்கள் மீது துளிகூட அன்பில்லை," என்று பிடிவாதமாகவே பட்டி கூறிவிட்டார்.

அபரஞ்சி, விக்கிரமாதித்தன் கருதியது போல் நேராக சிதையடிக்கு வந்து அதனை மும்முறை வலம் வந்து வணங்கி விட்டு சிதையின் மீது ஏறி கொழுந்து விட்டு எரியும் தீயிடம் தன்னை ஒப்படைத்தாள். இதனையும் பார்த்துக் கொண்டு பொறுத்துக் கொள்ள முடியாத மன்னர் விக்கிரமாதித்தன் "அடப்பாவி அவள் என்மீது வைத்திருந்த அன்புக்கு இதைத் தவிர வேறு என்ன சான்று இருக்க முடியும். ஒரு குற்றமற்ற அப்பாவிப் பெண்ணை அநியாயமாகக் கொன்று விட்டாயே" என்று தன் தம்பியை விக்கிரமாதித்தன் திட்டித்தீர்த்தார்.

அண்ணன் விக்கிரமாதித்தனுடைய கடும் சொற்களையும் கேட்டு எந்த வகையிலும் தன்னை மாற்றிக் கொள்ளாத பட்டி இன்னும் சற்று பொறுத்திருக்கும்படி அண்ணனைக் கேட்டுக் கொண்டு சிதையைச் சுற்றி நின்ற ஊர்மக்கள் அனைவரும் கலைந்து சென்ற பின் விக்கிரமாதித்தனிடம் வந்து "இப்பொழுது வெளியே வாருங்கள் நம்முடைய குல தெய்வமான காளிகாம்பாவை சென்று தரிசிப்போம். அவளுடைய அனுக்கிரகத்தினால் அபரஞ்சியை உயிருடன் மீட்டெடுப்போம். அப்போது அவளுடைய உண்மை நோக்கம் வெட்ட வெளிச்சம் ஆகிவிடும்." என்று கூறிக்கொண்டு காளிகாம்பாள் கோயிலை இருவரும் சென்றடைந்தனர்.

உரிய முறைப்படி பூசை செய்து அம்பாளை தியானித்த விக்கிரமாதித்தன் முன் அம்பாள் தோன்றினாள். திருநீறு, புனிதத்தீர்த்தம், வெள்ளிப்பிரம்பு ஆகியவற்றை விக்கிரமாதித்தனிடம் அம்பாள் கொடுத்தனுப்பினாள். அம்மூன்றையும் பயபக்தியுடன் சிதைக்கருகில் கொண்டுவந்த விக்கிரமாதித்தன் அம்பாள் கூறிய மந்திரத்தை உச்சாடனம் செய்து சிதையில் தீர்த்தத்தைத் தெளித்து திருநீரையும் தெளித்து வெள்ளிப் பிரம்பால் சாம்பலை தட்டினார். உடனடியாகவே நீண்ட தூக்கத்தில் இருந்து எழுந்து கொண்டதுபோல் முன்பைவிட ஒளி பொருந்தியவளாக அபரஞ்சி எழுந்தாள். எழுந்த அபரஞ்சி விக்கிரமாதித்தனிடம் தன் கரங்களை நீட்டினாள். ஆனால் விக்கிரமாதித்தனின் முகத்தையோ அருகில் நின்ற பட்டியையோ அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பட்டி தன் அண்ணன் விக்கிரமாதித்தனிடம் புனித நீர்ச் செம்பையும், எஞ்சியிருந்த திருநீறையும், வெள்ளிப் பிரம்பையும் அவளிடம் கொடுத்து விடும்படி சைகையாலேயே தெரிவித்தார். விக்கிரமாதித்தனும் அம்மூன்று புனிதப் பொருட்களையும் அபரஞ்சியின் கைகளில் கொடுத்தார்.

அபரஞ்சி சிதையை விட்டு இறங்கி விக்கிரமாதித்தனும் பட்டியும் நின்றிருந்த இடத்தைக்கூட திரும்பிப் பார்க்காமல் மிக வேகமாக நகருட் புகுந்து நேராக தன் மாளிகையை அடைந்தாள். மன்னன் விக்கிரமாதித்தனுக்கு எதுவுமே புரியவில்லை. மந்திரி பட்டி உண்மை அறிந்தவராக புன்முறுவல் பூத்தார். (தொடரும்)



# காதில பூ கந்தசாமி

**கீ**ழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:.................... ஒப்பம்:...................



**நோட்டீஸ் பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி


**அபிமான வாசகர் போட்டியில் ஒன்பதாவது:**
**ஒரு மெய் எப்போது பொய்யாகிறது? முடிவுத் திகதி ஒக்டோபர் 30.**

**பொ**லிட்டிக்ஸ் எண்டால் என்ன எண்டத எங்கட சில தமிழ்க் கட்சிகளிட்டயிருந்துதான் படிக்கவேணும் பாருங்கோ. சனத்துக்கு ஒரு சதத்துக்கும் உதவாமல் வெறும் சக்கைபோல இருந்திட்டு தேர்தலெண்டு வந்த உடன ஏதோ ஒரு புதுக் கதையச் சொல்லிக்கொண்டு களத்துக்கு வருவினம் கண்டியளோ. வாய மட்டும் திறந்து வார்த்தைகளை மட்டும் கொட்டிப்போட்டு வாக்குகளை அள்ளிக்கொண்டு போனால் பிறகு வாறது அடுத்த தேர்தலுக்குத்தான் எண்டது இவயள் வைச்சிருக்கிற வழக்கமுங்கோ.

இப்ப பாருங்கோ, இந்த முறையும் அந்த மாதிரித் தேர்தலுக்கு மட்டும் திரும்பிப் போனால் சனம் திரும்பியும் பாக்காதெண்டத்த தெரிஞ்சு கொண்டு தங்களைக் காப்பாத்திக் கொள்ளத்தான் பாருங்கோ இப்ப ஒரு புதுக் கூட்டுக் கூடினம். இதில அதிசயமென்னெண்டால் பாருங்கோ, எண்டைக்கும் தாங்கள் ஆயுதக் குழுக்களோட கைகோர்க்க மாட்டமெண்டு போன தேர்தலிலதான் பெரிசாப் பேட்டிருந்த கூத்தணிக் கோமகன் அமுக்கு சங்கரி அவற்ற சின்னத்திலயே ஆயுதக் குழுக்களுக்கு இடம் குடுத்திருக்கிறதெண்டால் இதிலை ஆச்சரியமெதுவும் இல்லை பாருங்கோ. அதுக்குப் பெயர்தான் பொலிட்டிக்ஸ். அதுவும் பாருங்கோ, இதில விசேஷமென்னண்டால் கூத்தணியிண்ட மூத்த தலைவர்கள் தர்மரிண்டயும் ஆலாலிண்டயும் உயிர்களுக்கு யார் உலை வைச்சினமோ அவயளோடயே கூடி நிக்கலாமெண்ட அளவுக்கு கூத்தணி மாறிப்போனது வேடிக்கையில்லையிங்கோ விவேகமுங்கோ. அது போகட்டும், இங்க நடந்த ஒரு அருமையான நாடகத்தத்தான் நாங்கள் ரசிக்க வேண்டியிருக்குதுங்கோ.

தனியாப் போனால் தலைகீழா விழுவினமெண்டு தெரிஞ்சிட்டதால கூட்டாக் கேக்கவேணுமெண்டு வந்தாலும் கூட்டிலயும் யார் கூடப் பெறுகிறதெண்டு கணக்குப் போடத் துவங்கிட்டினம். கூத்தணியிண்ட சின்னத்தில போனால் தங்கட வண்டில்கள் அடிபட்டுப் போடுமெண்டு கொங்கிரசாருக்குப் பயம். பின்னப் பாத்தார் இதுக்கு எப்பிடி தனக்கெண்டொரு பொலிட்டிக்சைப் பாவிக்கிறதெண்டு. அவற்ற அப்புக்காத்து மூளைக்கு அடிச்சுது ஒரு யோசனை. உடன சொல்லிவிட்டார் புலிகளை ஏக பிரதிநிதிகளா ஏத்துக் கொள்ளுவமெண்டு எழுத்தில தந்தால்தான் கூட்டில சேருவமெண்டு. இப்பிடியொரு பெரியகல்லை ஆள் தூக்கிப் போடுமெண்டு தெரியாமல் தாங்களும் புலிகளுக்கு ஆதரவுதான், எண்ட கணக்காப் பிரசாரம் செய்யப்பாத்த மற்றக் கட்சிகளுக்கு இது பெருத்த சிக்கலாப் போச்சுது. ஏகபிரதிநிதிகளெண்டு ஏற்றுக் கொள்ளிறமெண்டால் தாங்கள் ஏன் அரசியல் கட்சியாக இருப்பான் எண்ட பிரச்சனை. ஏற்றுக் கொள்ளாட்டால் புலிகளோட பிரச்சனைக்குத் தள்ளிவிட்டுடும். அதோட கொங்கிரசார் மட்டும்தான் அவைக்காக நிக்கிறவை எண்டு நிலை நாட்டுறதாயும் போயிடும். இப்பிடியொரு இடியப்பச் சிக்கலை இந்தாள் இழுத்துப் போட்டதால இப்ப கூட்டுக்காரர் மாட்டுப்பட்டுப் போய்க்கிடக்கினம். கூடிக் கூடிப் பேசி ஏதோ ஒரு மாதிரி ஏகபிரதிநிதிகள் எண்ட விஷயத்தை மூடி வைச்சிட்டினம். கடைசியில கொங்கரஸும் ஏக பிரதிநிதிகளை ஏற்றுக் கொள்ளாமலே கூட்டில சேரவேண்டியதாப் போச்சுது. தானே வாயிருக்க ஏலாமல் விளம்பரப்படுத்தின விஷயத்தைக் கைவிடவேண்டின கையாலாகாத நிலைக்குப் போன பிறகு புலிகளுக்குப் பதில் சொல்கிறது ஒரு கேள்வியாப் போச்சுது அவைக்கு. "ஏனைய்யா எங்கட பெயட உங்கட கூட்டுக்கு எடுத்தநீ? எடுத்ததுதான் எடுத்தாய் பிறகேன் அதைக் கைவிட்டு எங்களை அவ மானப்படுத்தினநீ" எண்ட கேள்விகள் அவை தரப்பில இருந்து வருமெண்டதுதான் இப்ப புதுச்சிக்கல். கடைசியா நடந்து முடிஞ்சதப் பாக்கேக்க, இந்தக் கூட்டு புலி களை ஏக பிரதிநிதிகளா ஏற்க முடியாது எண்டு தீர்மானம் செய்த கூட்டாத்தான் முடிஞ்சிருக்குது. 'இது கொங்கிரஸ்காரருக்குத் தேவையா எண்டதுதான் கண்ட மிச்சம். சரி, புலிகளை ஏகபிரதிநிதிகளா ஏற்காத கூட்டில தன்ர கட்சிய மட்டும் ஏற்கச் செய்ய அவருக்கு என்ன அவசியம் வந்ததெண்டதும், அதில தங்கட சொந்த லாப தேடுதலுக்காக புலிகளெண்ட சொல்லை ஒரு பிரச்சாரப் பொருளாப் பாவிச்சிருக்கிறரெண்டதும் வெளிப்பட்டதுதான் மிச்சம். எது எப்பிடியோ, கூட்டுக் கூட்டெண்டு கூடினாலும் வாக்கு வேட்டைக்குப் போகக்கதான் ஆளுக்காள் அடிபிடிப் படப்போயினம். அந்த வேடிக்கைகளைக் கெதியில பாப்பமெண்டு நம்பிக்கை யாச் சொல்லிட்டு நடையக் கட்டுறன். நாளைஞ்சு நாளால விஷயங்களோட வாறன்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


அருள் ஜுவல்லர்ஸ்
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# மனிதக் கட்டடம்


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

பெரிய கூண்டு போல் காட்சியளிக்கும் இந்த இராட்சத அளவிலான அமைப்பு குழந்தைகளைத் தாலாட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தொட்டிலாகும்.

இந்த இராட்சத அளவிலான தொட்டிலில் படுத்துறங்கக் குறைந்தது ஆயிரம் குழந்தைகளாவது தேவைப்படும்.

நியூயோர்க் நகரின் மத்திய பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் தொட்டில் 'குழந்தைகள் பாதுகாப்பு எச்சரிக்கை' பற்றிய தகவல்களை வழங்கும் வைபவத்தின்போது உருவாக்கப்பட்டது.





ஊரில் நடக்கும் விழாக்கள் என்றால் ஆட்டம்-பாட்டம்-கொண்டாட்டம் தான். அதிலும் ஆளாளுக்கு வரிந்து கட்டிக்கொண்டு பல்வேறு போட்டிகளிலும் கலந்து கொண்டு தாமும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ வைப்பார்கள். இப்படியான விழாக்களுக்கு நாடு-மக்கள் என்ற பேதமில்லை. உலகின் எந்த மூலையிலாவது ஏதாவது ஒரு விழா நடந்து கொண்டுதான் இருக்கிறது.

அண்மையில் ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள கதலன் என்ற இடத்தில் கேளிக்கை விளையாட்டு விழா ஒன்று நடைபெற்றது. வருடா வருடம் நடக்கும் இந்த விளையாட்டு விழாவில் அந்த ஊர் மக்கள் அனைவருமே தவறாமல் ஆஜராகி விடுவார்கள்.

இந்த விழாவின்போது ஒருவர் மேல் ஒருவராக ஏறி நின்று 200 பேர் மனிதக் கோபுரம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது பிடிக்கப்பட்ட புகைப்படம்தான் இது. அருகில் உள்ள 4 மாடிக் கட்டடத்திற்கும் உயரமாக இருந்தது இவர்கள் அமைத்த இந்த மனிதக் கட்டடம்.

# புலி மனிதன்

# இராட்சத அளவு



'புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்டது போல' என்ற முதுமொழிக்கு ஒப்ப புலியைப் பார்த்து தன் தோற்றத்தை ஒரு வரிப்புலியாக முழுமையாக மாற்றிக் கொண்டுள்ளார் இந்த மனிதர்.

அமெரிக்காவைச் சேர்ந்த கணினி திட்ட வடிவமைப்பாளரான இந்த மனிதர் ஏதோ விநோத உடைப் போட்டிக்காக இப்படித் தன்னை உருமாற்றிக் கொள்ளவில்லை.

உண்மையிலேயே தன் உடலில் நிரந்தரமான மஞ்சள் மற்றும் கறுப்புக்கோடுகளை பச்சை குத்தும் முறை மூலம் குத்தித் தன்னைப் புலி மனிதராக மாற்றிக் கொண்டுள்ளார்.

# மிதியடி



சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பதாக எமது நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் நடமாடும் மக்கள் தங்கள் பாதங்களில் மிதியடிகளை அணிந்து கொள்வார்கள். விலங்குகளின் தோல் மற்றும் செயற்கை நார்களினாலான பாதணிகளின் வருகையால் மிதியடிகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன.

இருப்பினும் நவநாகரீக முறை என்ற பெயரில் பழைய பொருட்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அன்று பயன்படுத்தப்பட்ட மிதியடிகள் இப்போது பாவனைக்கு வந்துள்ளன.

இப்படத்தில் காணப்படும் அழகான பாதங்களுக்குச் சொந்தமான பெண் அணிந்திருப்பது சந்தன மரத்தினாலான மிதியடி. தீய சக்திகள் அணுகாமல் தடுக்கும் வல்லமையுள்ள மந்திரிக்கப்பட்ட பட்டு நூல்களால் பின்னப்பட்ட இம்மிதியடி விசேட பூஜைகளின்போது அணியப் பயன்படுகிறது.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து 23.10.2001



டிலக்ஷனா தயாபரன்

அல்வாய் தெற்கைச் சேர்ந்த தயாபரன்-மணிச்செல்வி தம்பதிகளின் செல்வப் புதல்வி டிலக்ஷனா தனது முதலாவது பிறந்த நாளை 23.10.2001 அன்று தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரிய அப்பப்பாமார், பெரிய அம்மம்மாமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், மச்சாள் விபுஷா, அண்ணன்மார், அக்காமார், தங்கை மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் பாதுசந்தி விநாயகர் அருளால் சகல நலமும் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: செல்வன் மாமா (கவின்)